Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 27 புதன்கிழமை (11.07.2012) பக்கங்கள் 20 ஓசை – 284

(03) சுற்றுலாப் பயணிகள் அவதி







அவதூறுக் கலாசாரம் (05)

பொன் விளையும் மண் உரும்பிராய்! (13)



# மருத்துவர் போராட்டத்தை தடுத்து நிறுத்தியது ஏன்?

## விளக்கம் கோருகிறது யாழ்.நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தியர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு யாழ். நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பை மாற்றியமைக்குமாறு கோரி தொடரப்பட்ட வழக்கில் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேராவை மன்றில் விளக்கமளிக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ். போதனா வைத்திய சாலையில் வைத்தியர் தாக்கப்பட்ட விவகாரம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் ஊழல் மற்றும் மோசடி தொடர்பில் வைத்தியர்கள் நடத்த இருந்த ஆர்ப்பாட்டம் நீதிமன்ற உத்தரவின் படி இடைநிறுத்தப்பட்டது.

இந்த இடைக்கால தடை உத்தரவை மாற்றியமைக்குமாறு கோரி யாழ். போதனா வைத்திய சாலையின் மருத்துவர் சங்கத்தினர் தாக்கல் செய்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக

(19)ஆம் பக்கம் பார்க்க

## தாயும், மகளும் சடலமாக மீட்பு

(கிண்ணியா)

கிண்ணியா ஆலங்கேணிப் பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து 55 வயதான தாயொருவரினதும் அவரின் 21 வயதான மகளினதும் சடலங்கள் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. சம்பவத்தில் விஜேராணி மகேந்திரன் மற்றும் மகேந்திரன் ஜனனி ஆகிய இருவரே சடலங்களாக மீட்கப்பட்டவர்களாவர். இவர்களது

(19)ஆம் பக்கம் பார்க்க

## சாரதி அனுமதிப் பத்திரங்களை விரைவாக விநியோகிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்க ளிலிருந்து விண்ணப்பிப்பவர் களுக்குரிய சாரதி அனுமதிப்பத் திரங்கள் அனைத்தும் அநுராதபுரத்திலிருந்து அச்சிட்டு உடனடியாக விநியோகிக்கும் நடவடிக்கையை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இது தொடர்பாக திணைக் களத்தின் ஆணையாளர்

(19)ஆம் பக்கம் பார்க்க

## நிமலரூபனின் மரணம் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சிறைச்சாலையில் நிமலரூபனின் மரணம் தொடர்பாக மீண்டும் பிரேத பரிசோதனை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு அரசியல் கட்சிகள் நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. சிறைச்சாலை அதிகாரிகளால் நிமலரூபன் கொல்லப்பட்டதாக

(19)ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் பிரித்தானிய தூதுவர்

(நெடுந்தீவு)

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோண் றன்கின் நெடுந்தீவு பிரதேசத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக் காலை 9.30 மணியளவில் நெடுந்தீவுக்குச் சென்றார். அவரை நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன், பிரதேச செயலர் ஆ.சிறி, பங்குத்தந்தை எ. அமல்ராஜ் அடிகளார் மற்றும் நெடுந்தீவுக் கடற்படை கட்டளை அதிகாரி எக்கநாயக்க, நெடுந்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி எக்கநாயக்க ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.



பின்னர் இவர் நெடுந்தீவிலுள்ள கடற்படை ஆடை உற்பத்தி நிலையத்திற்கு விஜயம் செய்தார். அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்குச் சென்ற அவர் அங்கு தமது முதல் சந்திப்பை நெடுந்தீவிலுள்ள மதகுருமாருடன் மேற்கொண்டார். அதன்பின்னர் நெடுந்தீவிலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது நெடுந்தீவில் காணப்படும் குறைபாடுகள் சம்பந்தமாகவும் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பது தொடர்பாகவும்,

(19)ஆம் பக்கம் பார்க்க

## வன்னியில் கைவிட்ட வாகனங்களை பெற்றுக்கொள்ள இறுதிச்சந்தர்ப்பம்

(கிளிநொச்சி)

வன்னி இறுதி யுத்தத்தின் போது கைவிடப்பட்ட வாகனங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதன் விபரம் வருமாறு:

வடமாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலின் கீழ் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பராமரித்து வரப்படுகின்ற போரின் போது கைவிடப்பட்டு எடுத்து வரப்பட்ட ஒரு தொகுதி வாகனங்கள் கிளிநகரத்தின் திருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள வாகனப் பேணலகத்தில் தொடர்ந்தும் உரிமை கோரப்படாது இருந்து வருகின்றது. இது தொடர்பில் மாவட்டச் செயலாளராகிய என்னால் ஏற்கனவே பத்திரிகைகள், வானொலிகள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகள், ஏனைய

(19)ஆம் பக்கம் பார்க்க

## அநாகரிக ஆடைக்குத் தடை யாழ்.நீதிமன்றின் முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்ற வளாகத்திற்குள் அநாகரீகமான ஆடைகளை அணிந்து வருவதை நீதிமன்ற நிர்வாகம் தடை செய்துள்ளது. யாழ். நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெறும் போது சிலர் அநாகரீகமான ஆடைகளை அணிந்து வருகின்றனர்.

இதனால் மன்றிற்கான நன்மதிப்பு இழக்கப்பட்டு நீதிமன்றிற்கான மதிப்பும் கௌரவமும் இழிவாக்கும் செயலென கருதுவதால் நாகரீகமான ஆடைகளை அணிந்து வருமாறும் நிர்வாகத்தினர் கட்டளையிட்டுள்ளனர்.

நீதிமன்றில் பல்வேறு வகையான நிறங்கள் மற்றும் ஆடைகள் அணிதல் மற்றும் கையடக்கத் அநாகரிக...

தொலைபேசி உரையாடுதல் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தமது உடைகளில் சிவப்பு மற்றும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட

(19)ஆம் பக்கம் பார்க்க

## பௌத்த தேரர்கள் மாணவர்களுக்கு உதவி

கொழும்பில் இருந்து வருகை தந்த பௌத்த துறவிகள் வேலணை சரஸ்வதி வித்தியாலய மாணவர்களுக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

நேற்று வேலணைக்கு விஜயம் செய்த கொழும்பு நாக விகாரரையின் விகாராதிபதி மற்றும் அதிகாரிகள் வேலணை சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்து 135 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு கொள்கலன் ஒன்றையும் வழங்கி வைத்தனர்.

இதனை யாழ்.மாவட்ட கட்டளை இடும் அதிகாரி மகிந்த ஹத்துருசிங்க, 17ஆவது படைப் பிரிவின் ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு இராணுவ கட்டளை இடும் அதிகாரி லெப்.கேணல் பிறேமவன்ச, 501 ஆவது படைப்பிரிவின் கேணல் சில்வா ஆகியோர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். (85)


## பனைசார் உற்பத்திகளுக்கு சந்தைவாய்ப்பு ‘கார்கில்ஸ்’ நிறுவனத்துடன் ஒப்பந்தம்

பனைசார் உற்பத்திப் பொருட்களை ‘கார்கில்ஸ்’ பூட்சிற்றி ஊடாக விற்பனை செய்வதற்கு அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக 1 மில்லியன் ரூபாவிற்கு பனங்கட்டி விற்பனைக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக ஏனைய பொருட்களையும் விற்பனை செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பனை வளத்தின் ஊடாக 801 வகையான பொருட்களை உற்பத்தி செய்யப்படுவதாகவும் வடபகுதியில் பனம் கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் அவர்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கிலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (02)



# உதவிகளை எதிர்பார்க்கும் நிலைக்கு தமிழ் சமூகம் தள்ளப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

உதவிகளை எதிர்பார்த்து வாழும் நிலைக்கு எமது சமூகம் தள்ளப்பட்டுள்ளது என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்த்திரி அலெனரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.



இந்திய அரசின் நிதியுதவியுடன் மாணவர்கள், சுயதொழில் முயற்சியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி எழிலரசி தலைமையில் நடைபெற்ற போது அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த கால யுத்தத்தினால் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து பல்வேறு இழப்புக்கள் இன்னல்களுடன் வாழ்ந்த எமது மக்கள் மீள்குடியமர்ந்த நிலையில் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாது துர்ப்பாக்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

முப்பது வருட யுத்தத்தினால் நாம் இழந்தவற்றை மூன்று வருட காலத்தில் பூர்த்தி செய்ய முடியாது. இவற்றை நாம் படிப்படியாகவே நிறைவேற்ற முடியும். எனவே இந்திய அரசு இலங்கை அரசிற்கு வழங்கிய உதவிகளில் ஒன்றான பாடசாலை மாணவர்கள். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமுற்ற வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களிடையே தெரிவு செய்யப்பட்டு இத் துவிச்சக்கர வண்டிகள வழங்கப்படுகின்றன.

தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, கல்விச் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்காகவும் இவ் உதவித் திட்டங்களை சரியான வகையில் பயன்படுத்திக கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பயனாளிகளுக்கான துவிச்சக்கர வண்டிகளை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன், ஊர்காவற்றுறைப் பிரதேச சபை தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின ஊர்காவற்றுறைப் பிரதேச அமைப்பாளருமான ஜெய்க்காந்தன் ஆகியோர் வழங்கி வைத்தனர். இதன்போது ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 86 பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

# நாணயம் நிறைந்த ஓட்டோ சாரதி

(வவுனியா)

வவுனியாவில் முச்சக்கர வண்டியொன்றில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணத்தினை முச்சக்கர வண்டிச் சாரதி முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினூடாக வவுனியா பொலிஸாரிடம் நேற்று ஒப்படைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வவுனியா பஸ்தரிப்பிடத்தில் இருந்து தனது சேவையை நிறைவுசெய்து வீட்டிற்குச் சென்ற முச்சக்கர வண்டி சாரதி வி.கிருஷ்ணமூர்த்தி தனது முச்சக்கர வண்டியைத துப்பரவு செய்யும்போது இருக்கைக்கு கீழே இருந்து பணப் பொதியொன்றினைக் கண்டெடுத்துள்ளார்.

இதனை அடுத்து உடனடியாக முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சி.இரவீந்திரனுக்குத் தகவலை வழங்கிவிட்டு நேற்றுக் காலை அப்பணத்தினை முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினூடாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எரிக் பெரேராவிடம் கையளித்துள்ளார்.

இப்பணத்தினை ஒப்படைத்தமைக்காக முச்சக்கர வண்டி சாரதியையும் அதன் சங்கத்தினையும் பாராட்டிய வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முச்சக்கர வண்டி உரிமையாளரின் பொறுப்பு வாய்ந்த செயலை ஏனையோரும் கற்றுக் கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார். (160)

# யாழ். குடாவில் எப்போது நிறைவடையும் கண்ணிவெடி அகற்றும் படலம்

(யாழ்ப்பாணம்)

யாழ.குடாநாட்டில் கடந்த முதலாம் திகதி வரை 87.37 வீதமான பகுதிகளில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் அகற்றப்பட்டிருப்பதாக யாழ். செயலக மிதிவெடி செயற்பாட்டு அலுவலக புள்ளிவிபரமொன்று தெரிவித்துள்ளது.



548 பிரதேசங்களில் இனம் காணப்பட்ட 144 பிரதேசங்களில் இன்னமும் மிதிவெடியகற்றப்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவித்த மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் இதில் 22 பிரதேசங்களைச் சேர்ந்த 1776712 சதுர மீற்றர் பிரதேசத்தில் மிதிவெடியகற்றப்பட்டு வருவதாகவும் எஞ்சிய 22 பிரதேசங்களைச் சேர்ந்த 2673629 சதுர மீற்றர் பகுதியில் மிதிவெடி அகற்றப்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

மிதிவெடியகற்றப்பட்ட இந்தப் பகுதிகளிலிருந்து 119829 மனித எதிர்ப்பு மிதிவெடிகளும், 493 வாகனக் கண்ணிவெடி களும், 134122 வெடிக்காத வெடி பொருட்களும் இதுவரை மீட்கப்பட்டிருப்பதாக அந்தப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எஞ்சியிருக்கும் பகுதிகளிலேயே மிதிவெடி அகற்றும் பணி சவால் மிகுந்ததாக இருப்பதாகவும் இதற்கு மேலும் பல வருடங்கள் பிடிக்கும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ். குடாநாட்டில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த டெனிஸ் மிதிவெடியகற்றும் பணியாளர்கள் நிதி ஒதுக்கீடு பற்றாக்குறை காரணமாக பணியில் இருந்து நிறுத்தப்பட்டிருக்கின்ற அதேவேளை கலோரஸ்ற் நிறுவனத்தின் பணியாளர்களே மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ். கல்வி வலய பாடசாலைகளில் பணிபுரியும் ஆரம்பக் கல்வியில் தொழிற்றகமையுடைய வகுப்பு - I மற்றும் வகுப்பு - II இனைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேவை நீடிப்பில் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று யூலை 20 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.


யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்

## நன்றி கூறுகின்றோம்

கடந்த 07.07.2012 ஆம் திகதி இடம்பெற்ற எமது நிறுவனத்தின் வெள்ளிவிழா திருப்திகரமாக நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய சகலருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. குறிப்பாக கடந்த 11.06.2012 ஆம் திகதி முதல் 18.06.2012 ஆம் திகதி வரையான காலத்தில் இடம்பெற்ற கொடிவாரம் சிறப்பான முறையில் நடந்தேறுவதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிய கௌரவ வடமாகாண ஆளுநர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், போன்றோருக்கும் விசேடமாக எமது ரிக்கற்றுக்களைப் பெற்று நிதியுதவி வழங்கிய தாராள சிந்தையுள்ளவர்களுக்கும் ரிக்கற்றுக்களை விற்பனை செய்து உதவிய எமது அபிமானிகளுக்கும், ஆர்வலர்களுக்கும் சிரமம் பாராது வெள்ளிவிழா தினத்தன்று எம்மால் ஏற்பாடு செயயப்பட்ட சகல விளையாட்டுப் போட்டிகளிலும் ஆர்வமுடன் பங்குபற்றிய எமது நிறுவனப் பயனாளிகளுக்கும் வெள்ளிவிழா தொடர்பான சகல செய்திகளுக்கும், விளம்பரங்களுக்கும் முன்னுரிமை வழங்கி அற்றை இலவசமாகப் பிரசுரித்து உதவிய பத்திரிகை நிறுவனங்களுக்கும் அதற்கு அனுசரணையாக செயற்பட்ட பிரதம ஆசிரியர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

முகாமைத்துவக் குழு
யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம்

(C/1587)



## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

### பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் கீழ்வரும் பதவிக்கு தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

பதவி :- கல்விப் பயிற்சியளிப்பு உத்தியோகத்தர் தரம் 201/05

சம்பளத்திட்டம் :- 12450 - 190 X 10 - 210 X 10 - 16450

(கூ.வே.ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைய இதர படிகள் வழங்கப்படும்)

**கல்வித் தகைமை :-** (அ) கூட்டுறவு ஊழியர் 06 ஆவது சம்பளத்திட்ட பதவியில் ஆகக்குறைந்தது 3 ஆண்டுகால அனுபவம், அல்லது கூட்டுறவு ஊழியர். 07 ஆவது சம்பளத்திட்டப் பதவியில ஆகக்குறைந்தது 6 ஆண்டுகள் கால அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமமான தகைமையொன்றுடன், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஒன்றில் கற்பித்தல் துறையில் 10 ஆண்டுகால அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தர தராதரப்பத்திரம் / க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஒன்றில் கற்பித்தல் துறையில் 12 ஆண்டு கால அனுபவம்.

வயதெல்லை :- 25 - 45

அ) கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.
ஆ) நிறுவனங்களில் கடமைபுரிபவர்கள் நிறுவன தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.
இ) சகல தகமைச் சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்தல் வேண்டும்.
ஈ) கூட்டுறவுப் பயிற்சி, கணினி அறிவு, ஆங்கில அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
உ) தெரிவுசெய்யப்படுபவர் சபையால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
ஊ) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி :-** 26.07.2012

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-**

செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
வீரசிங்கம் கட்டடத்தொகுதி, 2 ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C/1619)

# குடிநீர், மலசல கூடம் இன்றி சுற்றுலாப் பயணிகள் அவலம்

(தீவகம்)

காரைநகரில் உள்ள கசூரினா பீச் பகுதியில் குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதனால அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


கசூரினா கடற்கரை பகுதியில் நாளாந்தம் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வருகை தருவதாகவும், இம்மக்கள் மலசல கூடப் பாவனைக்கோ, குடிப்பதற்கோ தண்ணீர் இல்லாமல் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக சுற்றுலாப் பய ணிகள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் ஆங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற தண்ணீர்த் தாங்கிகளில் மாலை வேளைகளில் அரைவாசிக்கு குறைவான தண்ணீரை காரைநகர் பிரதேச சபையின் தண்ணீர் தாங்கிகள் மூலம் கொண்டு வந்து நிரப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நீரானது குடிப்பதற்கு உகந்ததல்ல எனவும் தெரிய வருவதுடன் ஒரு மாதத்திற்கு முன்னர் சுன்னாகப் பகுதியிலிருந்து குடிப்பதற்கு உகந்த நீர் தாங்கிகள் மூலம் விநியோகிக்கப்பட்டிருந்தும், தற்போது அது நிறுத்தப்பட்டிருப்பதாகவும், தெரியவருகின்றது.

இதேவேளை அப்பகுதியில் மூன்று புதிய மலசல கூடங்கள் அமைக்கப் பட்டு இரண்டு பூட்டப்பட்டு இருப்பதாகவும் தெரியவருகின் றது. இதனால் பயணிகள் மல சல கூட வசதிகள் இல்லாது பெரும் அவதியுறுவதாகவும் தெரிய வருகின்றது. (85)

# கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலய கும்பாபிஷேக விழா



## தர்மத்தின் வழியில் காத்தாய்

அதர்மத்தின் வடிவாய் இங்கு ஆண்டிட்ட
அரக்கர்தம்மை
தர்மத்தின் வழியில் நின்றுஅழித்து நீ
காத்தாயன்றோ
கர்மத்தின் பயனாய்த்துன்பம்பலவிதம்
கௌவிட்டாலும்
சீர்வைகுந்த வாசா நீயும் காத்திடல்
கடனே யன்றோ

-ரிஷிகர்-

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



(தெல்லிப்பழை)

டெங்கு ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு தெல்லிப்பளை பொலிஸாரினால் இடம் பெயர்நதோர் நலன்புரி முகாம்களில் சிரமதானப் பணிகள் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் தெல்லிப்பளை பொலிஸார் வலி வடக்குப் பிரதேச சபை மற்றும் மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலைய மக்களும் இணைந்து முகாம்பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை மேற் கொண்டார்கள்.

இந்தப் பகுதியில் உள்ள பற்றைகள் குப்பைகள அகற்றப் பட்டதுடன் கழிவு நீர் தேங்கும் வாயககால்களும துப்புரவு செய்யப பட்டன.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரெரா காங்கேசன் துறை பொலிஸ் அத்தியட்சகர் காமின் நவரத்தினா தெல்லிப் பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்சி மற்றும் வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவர் கோ.சுகிர்தன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

# குடாநாட்டில் மீண்டும் மலேரியா பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் மிண்டும் மலேரியா பரவும் அபாய நிலமை ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மலேரியா நோய் தடுப்பு வைத்தியதிகாரி பிரிவினால் தெரிவிக்கப்பட்டுளள்து. கடந்த காலங்களில் கட்டுப்பாட்டில் இருந்த இந் நோய் தற்போது ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருபவர்கள் மூலம் பரவத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கூட இத்தகைய மலேரியா நோய் தாக்கததிற்கு உள்ளாகிய ஒருவர் வலி வடக்குப் பகுதியில் இனம் காணபபட்டதாகவும் இவர் ஆபிரிக்க `நாட்டில் இருந்து திரும்பியவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருபவாகள் தம்மை இத்தகைய பரிசோதனைகளுக்கு உள்ளாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியா விவசாயத் திணைக்களத்தால் புதிய வகை மாம்பழங்கள் உற்பத்தி

(வவுனியா)

வவுனியா விவசாயத் திணைககளத்தால் டொம் ஈசிஜி வகை மாம்பழங்கள் உற்பத்தி செய்யபட்டு வெற்றி காணப்பட்டுள்ளதாக வவுனியா விவசாய விரிவாக்கல் பிரதிப்பணிப்பாளர் சகிலாபானு தெரிவித்தார்.

டொம் ஈசிஜி மாமர வகை வருடம் முழுவதும் காய்க்கும் தன்மை கொண்டதாகவும் ஒரு பழத்தின் நிறை 500 கிராமுடையதாகவும் காணப்படும் இதன் விதைகள் மெல்லியதாகவும் நீண்டதாகவும் உள்ளதுடன் தசைப்பிடிப்புள்ளதாகவும் உள்ளது இவை அநுராதபுரம் கெக்கிராவை பகுதிகளில் இருந்து வவுனியாவிற்கு கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு 261 மரக்கன்றுகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன இதன் மூலம் விவசாயிகள் அதிக வருமானத்தை பெற்றுள்ளமையினால் ஏனைய விவசாயிகள் இக்கன்றுகளை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (160)

# அனைவரது பாராட்டையும் பெற்ற உரை ஓவியம் நிகழ்வு

(வவுனியா)

வவுனியா தமிழச் சங்கத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய கலா மண்டபத்தில் இடம்பெற்ற உரை ஓவியம் நிகழ்வு அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளதுடன் வவுனியாவில் சிறந்த கலைப்படைப்புக்களை வெளிக்கொணர உதவியுள்ளதாகவும் வவுனியா மாவட்ட கலை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற உரை ஓவியத்தில் கவிஞரான அ.சிவ பாலசுந்தரன் கல்வியாளர்களான உதயகுமாரன் மற்றும் நிறைமதி எஸ்.எஸ் வாசன் மற்றும் எம். முகுந்தரதன் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

இதன்போது கவிவரிகளில் உரை ஓவியம் நிகழ்வுகளை நடத்தியதுடன் புதுமையான சில கவிவரிகளும் இலக்கியங்களுடன் தற்போதைய பாடல் வரிகள் கொண்டுள்ள தொடர்புகள் பற்றியும் எடுத்தியம்பப் பட்டிருந்தது.

எதிர்வரும் காலங்களிலும் வவுனியா தமிழ்ச் சங்கம் ஞாயிறுக்கிழமைகளில் பலவாறாக இலககிய நிகழ்வுக்ளை நடத்தவுள்ளதாக வவுனியா தமிழச் சங்கத்தின் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் தெரிவித்துள்ளார். (160)

# உளநல தின கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச உளநலத்தினத்தை அனுஷ்டிப்பது சம்மத்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை வடமாகாண கல்வித்திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளது.


மருதனார் மடத்தில் உள்ள வடமாகாண கல்வித்திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர்களையும், சிரேஷ்ட வழிகாட்டல் ஆசிரியர்களையும் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்குமாறு வடமாகாண மேலதிகக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மின்சாரம் சீராகக் கிடைக்குமா? உயர்தரமாணவர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் தொடரும் மின் வெட்டினால் பாடசாலை மாணவாகள் அதிக விரக்திக்கு உள்ளாகியுள்ளார்கள். க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆரம்பிப்பதற்கு இன்னும் மூன்று வாரங்களே உள்ள நிலையில் மின் சார விநியோகம் யாழ். குடா நாட்டில் பரவலாக பகல் வேளையிலும் இரவு வேளையிலும் கூட தொடர்ந்து வெட்டப்படும் நிலமை தொடர் கதையாகவே காணப்படுகின்றது.

மின்சாரப் பணிகள் பகலுடன் நிறைவு பெறும் என அறிவிக்கப்பட்டாலும் பகல் வேளைகளில் மின்சாரம் வழங்கும் செயறபாடுகள் மாலை 6.30 மணிக்கு பின்னர் வழங்கப்படும் நிலமையே காணப்படுகின்றது. க.பொ.த உயர்தரப் பரீட்சை நெருங்கும் நிலையிலேனும் மின்சாரத்தை சீரான முறையில் வழங்க நடவடிக்கையெடுக்க வேண்டும் என மாணவர்கள் பெரும் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள்.



யப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் யாழ்.போத னாவைத்திய சாலையில் நிர்மாணிக்கப் பட்டு வந்த நான்கு மாடிக் கட்டடத் தொகுதியின் நிர்மாணப்பணிகள் முடிவடைந்தமையைத தொடர்ந்து அங்கு பொருத் தப்பட்டிருந்த பிரமாண் டமான பாரம்தூக்கி அகற்றப்படுவதனைக் காணலாம். (பா)

# நாளை மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குளாய் கிழக்கு, கொக்குளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, மத்தி, தெற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைத்தவிர்ந்த ஏனைய கிராமசேவகர் பிரிவுகளைச்சேர்ந்த மக்கள் நாளை 12ஆம் திகதி வியாழக்கிழமை மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேறும் மக்கள் குடியேறுவதற்குரிய ஆயத்தங்களுடன் 12ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு வருகைதருமாறும், வரும்பொழுது அவரவர்கள் தாம் தங்கியிருந்த கிராமஅலுவலர்களிடம் கடிதம் பெற்று, அதில் உதவி அரசாங்க அதிபரின் ஒப்பம் பெற்று உறுதிப்படுத்திக் கொண்டுவருமாறும் அரச அதிபர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (04)

அவரவர் விதி அவரவர் கையிலேயே இருக்கிறது.
- விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, தொலைநகல் : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## அரசாங்கத்தைத் தோற்கடிப்பதே இலக்கு!

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதற்காகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். தமிழர்களின் காதில் அவர்கள் சுற்றும் பூப்பந்துகளில் இதுவும் ஒரு மெகா வகை!

கூட்டமைப்பை வெல்ல வைப்பதற்கு வாக்களிக்கும்படி மக்களைக் கேட்டால், வென்று மக்களுக்கு என்ன செய்யப் போகின்றோம் என்கிற கட்சி அரசியல் திட்டத்தை சொல்ல வேண்டி வரும்; பிறகு அதையெல்லாம் செய்ய வேண்டி வரும். பதிலாக, அரசாங்கம் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதற்காகவே போட்டியிடுகிறோம் என்றால் அத்துடன் இலட்சியம் முடிந்துவிடும். அதற்குமேல் என்ன செய்யப் போகிறீர்கள் என்று யாரும் கேட்க முடியாது. அதுதான் தோற்கடித்தாகி விட்டதே... அப்புக்காத்து மூளைகளல்லவா!

“அரசாங்கம் வென்றால் தமிழர்களுக்குக் கூடாது. ஆகவே நாங்கள் வென்றால் தமிழர்களுக்கு நல்லது.” என்ன ஒரு சிம்பிளான கணக்கு! அரசாங்கத்தை இந்தத் தேர்தலில் தோற்கடித்து விட்டால் தமிழர்கள் தப்பிவிடுவார்கள். போடு புள்ளடி வீட்டுக்கு நேரே, அவ்வளவுதான்!

இந்தத் தேர்தலிலும் இவர்கள் வென்றால் என்ன நல்லது? இதற்கு முந்தியும் தேர்தல்களில் வென்று நடந்த நல்லதுகள் என்னென்ன? அரசாங்கத்தை தோற்கடித்த பிறகு என்ன செய்வது? மற்றுமொரு முறை அரசாங்கத்தைத் தோற்கடிக்க அடுத்த தேர்தலுக்காகக் காத்திருப்பதுதானா?

தேர்தலுக்காக எதையும் சொல்வார்கள், எதையும் செய்வார்களே தவிர, மக்களுக்காக எதையும் செய்ததில்லை இவர்கள். ஒவ்வொரு தேர்தலுக்கும் இவர்கள் உருவேற்றி விடும் உணர்ச்சிகரக் கோஷங்கள் இதுவரை மக்களை அழித்து வந்திருக்கிறதே தவிர, இவர்கள் அந்தக் கொள்கைக்கு விசுவாசமாகவும் எப்போதும் நடந்து கொண்டதில்லை. அதனால் விளைந்த மக்கள் அவலங்களுக்குப் பொறுப்புக் கூறியதுமில்லை.

1977–ல் தேர்தலுக்காக இவர்கள் கிளப்பியதே தனிநாட்டுக் கோஷமும். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பயன்படுத்தினார்களேயன்றி அதற்கு விசுவாசமாக இருக்கவில்லை. நாலே ஆண்டுகளில், 1981–ல் மாவட்டசபைத் தேர்தல் என்றவுடன் அதிலும் போட்டியிட்டார்கள். இப்போதும் வடக்கு கிழக்கு இணைக்காமல் பேச்சுவார்த்தையே கிடையாது என்று சொல்லிக் கொண்டே, கிழக்கைத் தனியாகத் தந்தாலும் சீற்றில் ஏறத் தயார் என்று போட்டிக்கு இறங்கி விட்டார்கள்.

இவர்களது படுமோசமான சந்தர்ப்பவாத அரசியல்தான் ஈழப்போராட்டத்தின் சீரழிவுக்கும் மக்களின் பாடழிவுக்கும் காரணமானது என்பது இன்று அம்பலமாக்கப்பட்டுவிட்ட ஒன்று. ஈழத்தைக் கோரி இளைஞர்களை உசுப்பி விட்டவர்கள், அந்த இளைஞர்களை ஒரு சக்தியாகத் திரட்டி முற்போக்கான ஒரு மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க முடியாத சுயநலமிகளும் வங்குரோத்துகளுமே தாங்கள் என்பதைத்தான் வரலாற்றில் நிரூபித்தார்கள்.

இன்றும் இவர்களது உணர்ச்சிகரக் கோஷங்களை நம்பி, அவலங்களிலிருந்து மீண்டுவிட முடியாத அரசியல் முட்டுச்சந்திலேயே மக்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். பேசத் தெரியவில்லை, போராடத் தெரியவில்லை, வெளிநாடுகளையும் இவர்கள் விளங்கி நடப்பதாய் இல்லை. அதனால், நமது மக்களுக்கான தீர்வின் வழியை திட்டமாக வைக்க இவர்களுக்கு முடியவில்லை. ஆகவே, அரசாங்கத்தைத் தோற்கடித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லியபடி இவர்கள் தேர்தல்களில் தவறாமல் நின்று கொண்டிருக்கிறார்கள்!

– ஆசிரியர்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

தமது அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தம்பலகாமத்தில் நேற்று முன்தினம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட மேலும் சில சம்பவங்கள் அண்மைக் காலமாக பதிவாகியுள்ளதென சங்கத்தின் செயலாளர் செனரத் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

தம்பலகாமத்தில் வீடொன்றைச் சோதனைக்குட்படுத்தச் சென்ற அதிகாரி நேறறையதினம் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாக கூறிய அவர், அண்மையில் கல்கமுவ பகுதியில் டெங்கு ஒழிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் இலக்காகி வருவதாகவும் இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான விசேட செயற்திட்டமொன்றை உடனடியாக அமுல்படுத்துமாறு அரசாங்கத்திடம் அந்தச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவிக்கையில், தேசிய தேவைபாடாக கருதப்படுகின்ற டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அரச அதிகாரி தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்கது.

அனைத்து அரச ஊழியர்களுக்கும் அன்றாட நடவடிக்கைகளின் போது பாதுகாப்பை வழங்குவதற்கான இயலுமை இல்லாத போதிலும், விசேட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது அதற்கான பாதுகாப்பை வழங்குவதற்கு பொலிஸ் திணைக்களம் ஒருபோதும் பின் வாங்காது.

விசேட சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதற்கு முன்னர் அது தொடர்பாக அந்தப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து தேவையான பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

தம்பலகாமம் பகுதி வீடொன்றுக்கு சென்று தெளிவூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு திரும்பியபோது, 52 வயதான மொஹமட் .:.பலீல் என்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகரை அங்கிருந்த ஒருவர் உலக்கையால் தாக்கி கொலை செய்துள்ளார் என்றார்.

## நலன்புரி முகாமில் 1700 குடும்பங்கள்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் நலன்புரி முகாமில் இன்னமும் தங்கவைக்கப்பட்டுள்ள 1700 குடும்பங்களையும் கடந்த ஜூன மாதம் 30 ஆம் திகதிக்குள் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும் இதுவரையில் அம் மக்கள் மீள் குடியேற்றப்படாதுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய நடாளுமன்றக் குழு, மெனிக்பாம் முகாமுக்கு சென்றிருந்த போது, அங்குள்ள மக்களை ஜூன் 30இற்குள் தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

தங்களது சொந்த இடங்களில் இன்னமும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாமையினால் தங்களை மீள்குடியேற்ற முடியாதுள்ளதாக உரிய அதிகாரிகள் தெரிவித்ததாக மெனிக்பாம் முகாமிலுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

## தமிழக மீனவர்கள் பத்து பேர் விடுதலை

(மன்னார்)

மன்னார் நீதவான் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 10 பேரும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் நேற்று மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய குறித்த மீன்வர்கள் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக தமிழகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். தலைமன்னார் கடற்பரப்பில் குறித்த மீனவர்கள் 10 பேர் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழக மீனவர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனத் தமிழகத்தின் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சடலங்களை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் இரண்டு உரிமைகோரப்படாத சடலங்களையும் உரியவர்கள் பொறுப்பேற்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு உள்ள சடலங்கள் இரண்டையும் ஒருவாரத்திற்குள் உரியவர்கள் பொறுப்பெடுக்காதவிடத்து அவை அரச செலவில் அடக்கம் செய்யப்படவுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.கோப்பாய் வைத்தியசாலையில் கடந்த 22 ஆம் திகதி உயிரிழந்த எஸ்.மாடசாமி (வயது-50) இம்மாதம் 06 ஆம் திகதி உயிரிழந்த நுவரேலியாவைச் சேர்ந்த பி.விஜயகுமார் (வயது-41) ஆகிய இரு சடங்களே யாழ்.போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## துமிந்தசில்வாவை பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

உடனடியாக கைது செய்யும்படி நீதிமன்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் தற்போதைய சுகாதார நிலைமை தொடர்பான சரியான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூருக்குச் சென்று அவரை நேரில் பரிசோதித்து அறிக்கை பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் குற்றத்தடுப்புத் திணைக்களத்திற்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றத் தடுப்புத் திணைக்களம் சார்பில் நீதிமன்றில் ஆஜரான பதில் பொலிஸ் அதிகாரி ஷானி அபேசேகரவிற்கு நீதவான் இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

துமிந்த சில்வாவின் சுகாதார நிலை குறித்து பலரும் பலவாறு கருத்து வெளியிட்டு வரும் நிலையில் அவருடைய சுகாதார நிலை குறித்த உண்மையான அறிக்கை இதுவரை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை என பாதிககப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்தக் கொலை வழக்குடன் தொடர்புபட்டதாக கைது செய்யப்பட்டுள்ள 18 சந்தேகநபர்கள் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புடன் நேற்று நீதிமன்றிற்கு அழைத்துவரப்பட்டனர்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கப்பெறவில்லை என குற்றத் தடுப்புத் திணைக்களத்தினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு வைக்கப்பட்டுள்ளது.


பக்கங்கள்: இருபத்துஎட்டு + 6

உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 018

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 28 புதன்கிழமை (14.12.2011)

யாழ்ப்பாணத்தில் ஊடக அடக்குமுறை உண்மைகளை வெளியிட்டால் ஆபத்து

வடக்கில் அரசியல் செல்வாக்கு காரணமாக ஊடக சுதந்திரத்தில் நீதித்துறை தலையீடு

சபையில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14 வடக்கில் அரசியல் செல்வாக்கு காரண மாக ஊடக சுதந்திரத் தில் நீதித்துறை தலை யிடுகிறதா என்ற சந் தேகம் அங்குள்ள பத் திரிகையாளர்கள் மத்தியில் எழுந்துள் ளது. வடக்கில் இந்த நிலை தொடர்ந்தால் ஊடக சுதந்திரம் கேள் விக்குறியாகிவிடலாம். - இவ்வாறு நாடாளு மன்றத்தில் நேற்று யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். வெகுஜன தகவல் தொடர்பாடல் அமைச்சு தொடர்பான நிதியொ துக்கீடு குழுநிலை விவா த த் தி ல் உரையாற்றிய அவர் மேலும் கூறிய

இதுதான் அரசு வழங்கிய சுதந்திரம்

...ில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

உயர்தரப் பெறுபேற்றை வெளியிடுவதற்கு ஒரு வாரம் கெடு

கொழும்பு, டிசெ.14 "ஜி.சீ.ஈ. உயர்தர...

# ஆசீர்வதிக்கப்படும் அவதூறுக் கலாசாரம்!

- ரெங்கன் தேவராஜன், சட்டத்தரணி

ஊடகச் சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்து நீதித் துறைச் செயற்பாட்டில் திரும்பத் திரும்பத் தலையிட்டு வரும் யாழ். ஊடகக் கலாசாரம், இப்போது, ஒரு நீதிபதியின் கருத்தை, ஒரு செய்திக்குத் திருத்தமாகக் கூடப் பிரசுரிக்கத் திமிருடன் தவறியிருக்கிறது. இதனுடன், இந்தத் தறுதலைத்தனத்திற்குத் தர்க்க நியாயம் சொல்லப் புறப்பட்டுள்ள சட்டத் தரணிகளுள் ஒருவர், 'திறந்த நீதிமன்றில் வைத்து நீதிபதியை நான் மன்னித்தேன்' என ஒரு பத்திரிகைக்குப் பேட்டிகொடுக்கும் அளவுக்கு யாழ் நீதித்துறை அவமதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது. நீதித் துறைக்குக் கோபமேற்படுத்திய ஊடகச் செய்தி, நீதித்துறைச் செயற்பாட்டைப் பற்றிய ஒரு நியாயமான விமர்சனமோ அல்லது நீதிவானின் தீர்ப்பைப் பற்றிய ஒரு ஆதார பூர்வமான திறனாய்வோ அல்ல என்பதை இந்த நாட்டாமைகள் தெரிந்துகொள்ளத் தவறியுள்ளது வருத்தத்திற்குரியது. மாறாக, ஒரு நீதிவானை மதிப்பிறக்கம்செய்யும் அயோக்கியத்தனமான அவதூறு அது. உலகளாவிய ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்டஅடிப்படை உரிமைகளுள் ஒன்றான 'கௌரவத்திலிருந்து பாதுகாப்பு' என்ற கடப்பாட்டை ஒரு கற்றறிந்த நீதிபதிக்கே காட்டத் தவறியுள்ள இந்த கற்காலக்காட்டு மிராண்டித் தனத்தை தட்டிக்கேட்க முனைந்த விடயம், இப்போது உச்ச நீதிமன்றம் வரை சென்றுள்ளதாகச் செய்திகள் வருகின்றன. இதுஆக்க பூர்வமான விளைவுகளைத் தருவது அவசியம்.

பணம் கொடுத்து பத்திரிகை வாங்கிப் படிக்கும் ஒரு பாமரனுக்கு, அவனைச் சுற்றிச் சூழ நிகழும் சம்பவங்களை சரிபார்த்து செய்தியாக சொல்லத் தெரியாத தமிழ் ஊடகப் போலிகள் நீதிமன்ற அவமதிப்பை இழைத்தது இது வல்ல முதல் தடவை என்பது இங்கு மிக முக்கியமாகக் கவனம் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதிமன்றில் நடந்த விடயமது. இந்த விடயம், அன்று நான் இன்னொரு வழக்கு விடயமாக நீதிமன்றில் பிரசன்ன மாயிருந்த காரணத்தாலேயே எனக்குத் தெரியவந்திருந்தது என்பது முக்கியம். அன்று, நீதிமன்றிற்கு 'உதயன்' மற்றும் 'யாழ் தினக்குரல்' பத்திரிகை நிருபர்களை வரவழைத்திருந்த நீதிவான், ஒரு வழக்கின் கட்சிக்காரர் ஒருவர் செய்திருந்த முறைப்பாடொன்றைத் தொடர்ந்து, அந்தப் பத்திரிகைகளில் வந்திருந்த ஆதாரமற்ற செய்தியொன்றிற்கு திருத்தம் ஒன்றை வெளியிடுமாறு அந்த நிருபர்களுக்கு கட்டளையிட்டிருந்தார். அந்த ஆதாரமற்ற செய்தியால் பாதிக்கப்பட்டிருந்த கட்சிக் காரரைப் பிரதிநிதிப்படுத்தியிருந்த சட்டத்தரணியும் இந்த விடயத்தை பின்னர் என்னிடம் உறுதிப் படுத்தியிருந்தார். ஆனால், அடுத்த நாளோ அல்லது, எனக்குத் தெரிந்த வரையில் இது வரையிலோ, அந்த நீதிமன்ற கட்டளைப்படி எந்தத் திருத்தமும் 'உதயன்' பத்திரிகையில் வெளிவரவில்லை. மாறாக, மறுநாள் - முதற் பக்க தலைப்புச் செய்தியாக - இன்னொரு நீதிமன்ற அவமதிப்புச் செய்தியை, நீதிமன்றை வாயடைக்கச் செய்யும் வகையில் 'உதயன்' வெளியிட்டிருந்தது. ("யாழ்ப்பாணத்தில் ஊடக அடக்குமுறை: உண்மைகளை வெளியிட்டால் ஆபத்து:வடக்கில் அரசியல் செல்வாக்கு காரணமாக ஊடக சுதந்திரத்தில் நீதித்துறை தலையீடு: சபையில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு" என்ற தலைப்பில் வெளிவந்திருந்த இந்தச் செய்தி, மேலே). இந்தச் செய்தியில் வந்தி ருந்த விடயங்கள் நீதிமன்றை அவமதிப்பிற்கு உள்ளாக்குவன என்ற விவகாரத்திற்கு அப்பால், இந்தப் பேச்சு முழுவதும் பாராளுமன்றத்தில் சரவணபவன் எம்.பி. பேசியதாக வந்திருந்தது ஒரு புரட்டு என்பது எனக்குப் பின்னர் தெரியவந்த போது திகைத்துப் போனேன். பாராளுமன்றத்தில் சரவணபவன் எம்.பி. பேசியிராத விடயங்களை, பாராளுமன்ற சிறப்புரிமையைக் காட்டி நீதித்துறையை வாயடைக்கப் பண்ண, பாராளுமன்றத்தில் பேசியதாக பச்சைப் பொய் சொல்லி வெளியிட்டு 'உதயன்' பத்திரிகை நீதித்துறைக்குச் சொல்லிய செய்தி தெளிவானது: "எவரைப் பற்றியும் எந்த அவதூறையும் நாங்கள் எழுதுவோம். அது எங்களுடைய 'பிறெஸ் ஃபிரீடம்'. எங்களைப் பற்றிஏதும் முறைப்பாடுகள் கிடைத்தால் நீங்கள் வாயை மூடிக்கொண்டிருங்கள். இல்லையென்றால் உங்களைப் பற்றியும் அவதூறுகளை அடுக்குவோம்".

> **ஊடக சுதந்திரமல்ல, ஊடக சுதந்திரத்தின் துஷ்பிரயோகமே இங்கு கேள்விக்குள்ளாகியிருப்பதை இவர்கள் தெரிந்து கொள்ளும் திறனில்லாதது வியப்பிற்குரியதல்ல, ஊடக சுதந்திரத்தின் துஷ்பிரயோகத்தையே நீதித்துறை தடுத்து நிறுத்தி நெறிப்படுத்த வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளதேயன்றி, ஊடக சுதந்திரத்தை அல்ல என்பதை "உதயன்" அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.**

ஒரு நீதிமன்ற கட்டளைக்கு தலைசாய்க்க திமிருடன் தவிர்த்தது மட்டுமன்றி, தங்களுடைய தவறைச் சுட்டிக் காட்டிய தர்மத்திற்காக, நீதித்துறையில் அரசியல் தலையீடு என நீதித்துறைக்குக் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி - அதுவும் பாராளுமன்றத்தில் பேசியதாக நீதித்துறையை வாயடைக்கப் பண்ண பொய் சொல்லி - ரவுடித்தனம் புரிந்த ஒரு ஊடக கலாசாரத்திற்கு எதிராக எமது சமூகம் வாயடைத்துப் போயிருந்தது ஒரு ஜனநாயக அவலமேயன்றி வேறல்ல.

இன்றைய அமைப்பில், மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைப் பாவித்து பாராளுமன் றத்திற்குத் தெரிவு செய்யும் பிரதிநிதிகள் சட்டத்தை ஆக்கி அந்த சட்டங்களை அமுல்படுத்தும் அதிகாரத்தை நீதிமன்றங்களுக்கு வழங்குகிறார்கள். நீதிமன்றின் பிரதான பிரதானி நீதிவானே. நீதிவானை மதிப் பிறக்கம் செய்தால், அந்த நீதிமன்ற தீர்ப்புகளை மக்கள் மரியாதை செய்யார். சட்ட ஆட்சி சீர்குலையும். இது சாதாரண மக்களுக்கு எந்த நன்மையையும் பெற்றுத்தரப் போவதில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் கடைசிப் புகலிடமாக நீதித்துறையே அமைந்திருக்கவேண்டும். ஒரு எல்லைக்குள், அரசிடமிருந்து அடைக்கலம் தரவும் நீதித்துறைக்கே இயலும். இந்நிலையில் நீதித் துறையின் கௌரவத்தை மதிப்பிறக்கம் செய்யும் எந்தச் செயலும் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்பதை சாதாரண மக்களே ஏற்றுக்கொள்வர்.

நீதிச் செயற்பாட்டில் தலையிடும் ஊடகங்களின் தான்தோன்றித்தனத்தை தமிழ்மக்களின் நலனில் அக்கறையுள்ள எவராலும் ஆரோக்கியமானதொன்றாகக் கருத முடியாது. சட்ட ஒழுங்குப் பிரச்சினையாகப் பார்த்துப் பரிகாரம் பெறப்பட வேண்டிய எத்தனையோ விடயங்களை, இந்த ஊடகங்கள், இரண்டு விரல்களுள் ஒன்றைத் தொட்டுப் பார்த்துத் தீர்ப்பு வழங்கி நீதிச் செயற்பாட்டில் திரும்பத் திரும்பத் தலையிட்டு வந்துள்ளதற்கு ஒரு நூறு உதாரணங்கள் உள்ளன. அவதூறுகளைஅஸ்திவாரமாக வைத்து, விற்பனைக்காகக் கற்பனைக் கதைகளைக்கட்டவிழ்த்து விட்டு, அரசியல் ஆதாயத்திற்காக போட்டிக்குச் சாமியாடிக் கொண்டிருக்கும் இந்த ஊடக வியாபாரிகளுக்கு எதிராக இதுவரையில் நீதித்துறை தூங்கிக் கிடந்ததே இன்றைய துர்ப்பாக்கிய நிலைக்கு வித்திட்டுள்ளது.

இந் நிலையில், ஊடக சுதந்திரத்திற்கு ஆபத்து என எமது மக்களுக்கு வகுப்பெடுக்க வெளிக்கிட்டிருக்கிறது 'உதயன்'. இதுபற்றி இரண்டு தினங்களுக்கு முந்தி - 7ஆம் திகதி இல் - வந்திருந்த 'உதயன்' பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தில் வந்துள்ள விடயங்கள் கொடுப்புக்குள் சிரிப்பை வரவழைப்பவை. ஊடக சுதந்திரமல்ல, ஊடக சுதந்திரத்தின் துஷ்பிரயோகமே இங்கு கேள்விக்குள்ளாகியிருப்பதை இவர்கள் தெரிந்து கொள்ளும் திறனில்லாததுவியப்பிற்குரியதல்ல, ஊடக சுதந்திரத்தின் துஷ்பிரயோகத்தையே நீதித்துறை தடுத்து நிறுத்தி நெறிப்படுத்த வேண்டுமென கோரிக்கை எழுந் துள்ளதேயன்றி, ஊடக சுதந்திரத்தை அல்ல என்பதை 'உதயன்' அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

இதனுடன், ஊடகத்துறை சனநாயகத்தின் ஒரு தூண் எனவும் இந்தத் தலையங்கத்தில் பாடம் படிப்பிக்க முயற்சிக்கிறது 'உதயன்'. சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்பவர்கள் எவ்வாறு சனநாயகத்தின் ஒரு இருக்கமுடியும் என்பதை 'உதயன்' தயவு செய்து எமது மக்களுக்கு சொல்லித்தர வேண்டும்.

ஊடக சுதந்திரம் என்பது ஊடகவியலாளர்களுக்கு மட்டுமுள்ள ஏகபோக உரிமை என்ற கருத்து கேலிக்குரியது. ஊடக சுதந்திரம் என்பது ஊடகநிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் சம்பந்தமானது மட்டுமன்றி அந்த ஊடகங்கள் சேவிக்கும் சகல வாசகர்கள், இதர பொதுமக்கள் மற்றும் மத ஸ்தாபனங்கள், பொது நிறுவனங்கள் என அனைவருக்குமுள்ள உரிமைகளையும் உள்ளடக்கியது. அத்துடன், இதர சுதந்திரங்கள் போல இந்த ஊடக சுதந்திரத்திற்கும் சில கட்டுப்பாடுகள் உண்டு என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இந்தக் கட்டுப்பாடுகளை உறுதி செய்வதற்கே ஊடகவியலாளர்களுக்கு ஒரு ஒழுக்கக் கோவை அவசியமாகிறது. பொதுவாக உலகளாவிய ஊடகவியலாளர்களின் ஒழுக்கக் கோவைகள் அனைத்துமே, உண்மைச் செய்திகளைப் பிரசுரித்தல், செய்திகளைச்சரிபார்த்துப் பிரசுரித்தல், தெரிவிக்கப்படும் செய்திகளின் இலக்குகளில் தெளிவாக இருத்தல்,பக்கச்சார்பின்றி செய்திகளைப் பிரசுரித்தல், நேர்மையாகச் செய்திகளைப் பிரசுரித்தல் மற்றும் பொதுமக்களுக்குப் பொறுப்பாகச் செய்திகளைப் பிரசுரித்தல் ஆகிய விடயங்களில் ஒருமித்த கருத்தையே கொண்டுள்ளன. ஆனால் எமது ஊடகவியலாளர்கள் பலரிடம் இந்தஒழுக்கம் எவையுமே இல்லையென்பதுடன், இவர்கள் எவருமே இதுவரையில் இதைப்பற்றி அலட்டிக் கொண்டதாகத்தெரியவரவில்லையென்பதும் கவலைக்குரியதொரு உண்மை. (17ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாணசபைத் தேர்தல்கள் வெளிப்படையானதாக அமைய வேண்டும்



(கொழும்பு)

வட மாகாணசபைத் தேர்தல்கள் வெளிப்படைத்தன்மையுடையதாகவும், மிகச் சரியானதாகவும் அமைய வேண்டுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமளவில் நியாயமான முறையில் வடக்கில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தக் கூடிய சாத்தியம் ஏற்படும்.

வடக்கில் நடைபெறும் முதலாவது மாகாணசபைத் தேர்தல்மிகவும் சிறந்த முறையில் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல்களை நடாத்தி குற்றச்சாட்டுக்களை சுமக்க நாம் தயாரில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் தேர்தல்களை நடாத்த வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவும் விரும்புகின்றார்.

தேர்தல்களை நடாத்தத் தேவையான சூழ்நிலையை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இடம்பெயர்ந்தமக்களில் 95 வீதமானவர்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். எவ்வாறெனினும், அதற்கு முன்னர் இடம்பெயர்ந்த மூன்று இன சமூகங்களையும் சேர்ந்த மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படவில்லை.

தேர்தல்களை நடாத்தத் தேவையான சூழ் நிலையை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இல்லையென்றால், இடம் பெயர் மக்களின் வாக்குரிமையை அரசாங்கம் முடக் கியுள்ளதாக குற்றம் சுமத்தப்படும்.

கடந்த மூன்று தசாப்த காலமாக வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுககப்பட்டிருந்தது.

சகல அரசியல் கட்சிகளும் நியாயமான முறையில் பிரச்சாரங்களை மேற்கொள்ளக் கூடிய ஓர் பின்னணியை உருவாக்க வேண்டியது அவசியமானது.

உரிய காலத்தில் தேர்தல்களை நடாத்துவது மிகவும்அவசியமானது என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

தமது விவசாய நிலங்களுக்கு நீரைப் பெற்றுத்தருமாறு கோரி பொலன்னறுவை பகுதி விவசாயிகள் லேக்வி முச்சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பராக்கிரம சமுத்திரத்தில் போதுமான அளவு நீர் உள்ள போதிலும் தமது பயிர் நிலங்களுக்கு நீர் உரியமுறையில் கிடைப்பதில்லை என அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியில் பாரியளவு வாகன நெரிசல் ஏற்பட்டது.

# கூட்டமைப்புடன் முஸ்லிம் கட்சிகள் இணைந்து போட்டியிடக்கூடாது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் கட்சிகள் இணைந்து போட்டியிடக் கூடாது என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்தவொரு முஸ்லிம் அரசியல் கட்சியும் இணைந்து போட்டியிடக் கூடாது என அகில இலங்கைமுஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எல்.ஏ.எம்.அஷ்ரப் ஒருபோதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடமாட்டார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, முஸ்லிம் மக்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் கூட்டணி சேரும் கட்சிக்கு ஆதரவளிக்க மாட்டார்கள்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் ஏதேனும் இரகசிய இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அவ்வாறு இரகசிய இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தால் அது முஸ்லிம் மக்களின் நன்மைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்காது. அது வெறும் அரசியல் வ்ாதிகளுக்கு நன்மை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெண்கள் அமைப்பு கண்டனம்




(கொழும்பு)

சிறார்கள் மீதான துஷ்பிரயோகங்கள் நிறுத்தப்படுவதற்கு அதிகாரத்திலுள்ளோர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு குற்றம்சுமத்தியுள்ளது.

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்னாள் நேற்று மாலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது இந்த பெண்கள் தலைவி சமன்மலி குணசிங்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார். நாட்டில் 90 நிமிடங்களுக்கு ஒரு சிறுவன், அல்லது சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

குற்றவாளிகளை அரசாங்கம் பாதுகாப்பதால் இவ்வாறான குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்வதாக அவர் சுட்டிக்காட்டினார். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் குற்றவாளிகள் நாட்டுக்குத் தேவையில்லை என்று கோஷமெழுப்பினர்.

# மண் சரிவு அபாயம்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டு சீரற்ற காலநிலை காரணமாக பல பகுதிகளில் கடும் காற்று வீசியுள்ளது.

இதேவேளை கண்டி, நுவரெலிய, கேகாலை பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது

இதனிடையே, ஹட்டன் - நுவரெலிய பிரதான வீதியின் குடாஓய குப்பைமேட்டுப் பகுதி வீதியின் அருகில் நேற்று அதிகாலை மண்சரிவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், அது தற்போது சீராக்கப்பட்டு போக்குவரத்துகள் இயல்புக்கு திரும்பியுள்ளன.

இதேவேளை மேல், சபரமுவ, தென் மற்றும் மத்திய மாகாணத்தில் இன்று அதிக மழை வீழ்ச்சி நிலவும் என வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

# மனிதாபிமானமற்ற பகிடிவதை மாணவிகள் இருவர் விளக்கமறியலில்

(கொழும்பு)

றுகுணு பல்கலைக்கழகத்தில் புதிதாக இணைந்த மாணவி ஒருவர் மனிதாபிமானமற்ற முறையில பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தின் சந்தேகநபர் களான இரண்டாம் ஆண்டு மாணவிகள் இருவரும் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது கருத்து வெளியிட்ட மாத்தறை பிரதம நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான உதேஷ் ரணதுங்க சந்தேகநபர்களான மாணவிகளுக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றத்திற்கு இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்பிரகாரம் சந்தேகநபர்களான இரண்டு மாணவிகளும் இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி புதிய மாணவி மனிதாபிமானமற்ற முறையில் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு மாணவிகளுக்கும் எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# பலத்த காற்று வீசும்

(கொழும்பு)

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காற்று சூழ்நிலை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளிலும் சூழவுள்ள கடற்பகுதிகளிலும் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டின் வடமேல் மற்றும் மேல் மாகாணங்களில் கடல் கொந்தளிப்புடன் காணப்படும் எனவும், மீனவர்கள் கடலுக்குச் செல்லவேண்டாம் எனவும் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் எனவும் மககள் அவதானத்துடன் இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# விவசாய உத்தியோகத்தர்களின் மனு விவாதம் இன்று

(கொழும்பு)

நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் என்னும் ஆளணி சேவையினுள் தம்மை உள்ளீர்க்க வழி செய்யும் சுற்றறிக்கைக்கு எதிராக விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர்களினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு விசாரிக்கத்தக்கதாவென தீர்மானிப்பது தொடர்பான விவாதம் இன்று நடைபெறவுள்ளது.

விவசாய மேற்பார்வையாளராக சேர்க்கப்பட்ட தாம் விவசாய அல்லது விஞ்ஞான பட்டதாரிகள் என்றும் 10 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியுள்ள தாம் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்களாக உள்வாங்கப்பட்டால் தமது பதவிப் பெயர் மாறிவிடும். தம்மால் மட்டுப்படுத்திய விவசாய சேவை போட்டிப் பரீட்சைக்கு தோற்ற முடியாது போகும் எனவும் தமது கல்விக்கும் தொழிலுக்கும் தொடர்பு இல்லாது போய்விடுமென மனுவில் கூறியுள்ளனர்.

எனவே இச்சேவைக்கான பிரமாணக்குறிப்பு செல்லுபடி யற்றதென பிரகடனம் செய்யுமாறு மனுதாரர்கள் கேட்டுள்ளனர்.

# நீரேந்துப் பகுதிகளில் கடும் மழைப் பொழிவு

(கொழும்பு)

மலையகத்தின் நீரோந்துப் பகுதிகளில் தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது.

இந்த நிலையில் கெனியொன் மற்றும் லக்ஸபான ஆகிய நீர்த்தேக்கங்களின் வான கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக பொல்பிட்டிய முதல் கெனியோன் வரையுள்ள ஆற்றங்கரையோரங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என இடர்முகாமைத்துவ நிலையத்தின் நுவரெலியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் எரந்தன ஹேமவர்த்தன தெரிவித்துள்ளார்.

நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதால் கிளை ஆறுகளின் நீர் மட்டம் சடுதியாக அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை காசல்ரீ, மவுசாகலை, விமலசுரேந்திர, பொல்பிட்டிய ஆகிய பகுதிகளில் தொடர்ந்தும் மழை பெய்து வருகிறது.

# கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபைகள்

## ஜனநாயக முறைப்படி தெரிவாக வேண்டும்

கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் சபைகள் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட வேண்டும் அவை எவ்வித அரசியல் தலையீடுகளுமற்ற அரசியல் நலன் சார்ந்த கொள்கைகளுக்கு அப்பாற் பட்டதாக அமைய வேண்டும். என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தினை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

கூட்டுறவென்பது மக்களுக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகவே இதை மக்களே பலப்படுத்த வேண்டும் ஆனால் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக இயக்குநர் சபைகளோ நிர்வாகிகளோ நிர்வாகத்தில் அங்கம்வகிக்க முடியாது என்ற ஜனநாயகக் கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும். மேலும் யுத்த காலத்தில். நியமண முறையில் உருவாக்கப்பட்ட இயக்குநர் சபைகள் செயற்பட்டமையென்பது அன்றைய சூழலில் பொருந்தியிருப்பினும் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு முன்று வருடங்களை எட்டு கின்ற நிலையில் தொடர்ந்தும் அவ்வாறான செயற்பாட்டையே கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டிருக்கின்றமையானது கூட்டுறவுக்கொள்கைக்கு பொருத்த மற்றது என்றார்.



இதேவேளை கிளாலியில குறித்த சங்கத்தின் விற்பனைக்கிளையினை திறந்துவைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் மக்களுக்கு நிறைவான சேவையை வழங்க கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவேண்டுமெனவும் குறிப்பிட்டார் அத் தோடு கிளாலிப்பகுதிக்கு மின்சாரத்தினை விரைவாக வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அப்பகுதிக்கான பிரதான வீதியினைகுறுகிய காலத்திற்குள் புனரமைகக் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வுகளில் பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தலைவர் மார்க்கண்டு பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் கௌரவ உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் தியாகராசா சுந்தரலிங்கம் ஆகியோரும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையானர் தவராசா பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன் பிரதேச சபையின் செயலாளர் சிவப்பிரகாசம் மீள் எழுச்சி மற்றும் துரித மீள்எழுச்சித் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் விஜயகிருஸ்ணன் பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் பொது முகாமையாளர் சத்தியலீலா வைத்திய அதிகாரி மைதிலி பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் இராசரத்தினம். முன்னாள் முகாமையாளர் தருமராசா ஆகியோரும் மற்றும் சங்கத்தின் பணியாளர்கள் அரச உத்தியோகஸ்த்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மகா கும்பாபிஷேகம்

மறவன்புலவு கைதடி நாவற்குழி கலையாபரணக் கோட்டை அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத வள்ளி வேலவன் திருக்கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா பஞ்சகுண்ட பட்ச மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணி முதல் 10.15 வரையிலான சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

13ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம், மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

## ஆக்கங்கள் கோரல்

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி சஞ்சிகை ஒன்று வெளியிடப் படவுள்ளது.

முதியோர்களின் ஆக்கங்களுடன் வெளிவரவுள்ள இச்சஞ்சிகைக்கு அவ்வவ் பிரதேசங்களில் உள்ள முதியோர் அமைப்புகளிடம் இருந்து ஆக்கங்களைப் பெற்று இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## பொது அறிவுப் போட்டி முடிவுகள்

சர்வதேச மது மற்றும் புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு நல்லூர் வடக்கு சமுர்த்திச் செயலணியினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டி முடிவுகள் நல்லூர் பிரதேச செயலர் முன்னிலையில் இடம் பெற்ற குலுக்கல் மூலம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

முதல் ஐந்து இடங்களையும் பெற்ற பரிசுக்குரிய அதிஷ்டசாலிகளின் விபரம் பின்வருமாறு,

1 ஆம் பரிசு வி.கோபிகா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), 45/9 பூநாறி லேன், கொக்குவில மேற்கு, கொக்குவில்.

2 ஆம் பரிசு வினுசியா பஞ்சலிங்கம் (யா/இந்து மகளிர் கல்லூரி), 33/4 5 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு க.கஜன் (யா/நல்லூர் ஸ்தான சி.சி தக பாடசாலை) 36, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

4 ஆம் பரிசு ச.கிரிஷா (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி) 30/1 வைரவர் கோவில் வீதி, கடனாவடி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

5 ஆம் இடம் சிவநேசன் ரிஷாயினி (யா/இந்து மகளிர் கல்லூரி) பெரியபுலம் சுன்னாகம்.

வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கான பரிசுகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக ஏற்றபாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (26)

## பரமர் சங்கமம்



“புயல், யுத்தம், ஆழிப் பேரலை போன்ற இன்னோரன்ன இடர்பாடுகளின் மத்தியில் அகப்பட்டு அனுபவிப்பதானது; வார்த்தைகளில் கொண்டுவரக் கூடிய அனுபவங்களல்ல.

அதற்கு பின்பாக ஏற்படக் கூடிய அமைதியை அனுபவிப்பதற்கு அந்தப் பிடிகளிலிருந்து மீண்டிருந்தால் மட்டுமே முடியும்.

வடக்கு, கிழக்கு மக்கள் கடந்துபோன யுத்தம் ஆழிப்பேரலை, புயல் ஆகியவற்றுள் மூன்று தசாப்த காலங்கள் அனுபவித்து மூன்றாண்டு கூட முழுமையாய் முடிய முன்பாக அபிவிருத்திப் போருக்கு முகம் கொடுத்து கஸ்டங்களை அனுபவிக்க நேர்ந்துள்ளது.

வீதிகளை அகலிக்கும் பணிகள் குடா நாட்டில் முடுக்கி விடப் பட்டுள்ளது. இதனால் செப்பனிடப்பட்ட வீதிகளில் சொகுசு போக்கு வரத்து நடத்துவதற்கு அனுபவிக்கும் கஸ்டங்களோ சொல்லொணா.

ஒரே வேளையில் பிரதான வீதி காங்கேசன் துறை வீதி, பருத்தித்துறை வீதி, பலாலி வீதி என்று நான்கு பக்கங்களிலும் பள்ளங்கள் தோண்டி கற்களையும், மண்ணையும் குவித்துப் போட்டு வீதி மறிப்புக்கள் நடத்தப்படுகின்றன.

இதேவேளை நகரப் பகுதியில் வீதிகளை மறித்து இருபக்கமும் அமைந்துள்ள தரைக் கடைகள் முதல் மாடிக் கட்டடங்கள் வரை உடைத்துக் கொட்டப்படுகின்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றுக்கு இடையே தான் தினமும் பயணித்து அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோ வருவாய்க்கான தொழில் துறைகளைப் பார்க்க வேண்டிய கருமங்களையோ நிறைவேற்ற வேண்டி அமைகிறது.

அத்துடன் வீதி அகலிப்பை மையப்படுத்தி மின்சாரமும் பகல் வேளைகளில் முற்றாக இடைநிறுத்தப்படுகிறது. மின்சாரம் இன்மையால் பாதிக்கப்படுகின்றவை. பட்டியலிட்டால் நீண்டு போகிறது.

நகரப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் முதற்கொண்டு அத்தியாவசிய பல வேலைகள் ஸ்தம்பிதம் அடைய நேர்கிறது. இவையெல்லாம் எதற்காக?

மக்களின் பெருக்கம், வாகனங்களின் அதிகரிப்புக்கு ஈடு கொடுக்கப் போதுமானவையாக வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கம் என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாதல்லவா?

“கரணம் தப்பினால் மரணம்” என்னும் சாகசம் காட்டி உழைத்து வயிற்றை நிரப்பிக் கொள்கின்ற ‘சர்க்கஸ்’ காரனைப் போன்று; கஸ்டப்பட்டு கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்தும் மக்களுக்குக் கிடைக்கும் அற்பசொற்ப மகிழ்ச்சி கிடைக்கும் விடிவுக்காகத் தானே இவ்விளவத்தையும் அனுபவிக்க நேர்கின்றது.

“சர்ணேற முளம் சறுக்கும்” மனித வாழ்வு தான் இல்லையே பின்ன; புயலுக்குப் பின் அமைதி எண்டாலும் தகும் சொல்லுங்க பாப்பம்....

## வன்னிப் பட்டதாரிகள் 717 பேருக்கு நியமனம் வழங்கல்

(வவுனியா)

வன்னிப்பிரதேசமான வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த 717 பட்டதாரி பயிலுனர்களுக்கு நேற்று முன்தினம் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் வைத்து பட்டதாரி பயிலுனர் நியமனங்கள் வழங்கப்பட்டது.

வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் வவுனியாவை சேர்ந்த 326 பட்டதாரிகளுக்கும் முல்லைத்தீவைச் சேர்ந்த 137 பட்டதாரிகளுக்கும் மன்னாரை சேர்ந்த 254 பட்டதாரிகளுக்கும் இந்நியமனம் வழங்கப்பட்டது.

இந்நியமனமானது 6 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலானது. இவர்களுக்கான வேதனமாக மாதாந்தம் பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ்பாருக், ஜனாதிபதியின் இணைப்பாளர்கள், மூன்று மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், வவுனியா நகரசபை உறுப்பிர் அப்துல் பாரி ஆகியோரும் கலந்து கொண்டனர். (160)

## பழையில் வைரவர் பொங்கல் விழா

(வவுனியா)

வவுனியா - நெடுங்கேணி குளவிசுட்டான் பழையில் வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் இடம்பெறவுள்ளதாக ஆலயத்தின் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும் இரவு பெரும் பொங்கல் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. ஆலய கிரியைகளை ஆலய பூசகர் சி.தணிகாசலமும் சி.அமிர்தலிங்கமும் நடத்தவுள்ளனர். (160)

## முரசின் இன்றைய பலன்

(11.07.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 27 ஆம் திகதி. அட்டமி முன்னிரவு 11.21 வரை. நட்சத்திரம் ரேவதி. முன்னிரவு 8.24 வரை. மரணயோகம். அட்டமி நவமி, இராகுகாலம் 11.59 - 1.29 வரை. சுபநேரம் 04.29 - 05.59 வரை. எமகண்டம் 07.29 - 08.59 வரை. குளிகன் காலம் 10.29 - 11.59 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நன்மை, தலையீடுகளைத் தவிர்க்கவும், குடும பத்தில் நல்லுறவு, பொறுப்புக்கள் கிடைக்கும. |
| ரிஷபம் | உறவினர் தொல்லை, அநாவசியச் செலவு, வீண்பழி கேட்டல் , வேலைப்பளு அதிகம். |
| மிதுனம் | குடும்ப சிறப்புக்கள், உறவினர் அனுசரணை, திடீர் பணவரவு, கடன் தொல்லை தீரும். |
| கடகம் | மேன்மை, உறவினர்களால் பிரச்சினை, வீண் குழுப்பங்கள், வாக்குவாதம். |
| சிம்மம் | பயணம் விலக்கவும், குடும்பத்தில் மகிழ்ச்சி, கலைஞர்களுக்கு யோகம், சுப காரியங்கள். |
| கன்னி | செலவுகள், தேவையற்ற அலைச்சல், மேலதிகாரிகள் ஆதரவு, கடன் தொல்லை தீரும். |
| துலாம் | போட்டிகள், ஏமாற்றம் ஏற்படும், அதிகாரிகளை அனுசரிக்கவும், குடும்பத்தல் ஒற்றுமை. |
| விருச்சிகம் | குடும்ப சுகம், கூட்டுத் தொழில் நன்மை, பதவி உயர்வு, போட்டி பொறாமை. |
| தனுசு | உடல் நலக் குறைவு, பொருளாதார முன்னேற்றம், தாமத வெற்றி, அரச வழியில் உதவி. |
| மகரம் | விருத்தி, வரவுக்கேற்ப செலவு, சுபகாரியத் தடை, கூட்டுத்தொழிலில் நிதானம். |
| கும்பம் | வாக்குப் பலிதம், மருத்துவச் செலவு, கடன்கள் குறையும், நிம்மதிக்குறைவு. |
| மீனம் | முற்பகல் நன்று, உறவினர் கலகம், அதிகாரிகள் ஒத்துழைப்பு, கல்வியில் சாதனை. |




லண்டனில் ரென்னிஸ் சங்கம் சார்பில் நடந்த விருந்தில் வெற்றிக் கிண்ணத்துடன் பங்கேற்ற விம்பிள்டன் சம்பியன்களான சுவிஸ்சர்லாந்தின் பெடர் மற்றும் அமெரிக்காவின் செரீனாவைக் காணலாம்.

# அழைத்தால் ஆடத் தயார்

(லண்டன்)

இலங்கையில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண ருவென்ரி - 20 அணியில் என்னைத் தெரிவு செய்தால் ஆடத் தயாராக உள்ளேன் என இங்கிலாந்து அதிரடி வீரர் பீற்றர்சன் தெரிவித்தார்.ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது என எடுத்த முடிவு கடினமானது. ருவென்ரி -20 ஐ.பி.எல்., போட்டிகள் வந்தபின், ஒருநாள் போட்டிக்கு அதிக ஆபத்து உள்ளது. ஏனெனில், இவ்வகை போட்டியில் மத்திய ஓவர்கள் சோர்வடிக்கின்றன. வேறு சில வீரர்களும் என்னைப் போல யோசித்தால், அவர்களும் ஓய்வு பெற்றுவிடுவர் என்று நினைக்கிறேன். ஆனால், ஒருநாள் போட்டியில் விளையாடவில்லை எனில், ருவென்ரி -20 அணியில் இடமில்லை என்கின்றது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை (இ.சி.பி.). இது மிகவும் வருத்தமானது. என்னை ருவென்ரி -20 அணியில் விளையாட அனுமதித்தால், தற்போதைய ஒருநாள் அணியில் இருந்து 5 முதல் 6 வீரர்கள், விலகத் தயாராக உள்ளனர். ஆனால், இதை யார் கேட்பது. தற்போதைய அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை புறக்கணிக்க வேண்டாம் என, எனது தாயார், மனைவி, சகோதரர்கள் உட்பட பலரும் முன்பு கூறினர். இதை இழக்க விரும்பவில்லை தான். என்றாலும், கடந்த ஏழு ஆண்டுகளாக அதிகப்படியான போட்டிகளில் பங்கேற்று வந்த எனக்கு, சற்று ஓய்வு தேவைப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# எல்லாமே சாதனை

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் இறுதிப் போட்டியை அதிகளவானோர் தொலைக்காட்சியில் பார்த்து சாதனை படைத்துள்ளனர்.

பெடரர் , முர்ரே மோதிய விம்பிள்டன் இறுதிப் போட்டியின் நேரடி ஒளிபரப்பை இங்கிலாந்து இரசிகர்கள் 1.7 கோடி பேர் பார்த்து இரசித்துள்ளனர். கடந்த 20 ஆண்டுகளில் இதுவே அதிகபட்ச பார்வையாளர்கள் எண்ணிக்கையாகப் பதிவாகி உள்ளது. 76 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இங்கிலாந்து வீரர் ஒருவர் விம்பிள்டனில் சம்பியன் பட்டம் வெல்வார் என ஆவலுடன் எதிர்பார்த்த அந்நாட்டு இரசிகர்கள் ஏமாற்றத்தில் ஆழ்ந்துள்ளனர். இருப்பினும் இப்போட்டியை தொலைக்காட்சியில் அதிகளவானோர் பார்வையிட்டது கடந்த இருபது ஆண்டுகளில் இதுவே அதிகபட்சமாக பதிவாகியிருப்பதில் ஒரு திருப்திகொண்டிருப்பதாக இங்கிலாந்து ரென்னிஸ் இரசிகர்கள ஆறுதல் அடைகின்றனர்.

இதேவேளை, தொலைக்காட்சிஅதிகளவான பார்வையாளர்களை பார்த்ததையிட்டு மகிழ்ச்சி என முர்ரே தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கலப்பு இரட்டையரில் அமெரிக்க ஜோடி சம்பியன்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னீஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவின் இறுதி போட்டியில் பயஸ், வெஸ்னினா ஜோடியை வீழ்த்தி அமெரிக்காவின் மைக் ப்ரயன், லிசா ஜோடி சம்பியன் பட்டத்தை வென்றது. விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், ரஷ்யாவின் எலினா வெஸ்னினா ஜோடி, அமெரிக்காவின் மைக் ப்ரயன், லிசா ரய்மொந்த் ஜோடியை சந்தித்தது. இரண்டாவது செட்டில் சற்றுத் தடுமாறிய அமெரிக்கா ஜோடி அதிரடியாக விளையாடி 6-3, 5-7, 6-4 என்ற செட்கணக்கில் நான்காம் நிலை ஆட்டக்காரர்களான இந்தோ-ரஷ்யன் ஜோடியான லியாண்டர் பயஸ்-எலினா வெஸ்னினா ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது.



# உலகின் சிறந்த வீரர் பெடரர்

(லண்டன்)

கால்பந்து ஜாம்பவான் பீலே, குத்துச்சண்டை ஜாம்பவான் முகமது அலி ஆகியோருக்கு இணையான தரவரிசையில் ரோஜர் பெடரரும் உள்ளார் என இங்கிலாந்து ரென்னிஸ் வீரர் முர்ரே தெரிவித்தார்.

நான் பார்த்த வகையில் உலகின் சிறந்த விளையாட்டு வீரர்களில் ஒருவராக பெடரர் திகழ்கிறார். அவரிடம் விம்பிள்டன் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்ததில் கவலை இல்லை.

தனது 30 வயதிலும் பெடரர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இன்னும் சில ஆண்டுகள் அவரால் திறமையுடன் ஆட முடியும். அவரால் 20 கிராண்ட்சிலாம் பட்டம் பெற முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மருத்துவ வசதி இல்லாததால் கால்பந்து வீரர் மரணம்

(கொல்கத்தா)

கால்பந்து மைதானத்தில் உரிய மருத்துவ வசதிகள் இல்லாததால் மேற்குவங்க வீரர் ஒருவர் பரிதாபமாக மரணம் அடைந்தார். இவரை மருத்துவமனையில் உடனடியாக அனுமதிக்காமல் அலட்சியம் காட்டியதால் உயிரை காப்பாற்ற முடியவில்லை.

மேற்கு வங்கத்தின் ஜல்பாய்குரியில் உள்ள நேதாஜி வித்யாபத் மைதானத்தில் ஒளிவெள்ளத்தில் உள்ளூர் கால்பந்து போட்டி நடந்தது. இதில் தோரல்பாரா -பானு நகர் அணிகள் மோதின. தோரல்பாரா அணி சார்பில் விளையாடிய (மகேஷ் தபா - 27) கோல் அடிக்க பாய்ந்தார். அப்போது எதிரணி கோல்கீப்பரின் முழங்கால், தபாவின் நெஞ்சில் பலமாக தாக்கியது. இதையடுத்து சுருண்டு கீழே விழுந்தார். உடனே மோட்டார் சைக்கிள் மூலம் தபாவை அருகில் இருந்த அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். தீவிர சிகிச்சைப்பிரிவில்(ஐ.சி.யு.) படுக்கை வசதி பற்றாக்குறை காரணமாக இவரை அனுமதிக்க மறுத்துள்ளனர். உடனடியாக மரினா என்ற தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கும் ஐ.சி.யு.வில் இடமில்லை. மற்றொரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் தபா மரணம் அடைந்தார். பின் இவர் மீண்டும் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு ஏற்கனவே மரணம் அடைந்துவிட்டதாக டாக்டர்கள் உறுதி செய்தனர்.

# சர்வதேச போட்டிகளிலிருந்து தைபு ஓய்வு



சிம்பாப்வே அணியின் விக்கெட் காப்பாளர் ரெற்றென்டா தைபு, கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். தனது மதக் கடமைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இந்த ஓய்வினை அறிவிப்பதாக அவர் தெரிவித்தார். 29 வயதேயான தைபு - சிம்பாப்வே அணிக்காக 28 டெஸ்ட் போட்டிகளிலும், 150 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 17 ருவென்ரி -20 சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தார். அவரது ஓய்வு ஆச்சரியகரமானதொன்றாகக் கருதப்படுகிறது. கடவுளின் சேவைக்காக உண்மை தன்னை அழைப்பதாக உணர்கிறேன். எனது நாட்டுக்காக விளையாடும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்த போதிலும், கடவுளுக்காக என்னை அர்ப்பணிப்பதற்காக தருணம் வந்துவிட்டது எனத் தெரிவித்தார். 18 வயதில் தனது அறிமுகத்தை மேற்கொண்டு 11 வருடங்கள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றிய தைபு, உலகின் மிக இளைய டெஸ்ட் அணித்தலைவர் என்ற சாதனைக்குச் சொந்தக்காரராக விளங்குகிறார். அத்தோடு சிம்பாப்வே அணி சார்பாக 4ஆவது அதிகூடிய ஒருநாள் சர்வதேசப் போட்டி ஓட்டங்களைக் கொண்டுள்ள அவர், அன்டி ஃபிளவருக்குப் பின்னரான அந்நாட்டின் சிறந்த விக்கெட் காப்பாளராகவும் திகழ்கிறார். இலங்கையில் செப்டெம்பரில் இடம்பெறவுள்ள உலக ருவென்ரி 20 தொடரில் பங்குபற்றுவதற்கான சிம்பாப்வேயின் தற்காலிக அணியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் தைபுவின் ஓய்வு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குத்துச் சண்டையில் சம்பியன்



உலக குத்துச் சண்டை போட்டியில் உக்ரைன் வீரர் விளாடிமிர் கிளிட்ச்கோ சம்பியன் பட்டத்தை வென்றார்.


பெர்ன் நகரில் நடந்த இந்த போட்டியில், தற்போதைய நடப்பு சம்பியனும், 36வயதான. உக்ரைன் வீரருமான விளாடிமிர் கிளிட்ச்கோவும், அமெரிக்க வீரர் டோனி தாம்சனும் மோதினர். இந்த ஆட்டத்தில் 6ஆவது சுற்று முடிவில் கிளிட்ச்கோ எளிதாக வெற்றி பெற்றார். இதன்மூலம் மீண்டும் உலக குத்து சண்டை சம்பியன் பட்டத்தை கிளிட்ச்கோ தக்க வைத்து கொண்டுள்ளார். முன்னதாக 4 வருடங்களுக்கு முன் தாம்சனுடன் இவர் மோதினார். அதிலும் கிளிட்ச்கோ தான் வென்றார்.

2004ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து சம்பியனாக இருந்து வருகிறார். மொத்தம் 58 போட்டிகளில் பங்கேற்றுள்ள கிளிட்ச்கோ 3 போட்டிகளில் மட்டுமே தோல்வியடைந்துள்ளார்.

தொடர்ந்து சம்பியன் பட்டம் வென்று வருவது மகிழ்ச்சி தருகின்றது. எனது இந்த வெற்றிக்கு ஆதரவு அளித்துவரும் இரசிகர்களை இந்த இடத்தில் நினைவு கூற விரும்புகின்றேன். அவர்கள் என்னை எப்பொழுதுமே உற்சாகப்படுத்தி வருகின்றனர். அவர்களின் உற்சாகமே நான் தொடர்ந்து சம்பியன் பட்டம் வென்று வருவதற்கு முக்கிய காரணம் என சம்பியன் பட்டம் வென்ற பின்னர் விளாடிமிர் கிளிட்ச்கோ தெரிவித்தார்.

# முன்னிலை பெற்றது இலங்கை அணி





(பல்லேகல)

சமரவீர, பரணவிதன ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணிக்கெதிரான பல்லேகல டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முன்னிலை முன்னிலை பெற்றது. பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின்மூன்றாவதும், இறுதியுமான ஆட்டம் பல்லேகல மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி, ஆரம்பத்தில் முதல் மூன்று விக்கெட்டுக்களை 44 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்துத் திறணியது. இருப்பினும், நான்காவது விக்கெட்டுக்காக பரணவிதனவுடன் இணைந்த சமரவீர அணியின் நிலையை உணர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நான்காவது விக்கெட்டுக்காக இவர்கள் இருவரும் 143 ஓட்டங்களைப் பெற்றார். பின்னர் திசார பெரேராவின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி அதன் முதல் இனிங்ஸில் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இலங்கை அணி அதன் முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களை இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சமரவீர 73, பரணவிதன, திசார பெரேரா தலா 75, குலசேகர 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யுனைட் கான் ஐந்து, சயிட் அஜ்மல் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். 111 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் பாகிஸ்தான் அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஒரு விக்கெட்டை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 226.

# மாகாண மட்ட கரப்பந்து ஆவரங்கால் மத்தி சம்பியன்




(கைதடி)

சிங்கர் நிறுவன அனுசரணையுடன் வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஆவரங்கால் மத்தி அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 7ஆம் திகதி கைதடிச் சந்தியில் அமைந்துள்ள மின்னொளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வடமாகாணத்தில் உள்ள முன்னணி அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப்போட்டிக்கு ஆவரங்கால் மத்தி அணியும், ஆரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதின.

இரு அணிகளுமே பல இறுதிப் போட்டிகளில் மோதிய அனுபவங்களைக் கொண்டிருந்துடன் இரு அணிகளின் பலம், பலவீனம் என்பனவற்றை இரு அணிகளுமே உணர்ந்திருந்தமையால் இப்போட்டி பெரும் விறுவிறுப்பு நிறைந்த ஆட்டமாக இருக்கும் என ரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது.

அதேபோன்றே ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியில் முதலிரு செட்களும் அமைந்தது. முதல் செட்டை ஆரவங்கால் மத்தி அணி 25-19 என்ற கணக்கில் கைப்பற்றி முன்னிலை வகித்தது. தொடர்ந்து நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் 25-22 என்ற செட் கணக்கில் இரண்டாவது செட்டைக் கைப்பற்றி சமப்படுத்தியது. இதன் மூலம் ஆட்டம் வேகமும், பரபரப்பும் அதிகரித்தது. இருப்பினும் இதன் பின் சுதாகாரித்து, வீறுகொண்ட ஆரவங்கால் மத்தி அணி தொடர்ந்து நடைபெற்ற இரண்டு செட்களையும் கைபற்றி வடமாகாணச் சம்பியனானது. இறுதியில் ஆவரங்கால் மத்திய அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் கே. மனோகரன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளன உதவிச் செயலாளர் கேணல் மகேஸ் அபயரட்ண மற்றும் சிங்கர் நிறுவனத்தின் சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர் எம். மகேசரட்ணம், வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் அண்ணாத்துரை உட்பட பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## ஸ்கந்தா வெற்றி

(பருத்தித்துறை)

ஜெனக்ஷனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 20 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இச்சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்று அண்மையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில்வெற்றி பெற்று முதலில் ஆடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 26.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனக்ஷன் 72 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 156 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 32.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஜெனக்ஷன் ஐந்து, றொசன் மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினர். (17)

# மாவட்ட வலைப்பந்து யூனியன் கல்லூரி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மக்கள் வங்கியின் ஆதரவுடன் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 21 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் மோதின.

போட்டி விறுவிறுப்பாக இருந்தாலும் இறதிவரை மைதானத்தில் யூனியன் கல்லூரியின் கைகளே மேலோங்கிக் காணப்பட்டது.

முதல் பாதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 23:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யூனியன் கல்லூரியின் கைகளே மீண்டும் ஆதிக்கம் செலுத்தியது. இராமநாதன் கல்லூரி கோல் புகுத்துவத்றகான பல வாய்ப்புகளை தவறவிட்டது.

இந்நிலையில் இரு அணிகளும் மோதிக்கொண்ட போதிலும் இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யூனியன் கல்லூரி 19:09 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 42 :19 புள்ளிகள் என்ற அடிப்படையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியை வெற்றி பெற்று யாழ் மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத்தொடரின்போது இலங்கை தேசிய அணிக்கு தலைமைதாங்கிய ஜெயந்தி சோமசேகரமும், அதிதியாகக் கலந்துகொண்டுபரிசுகளை வழங்கிக் கௌரவித்தார். (93)

# றுக்ஷன், கல்ஹோகன் அதிரடிச் சதம் யாழ். இந்து பெரு வெற்றி

(யாழ்ப்பாணம்)

றுக்ஷன், கல்ஹோகன் ஆகியோரின் சிறப்பான சதத்தின் மூலம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரி அணி பெருவெற்றிபெற்றுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் பிரிவுமூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பளையூனியன் கல்லூரி அணியும், யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யூனியன் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி றுக்ஷன், கல்ஹோகன், கவிஷன், பிரிந்தாபன் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். இந்துக்கல்லூரி அணி 50ஓவர்கள் முடிவில் 491 ஓட்டங்களைப் பெற்றது. இந்த வருடத்தில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் அதிக கூடிய ஓட்ட எண்ணிக்கையாகவும் இது பதிவாகியுள்ளது. துடுப்பாட்டதில் றுக்ஷன் 66 பந்துகளில் 106, கல்ஹோகன் 115, கஜிவன் 89, பிரிந்தாபன் 86 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யனுசன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு கடின இலக்கை நோக்கி ஆடிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 28.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் 433 ஓட்டங்களால்யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றமை இந்த வருடத்தில் நடைபெற்ற பாடசாலை மட்டப் போட்டியில் ஒரு சாதனை வெற்றியாகப் பதிவாகியுள்ளது. இந்தப் பெருவெற்றி இந்த வருடத்தில் எந்தவொரு பாடசாலைப் பெற்றதில்லைதுடுப்பாட்டத்தில் அனுஷன் மட்டுமே 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சரங்கன் நான்கு, சிந்துஜன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (17)

# அரச சேவையாளர்களுக்கிடையிலான வடமாகாண மென்பந்து கிரிக்கெட்

(வவுனியா)

இலங்கை அரசசேவை விளையாட்டுச் சங்கம் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய முதன் முறையாக வடமாகாண அரசசேவை மென்பந்து கிரிக்கெட்சுற்றுப் போட்டி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் வவுனியாநகர சபை மைதானத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல கரிச்சந்தர தலைமையில், பொறியியலாளர் ஜி. சிவநாதன் முன்னிலையில் அரச திணைக்களங்களுக்கிடையில் வவுனியா அரசசேவை விளையாட்டுச்சங்கத்தினால் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இம் மாவட்ட கிரிக்கட் சுற்றுபபோட்டிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்கு பற்ற இருக்கின்ற அரச திணைக்கள அணிகள் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக, கிரிக்கெட் போட்டிசெயலாளர், மாவட்ட செயலகம்,வவுனியா என்றமுகவரிக்கு விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கிரிக்கெட் போட்டிச் செயலாளரால் கோரப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை அறிவதற்கு024 2222233, 024 2222234 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (160)



வடக்கு மாகாண பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற மாகாண மட்டக் கரப்பந்தாட்டத் தொடரில் முதலிடம் பிடித்து தேசிய மட்டத்திற்குத் தகுதி பெற்ற தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியினர் அதிபர் வேல்சிவானந்தன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் சி. கமலமோகன், பிரதான பொறுப்பாசிரியர் சி. சிவாகரன், பயிற்றுநர் ஸ்ரீ தயாளபாலன் ஆகியோருடன் காட்சி அளிப்பதைக் காணலாம். (93)



# ஷாருக்கானும் அடையாள அரசியல் வேட்டையும்

- அ.முத்துக்கிருஷ்ணன் கட்டுரையிலிருந்து.

1968இல் அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக்கழகம் Chubb Fellowship-I முதல் முதலாக அமெரிக்கர் அல்லாத ஒருவருக்குக் கொடுத்தது. அவர்தான் அறிஞர் அண்ணாதுரை. சில வாரங்கள் முன்பு அதே யேல் பல்கலைக்கழகத்தின் Chubb Fellowship-Ig; பெற்றுக் கொண்டு உரை நிகழ்த்த புறப்பட்டார் ஹிந்தி நடிகர் ஷாருக்கான். தனியார் விமானம் ஒன்றில் அவர் அமெரிக்காவின் வைட் பிளையின்ஸ் விமான நிலையத்தில் இறங்கினார். அவருடன் நீதா அம்பானி உள்பட பல தொழில் அதிபர்கள் பயணித்தனர். அந்த விமான நிலையத்தின் சுங்க இலாகா அதிகாரிகள் மற்றும் உள்நாட்டு எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் அனைவருக்கும் உடனே சோதனைகளை முடித்து அனுப்பினார்கள். ஷாருக்கான் என்கிற இஸ்லாமியப் பெயரை இவர் கொண்டிருப்பதால் இவரை மட்டும் இரண்டு மணி நேரம் விசாரித்தார்கள், இந்தியத் தூதரகம் தலையிட்ட பின்புதான் அனுப்பினார்கள். உடனே இந்திய ஊடகங்கள் எங்கும் நெருப்பு கொப்பளிக்கத் தொடங்கியது.

அடுத்த நாள் அதிகாலை பல நாளிதழ்களில் இதுதான் தலைப்புச் செய்தி. ‘ஆபத்து ஆபத்து’ என்று, எங்கும் கூப்பாடுகள். அமெரிக்காவே மன்னிப்பு கேள் என்றும், மறுபுறம் மன்னிப்பு மட்டும் கேட்டால் போதாது என்றும் அரசு மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சகங்களில் இருந்து அறிக்கைகள் பறந்தன. எஸ்.எம். கிருஷ்ணா மொஸ்கோவில் இருந்தபடி வாளைச் சுழற்றினார். ஷாருக்கானை நடத்தியது போல் நாம் இனி அமெரிக்க அதிகாரிகளை இங்கு நடத்த வேண்டும் எனக் கண்டனக் குரல்கள் கிளம்பின. இதனைக் கண்டித்து ‘அப்படி அமெரிக்கர்களை நடத்த வேண்டும் என்பது தவறு’ என்றது தி ஹிந்து தலையங்கம். அமெரிக்காவை, அமெரிக்க அரசை இப்படி செய்ய வேண்டும் என்று நினைப்பதுவே மகாபாவம் என்று தலையங்கம் கண்ணீர் வடித்தது. வாசிக்கும் இந்திய நகர அதிகாரவர்க்க முட்டாள்கள் அனைவரின் மூளையும் பற்றி எரிந்தது. தீ தீ தீ எட்டுத் திக்கும் தீ.

இது ஒன்றும் புதிதல்ல. அமெரிக்காவில் ஷாருக்கான் உள்பட பல ஹிந்தி நடிகர்கள் பல முறை இப்படி நடத்தப் பட்டிருக்கிறார்கள். “எனக்குத் தலைக் கனம் ஏற்படும்போது எல்லாம் நான் அமெரிக்கா செல்வேன். அவர்கள் நான் ஒரு பெரும் நட்சத்திரம் அல்ல, ஒரு சாதாரண மனிதர்தான் என்பதை நிரூபித்து எனக்குப் பாடம் புகட்டுவார்கள்”, என்று ஷாருக்கானே இந்த சம்பவத்திற்கு மாணவர்கள் மத்தியில் உரையாடுகையில் விளக்கமளித்தார். சினிமா நடிகர்கள்தான் அப்படி நடத்தப்படுகிறார்களா என்றால் இல்லை, பலரும் இப்படி அமெரிக்க விமான நிலையங்களில் நடத்தப்படுகிறார்கள் என்பது நாம் அனைவரும் நன்கு அறிந்த விஷயமே. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இந்தியப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது நிர்வாணப்படுத்தி பரிசோதிக்கப்பட்ட போதும் நமக்குப் புத்திவரவில்லை. அதன் பிறகு அப்துல் கலாம் ஒருமுறை எல்லா சோதனைகளையும் முடித்து விமானத்தில் ஏறிய பிறகு அவரது ஷூவைக் கழட்டிக் காண்பிக்கச் சொல்லி சில அதிகாரிகள் பணித்தனர். இப்படி நம் ஊரில் பல பில்டப்புகளுடன் வலம் வருபவர்களின் டவுசர்கள் அமெரிக்காவில் கழற்றப்படுவதும் அவர்கள் வடிவேல் போல அப்படியே அதை மெயின்டெய்ன் செய்து வண்டியை ஓட்டுவதும் நமக்கும் சகஜமாகிப் போச்சு.

இது போல் சினிமா நடிகர்கள், பாடகர்கள், கிரிக்கெட் வீரர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் மட்டும்தான் நடத்தப்படுகிறார்களா? இல்லை, இந்தியாவுக்கு வெளியே பல்வேறு காரணங்களுக்காகப் பயணம் செய்யும் அனைவரையும் சொல்லொணா துயரத்திற்கு ஆளாக்கி பீதியுறச் செய்வதுதான் பல வளர்ந்த நாடுகளின் மோஸ்தராகவே உள்ளது. சமீபத்தில் வளைகுடா நாடுகளில் அங்கு கூலி வேலை, வீட்டு வேலை செய்ய இந்தியாவில் இருந்தும், தெற்காசிய நாடுகளில் இருந்தும் செல்லும் நூற்றுக்கணக்கானவர்களுடன் பல மணி நேரம் விமான நிலையத்தில் பேச, அவர்கள் நடத்தப்படும் விதத்தை நெருங்கி இருந்து பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. ஒவ்வொரு கணமும் அவர்கள் கேவலப்படுத்தப்படுகிறார்கள். அதுவும் வளைகுடா நாடுகளில் விமான நிலையத்தில் பணி புரியும் இந்தியர்களாலேயே துன்புறுத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு விமானமும் தரையிறங்கிய சில நிமிடங்களில் எங்கு செல்வது என்று கூட அறியாது கண்ணீருடன் திசைகள் தொலைத்து நிற்கும் நூற்றுக்கணக்கானவர்கள் முளைத்தவண்ணம் இருக்கிறார்கள்.

ஆனால் சினிமா நடிகர்கள், பாடகர்கள், கிரிக்கெட் வீரர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் மட்டும் இப்படி நடத்தப்படும்போது அறிக்கைப் போர் நடத்திவிட்டு, சில வார்த்தைகள் மன்னிப்பைப் பெற்றுவிட்டு அதன் பின் அமைதியாக இருந்து விடுவது சரிதானா என்கிற கேள்வி அழுத்தமாக எழுகிறது. உலகம் முழுவதும் இஸ்லாமியர்களுக்கு எதிரான இந்த Racial Profiling-Ij; தொடங்கியவர்கள், இப்படி சில வெற்று வார்த்தைகளில் மன்னிப்பு கேட்பது போதுமானதா? இந்த சம்பவத்தில் ஷாருக்கான் சோதிக்கப்பட்டதற்குக் காரணம் அவரது இஸ்லாமியப் பெயர்தான் என்பது உலகம் அறிந்த விஷயம். சரி, இஸ்லாமியப் பெயர் உடையவர்களை இந்தியாவில் எப்படி நடத்துகிறோம்?


1970களில் அமெரிக்கா தொடங்கி



ஒரு மு…

ஷாஜகான்…
மட்டுமல்ல, உல…
பரிசளித்தார். மூ…
பருமனும் உள்ள…
முத்துக் குளிப்ப…
நூற்றா…டுக்குப்…
மஞ்சு வம்சத்துக்…
சென்று அவருட…
கல்லறைத் திரு…
ஹொங்கொங்கி…
பாங்கொக்கில் …
அடைக்காததால்…
வாங்கியவர் தன்…
எனவே, இன்று …
தெரியவில்லை.

அமெரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி பராக் ஒபாமா. இது அனைவரும் அறிந்ததே. 2008-ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இவர் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதி, சமாதானத்துக்கான நோபல் பரிசு என்று அவரின் புகழ் அகிலமெங்கும் பரவியது. “பராக் ஒபாமா - தி மேக்கிங் ஒ.்.ப் தி மேன்” என்ற புத்தகத்தில் இளமைக் காலத்தில் எவ்வாறு திகழ்ந்தார் என்பதை ஒபாமாவின் பாகிஸ்தான் நண்பர், முன்னாள் காதலி,



# பாகிஸ்தான் நண்பர்... முன்னாள் காதலி... ஒபாமா!

முதலாளி ஆகியோர் பகிர்ந்து கொள்கின்றனர்.


பராக் ஒபாமா கொலம்பியாவில் பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருந்தபோது தனக்கென்று ஒரு தனித்துவமான இடத்தைப் பிடிக்க போராடிக் கொண்டிருந்தார். அப்போது பாகிஸ்தானைச் சேர்ந்த சிலர் அவருக்கு நண்பர்களானார்கள். சித்திக், மீட், மிர் மஹ்பூப் மகமூத் (பீனு) ஆகியோர் ஒபாமாவிற்கு பரிச்சயமானார்கள்.

ஒபாமா, மீட், சித்திக் ஆகிய மூவருடன் இணைந்து பீனும் கராச்சி கிராமர் பள்ளியில் பயின்றார். மேலும் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் அரசியல் கோட்பாடுகள் பாடம் பயின்றார். கராட்டியில் பிளாக் பெல்ட் பெற்ற பீனுவுக்கு ஒபாமாவிடம் அரசியல் பேசுவது மிகவும் பிரியம். ஏனென்றால் ஒபாமாவுக்கு அரசியல், இலக்கியம் ஆகியவற்றில் இருக்கும் அறிவும், ஈடுபாடும் பீனுவை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

ரால்ப் எலிசன் என்பவர் எழுதிய “இன் விசிபிள் மேன்” என்ற புத்தகத்தை ஒபாமா மீண்டும் மீண்டும் படித்துக்கொண்டே இருந்தார். அந்தப் புத்தகத்தின் ஆசிரியரும் கறுப்பினத்தைச் சேர்ந்தவர்.

“அமெரிக்காவில் பல்வேறு முரண்கள் ஒன்றுடன் மற்றொன்றாகி பின்னிப் பிணைந்துள்ளது. என்னால் அதனைப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே அமெரிக்கா இப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். இதில் ஜெயிப்பவர்கள் ஒன்றையும் கொண்டுபோவதில்லை. வாழ்க்கை என்பது வாழ்வதற்காகத்தானே ஒழிய வலியவன் எளியவனை கட்டுப்படுத்துவதற்கு அல்ல. ஒருநாள் மனிதநேயம் வெல்லட்டும்” என்பனே போன்ற கருத்துக்களை அந்தப் புத்தகம் கொண்டிருந்தது.

பீனு கூறுகிறார் “இளம் வயது ஒபாமா உயர்வான குறிக்கோள்களைக் கொண்டிருந்தார். அதனை அடைவதற்காக கடுமையாக உழைக்கவும் ஆரம்பித்திருந்தார்.. சில மாதங்கள்தான் நாங்கள் பழகியிருந்தோம். அப்போது ஒருநாள் எதிர்பாராதவிதமாக ஒரு கேள்வியை ஒபாமா என்னிடம் கேட்டார். அது என்னவென்றால், “பீனு, நான் அமெரிக்காவின் ஜனாதிபதி பதவியை அடைவேன் என்று நீ நினைக்கிறாயா?” என்பதே.




அதற்கு நான், “கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவரை அமெரிக்கா ஜனாதிபதியாக ஏற்றுக்கொண்டால், நீ நிச்சயமாக அந்தப் பதவியை அடையலாம்” என்று பதிலளித்தேன்.

கொலம்பியாவில் படிப்பை முடித்த 6 மாதங்களுக் குப்பின் ஜெனிவைவே குக் என்ற வெள்ளையினப் பெண் ஒபாமாவுக்கு அறிமுகமானார். இருவரும் நெருங்கிப் பழகினர். அவர்களது பழக்கம் காதலில் கொண்டுபோய்விட்டது. ஜெனி - ஒபாமாவை “பாருக்” என்றுதான் அழைப்பார். “பா” என்பதை நீட்டிச் சொல்வது அவரது ஸ்டைலாக இருக்கும். ஒபாமாவைவிட மூன்று வயது மூத்தவர் ஜெனிவைவே.

ஒபாமாவை அலுவலக வேலை ஈர்க்கவில்லை. தன்னுடைய குறிக்கோளை அடைவதற்கான முயற்சியில் ஒரு பட்டுப்புழுவாகத்தான் வேலையில் இருந்தார், பட்டாம்பூச்சியாக சிறகடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தார். அலுவலக வேலை, சிலநாள்கள் பாகிஸ்தானிய நண்பர்களுடன் “ஊர்சுற்றல்” இப்படியாகக் கழிந்தன நாள்கள். தன் நண்பர்களுடன் நடப்பு அரசியல் விவாதங்களில் ஈடுபட்டுக் கொண்டேயிருப்பார்.

காதலியான ஜெனி, தன் நண்பர்களைக் காட்டிலும் விசேஷமாகத் தெரிந்தார் ஒபாமாவுக்கு. ஏனென்றால் எப்போதும் புத்துணர்ச்சியோடும், சுதந்திரமாகவும், தனித்துவமாகவும் ஜெனி காணப்பட்டார். இருவரும் முதுநிலை பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தனர். ஜெனி, கறுப்பினத்தவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் கொண்டிருந்தார். தன்னைப்போல் சிந்திக்கும் ஜெனியை ஒவ்வொரு வியாழக்கிழமையும், வார இறுதிநாள்களிலும் ஆர்வத்தோடு சந்தித்தார் ஒபாமா.

இனவெறியால் பாதிக்கப்படும் மக்களைக் குறித்த காரசார விவாதங்களில் இருவரும் ஈடுபடுவார்கள்.



தனித்தன்மைக்காக போராடிவரும் ஒபாமாவின் செயல்பாடுகளுக்கு அதிக ஊக்கம் அளிப்பார் ஜெனி.

பல நாள்கள் யோசனைக்குப் பின் ஒருநாள் ஜெனி கூறினார், “நீ கறுப்பினத்தவராக இருப்பதையே நான் விரும்புகிறேன். எனவே உன்னுடைய எதிர்காலம் ஒரு கறுப்பின பெண்ணோடுதான் இருக்க வேண்டும்” என்றார். “என்னுடைய எண்ணங்களையும்,



எதிர்பார்…
எனக்கு …
அப்பாவி…
லூ …
கத்தில் ந…
ஒபாமா. …
மாவைக் …
தின் இ…
என்பதுத…
…வும் சு…
முதலாளி…
அவ்வா…
ஒபா…
அவருக்கு…
தைரியத்…
செலி உ…
சிலர் அ…
சிலர் பத…
மிகமிக …
குணத்தி…
போய்வி…
ஒபாமா…
வேலைய…
வேலை…
வேண்டு…
“ஒபா…
மனநிலை…
தன்னு…
வெளிப்ப…
- நூல்: …
‘பராக் ஒ…

வைத்த இஸ்லாமியர்களுக்கு எதிரான பிரச்சாரத்தை இந்தியாவில் 1980களில் இந்திய சூழல் உள்வாங்கிக் கொண்டது. இந்தியப் பெரும் ஊடகங்களும், அமெரிக்க அடிவருடிகளாக, மேற்கில் இருந்து வரும் அனைத்தையும் அப்படியே ரகம் பிரிக்காமல் பிரச்சாரம் செய்யும் நிறுவனங்களாக மாறின.

1970களின் இறுதியில் பனிப்போரின் பொழுது சோவியத் யூனியனுக்கு எதிராக ஆப்கான் முஜாஹிதீன்களை யார் உருவாக்கியது? ஆப்கானில் எல்லைப் பகுதியில் இருந்த மதரசாக்களின் பாடத் திட்டங்களில் மாற்றம் கொணர்ந்தது யார்? 1989 வரை நீடித்த இந்தப் போரின் பொழுது ஆப்கான் முஜாஹிதீன்களுக்கு யார் நிதி உதவி, இராணுவ தளவாட உதவிகள் அளித்தது? இந்தப் போரில் அமெரிக்கா, பிரித்தானியா, சவூதி அரேபியா, பாகிஸ்தான், இஸ்ரேல், இந்தோனேசியா, சீனா மற்றும் இந்திய அரசின் பங்கு என்ன? யார் இந்த ஒசாமா பின்லேடன்? ஒசாமா எந்தக் காலகட்டத்தில் ஒரு நாட்டின் தலைவர் போல் அமெரிக்காவின் பெண்டகன் படைகள் பாதுகாக்க அமெரிக்கா முழுவதும் உலா வந்தார்? இப்படி அடுக்கடுக் கான கேள்விகளை உருவாக்குவதும் அதன் விடைகளைக் கண்டடைவதும்தான் அறிவார்ந்த மக்கள் ஊடகங்கள் நாட்டுக்குச் செய்யும் தொண்டாக இருக்க இயலும்.


## முத்தின் பிரயாணம்

ன் மும்தாஜுக்காக தாஜ்மகால் கட்டியது
லகிலேயே மிகப் பெரிய முத்து ஒன்றையும்
மூன்று அங்குல நீளமும் இரண்டு அங்குல
ள இ ந முத்தைப் பாரசீகத்தில் இருந்து
பவர்கள் கொண்டு வந்தார்கள். ஒரு
நப் பி இது சீனாவை அடைந்தது.
துச் சக்கரவர்த்தியான சியங் லங்கிடம்
டன் கல்லறையிலும் புதைக்கப்பட்டது.
நடர்கள் இதைக் களவாடிச் சென்றனர்.
கில் ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் சங்கம் இதை
அடகு வைத்துக் கடன் வாங்கியது. கடனை
ால் வங்கி அதை ஏலம் விட்டது. அதை
ன் பெயரையே வெளியிட விரும்பவில்லை.
அந்த முத்து எங்கே உள்ளது என்பது

ர்ப்புகளையும் ஈடேற்றும் ஒரு கறுப்பின பெண்
கிடைக்கக் கூடுமா?" என்று ஜெனியிடமே
வியாகக் கேள்வி எழுப்பினார் ஒபாமா.
செலி என்ற வெள்ளையர் ஒருவரின் அலுவல
நடைபெற்ற நேர்காணலில் கலந்துகொண்டார்
அந்த நிறுவனத்தின் முதலாளியான செலி ஒபா
க் கண்டு அதிர்ந்தார். "எப்படி ஒரு கறுப்பினத்
இளைஞன் நேர்காணலில் பங்கேற்றார்"
துதான் அவரது அதிர்ச்சிக்குக் காரணம்.
சுறுசு பாகவும், பரபரவென்று காணப்படும்
ளியான செலி, தன் மற்ற ஊழியர்களும்
றே இருக்க வேண்டும் என்று விரும்புவார்.
ாமாவின் நடவடிக்கைகள், பேச்சுகள்
க்கு தனித்துவமாக தெரிந்தது. அவரின் மன
த்தையும், மனதினுள் உள்ள சாந்தத்தையும்
உணர்ந்தார். தான் படுத்தும் பாடை பார்த்து
அழுதுவிடுவார்கள் சிலர் கோபப்படுவார்கள்
பதட்டமாகிவிடுவார்கள். ஆனால் ஒபாமாவோ
அமைதியாக காட்சியளித்தார். தன்னுடைய
திற்கு ஒபாமா வேறு வேலையைத் தேடிப்
விடுவார் என்று எண்ணினார். ஆனால்
வோ என்னிடம் கைவசம் வேறு எந்த
லயும் இல்லை. அதனரல் நான் இந்த



லயைத் தக்க வைத்துக்கொண்டே ஆக
டும் என்று கூறினார்.
பாமா எப்போதும் ஒரேமாதிரியான
லையில்தான் காணப்படுவார். வார்த்தைகளில்
டைய உணர்ச்சிகளை ஒருபோதும்
ப்படுத்தமாட்டார்..." என்கிறார் செலி.
:
ஒபாமா - தி மேக்கிங் ஓஃப் தி மேன்'



# தமிழினியின் கதை

டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.

ஒருவேளை அநேகரால் உணர்ந்து கொள்ள முடியாமலிருப்பது, கொழும்பு, போகம்பர, பூசா, அல்லது களுத்துறை போன்ற இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கை சேர்ந்தவர்களின் குடும்ப அங்கத்தினர்கள் தங்கள் பிரியப்பட்டவர்களை சென்று பார்க்க முடியாமல் அனுபவிக்கும் கஷ்டங்களையும் வேதனைகளையும்தான். அநேக குடும்பங்களுக்கு அதற்கான செலவை தாங்க முடியாமலிருக்கிறது. அவர்கள் தங்குவதற்குரிய இடவசதிக் குறைவு மற்றும் மொழிப் பிரச்சினை என்பன தடையாக உள்ளன. தவிரவும் அவர்கள் கண்ணோட்டத்தில் முன்பின் தெரியாத அந்நிய இடமாக கருதப்படுவதால், அவர்களில் சிலர் தாங்கள் பிரச்சினைகளுக்குள் சிக்கி விடுவோமோ என்று அச்சம் அடைகிறார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில், தீவிர மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மனம் நொந்துபோன நிலையிலிருந்த தமிழினிக்கு தார்மிக வலிமையூட்டும் கோபுரம், தானே என்று வழக்கறிஞர் மஞ்சுள பத்திராஜ நிரூபித்தார். அவர் தொடர்ச்சியாக தமிழினியை உற்சாகப்படுத்தி, அவளது பிரச்சினைகள் யாவும் வெகு விரைவிலேயே தீர்ந்துவிடும் அதனால் நம்பிக்கையை இழந்து விடவேண்டாம் என வலியுறுத்தி வந்தார். பத்திராஜ தமிழினியின் சட்டத்தரணி மட்டுமல்லாது, தமிழினியின் உத்தியோகப் பற்றற்ற ஆலோசகர் போலவும் கடமையாற்றினார். வெலிக்கடைக்குப் பதிலாக பூந்தோட்டத்துக்கு மாற்றல் கோருமாறு பத்திராஜா தான் தமிழினிக்கு அறிவுரை வழங்கியிருந்தார், ஏனெனில் வவுனியா அவரது தாயார் வசிக்கும் கிளிநொச்சிக்கு அருகில் உள்ளது. புனர்வாழ்வு நடவடிக்கையின் ஒரு பகுதியாக கணினிப் பயிற்சியையும் பெறுமாறு அவர்தான் தமிழினிக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

மஞ்சுள பத்திராஜ தமிழினியின் வழக்கறிஞராக மாறிய சூழ்நிலையை நினைவு படுத்துவது இந்தக் கட்டத்தில் பயனுள்ளதாக இருக்கும். தமிழினி சிறையிலிருந்த ஆரம்பகாலத்தில் பத்திராஜா அவரது வழக்கறிஞராக இருக்க வில்லை. ஆரம்பத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் (ரி.என்.ஏ) யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர், அப்பாத்துரை விநாயகமூர்த்தியே அவரது வழக்கறிஞராக இருந்தார். தடுப்புக் காவலில் உள்ளவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை வழங்கும் ஒரு தொண்டு நிறுவனத்துடன் விநாயகமூர்த்தி இணைந்திருந்தார்.

தமிழினி ஒரு மூத்த எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினராக இருந்தபடியால், அவருடைய கைதும் மற்றும் தடுப்புக் காவலும் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தன. உலக புலம்பெயர் தமிழர்களிடையே உள்ள எல்.ரீ.ரீ.ஈ மற்றும் எல்.ரீ.ரீ.ஈ சார்பான மூலகங்களிடையே அது கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. தமிழினி சயனைட்டை அருந்தாமல் ஆயுதப் படையினரிடத்தில் சரணடைந்ததையிட்டு அவர்கள் ஆத்திரமடைந்திருந்தார்கள். அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து, தடுப்புக்காவலில் இல்லாமல் தப்பித்திருக்கும் எல்.ரீ.ரீ.ஈயின் பிற அங்கத்தவர்களை அடையாளம் கண்டு தேடிப்பிடித்து கைது செய்வதற்கு உதவி வரும் முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் குழுவில் தமிழினியும் இருப்பதாக ஒரு கொடூரமான குற்றச்சாட்டு எங்கும் பரவியிருந்தது. இந்த கட்டுரை எழுத்தாளர்கூட இதுபற்றி கடந்த காலங்களில் எழுதியதுண்டு. எனினும் இந்த குற்றச்சாட்டுகள் யாவும் பொய்யென நிரூபிக்கப் பட்டுவிட்டன.

இந்தப் பின்னணியில், அப்பொழுது தமிழினியின் வழக்கறிஞராக இருந்த அப்பாத்துரை விநாயகமூர்த்தி திடீரென தனது வாடிக்கையாளரின் விடயத்தில் ஆர்வம் இழந்து போனார். அவர் வெறுமனே வழக்கினை கைவிட்டு தமிழினிக்காக நீதிமன்றத்தில் ஆஜராவதையும் நிறுத்திக் கொண்டார். இதற்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை, ஆனால் தமிழினியை துரோகி எனக் கருதும் புலம்பெயர் சமூகத்தின் தீவிரவாதப் பிரிவினரின் கடுமையான அழுத்தம் காரணமாக விநாயகமூர்த்தி இதிலிருந்து பின்வாங்கியிருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது.

விநாயகமூர்த்தி தமிழினியை கைவிட்டதற்கான காரணம் எதுவாக இருந்தாலும், அது தமிழினியை வழக்கறிஞரற்ற நிலைக்கு கொண்டு வந்தது. இந்த சந்தர்ப்பத்தில்தான், நோர்வேயில் வசிக்கும் தமிழினியின் சகோதரி, வழக்கறிஞர் துசித் ஜோன்தாசனை அவருக்காக ஏற்பாடு செய்தார். ஜோன்தாசன் இந்த வழக்கை தனது மற்றொரு சக வழக்கறிஞரான மஞ்சுள பத்திராஜவின் கவனத்துக்கு கொண்டுவந்தார். அவர் கருணையின் அடிப்படையில் தமிழினியின் விடயங்களை கவனிப்பதற்கு ஒப்புக் கொண்டார்.

சுப்பிரமணியம் சிவகாமி என்கிற தமிழினியின் வரலாறு, தீவின் வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து அநேக இளம் தமிழ் ஆண்கள் மற்றும் பெண்கள், அவர்களின் மனங்களில் எளிதில் பாதிப்பை ஏற்படுத்தும் வயதில், உயர் குறிக்கோளுடைய எண்ணங்களின் வெறியில் எல்.ரீ.ரீ.ஈ யில் இணைந்து கொண்டதை தெளிவாக விளக்குகிறது. அவர்களுடைய கனவுகள் முற்றாக சிதைந்து



விநாயகமூர்த்தி




மஞ்சுள பத்திராஜா

அதேவேளை அவர்களது வாழ்க்கையும் பலத்த அடி வாங்கி உடைந்து போயுள்ளது. அப்படி ஆவதற்கான சந்தர்ப்பங்களை பெற்ற அவர்களில் பலர் மெதுவாக உடைந்துபோன பாகங்களை பொறுக்கியெடுத்து தங்கள் வாழ்க்கையை புதிதாக மீளமைக்க முயற்சித்து வருகிறார்கள். இந்த முன்னாள் புலிகளில் பலர் இப்பொழுது வாழ்க்கையின் விலைமதிப்பற்ற தன்மையையும், மற்றும் வாழவேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருக்கிறார்கள், எனினும் தற்போது நிலவும் சூழ்நிலை அவர்களுக்கு பாதகமானதாகவே உள்ளது.

கூட்டான சூழ்நிலைகளின் சாதகமான தன்மையினால் நிரந்தரமான சிறைவாசத்தை எதிர்த்து தற்காலிகமான புனர்வாழ்வினை தமிழினியால் பெறக்கூடியதாக இருக்கிறது. புனர்வாழ்வினை அடிப்படையாகக் கொண்ட அவரது விடுதலைகூட அவரைப்போன்ற சமமான சூழலில் உள்ள மற்றவர்களுக்கும் நம்பிக்கை வருவதை உரைக்கும் முனனோடியாக உள்ளது.



# குண்டு மனிதர்களுக்கு சந்ததியின்றிப் போகலாம்!

ஸ்டீவ் ஜோன்ஸ் என்ற அறிவியலாளர் 2025இல், அமெரிக்காவில் மூன்றுக்கு இரண்டு பேர் மிகை எடை கொண்டவர்களாக இருப்பார்கள் என்று கணிக்கிறார். இதற்கு நாம் உண்ணும் உணவு, உடற்பயிற்சியின்மை போன்றவை முக்கிய காரணங்களாக இருந்தாலும், நம் மரபணுக்களுக்கும் பங்குண்டு.

நம்மில் அனைவரும் அளவாக உணவு உட்கொள்ளக்கூடியவர்களாகவோ மிகை உணவை செரிக்கக் கூடியவர்களாகவோ இல்லை. நம்மில் பலருடைய மரபணு இந்த விஷயங்களில் நம்மைத் தோற்கடித்துவிடுகிறது - இவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் விரைவில் மிகை எடை சேர்க்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இதனால் நீரிழிவு, இதய நோய் போன்ற பல மருத்துவப் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். இன்று அமெரிக்காவின் மருத்துவ பட்ஜெட்டில் ஆறில் ஒரு பங்கு நீரிழிவு தொடர்பான பிரச்சினைகளுக்கு செலவு செய்யப்படுகிறது.

அதிக எடை கொண்ட ஆண்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் கால் பங்கு குறைவான விந்தணுக்களே இருக்கின்றன. பெண்கள் கருத்தரிப்பதிலும் பிரசவத்திலும் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். டார்வினின் இயற்கைத் தேர்வு இங்கே வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது என்கிறார் ஸ்டீவ் ஜோன்ஸ். அதிக எடை கொண்டவர்களின் மரபணுக்கள் காலப்போக்கில் வடிகட்டப்பட்டுவிடும் என்று அவர் கணிக்கிறார். இவர்கள் ஒழுங்காக நடைப் பயிற்சி முதற்கொண்டு உடற்பயிற்சி செய்து வந்து உணவில் கட்டுப்பாட்டை கடைப்பிடித்திருந்தால் தங்கள் வம்சத்தைக் காப்பாற்றியிருக்கலாம். அபரிமிதம் வசீகரமாக இருக்க, அலட்சியம் வசதியாகி விடுகிறது.

இதைப் பேசும் ஸ்டீவ் ஜோன்ஸ் ஒரு சுவாரசியமான தகவலையும் தருகிறார். பிரஞ்சுப் புரட்சியில் ஸாட் போன்ற இலட்சியவாதிகளின் கோபத்துக்குப் பலியான ராணி மேரி ஆண்ட்வாநெட், ஏழைகளைக் கேக் சாப்பிடச் சொன்னார், அப்படி ஒரு திமிர் பிடித்தவர் என்பதாக ஒரு கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதைக் கொஞ்சம் துருவிப் பார்த்தால் கிட்டும் தகவல் - அந்த கேக் நாம் உண்டு கொழுக்கும் பல அடுக்குகளைக் கொண்ட க்ரீம் பொதித்த ஆடம்பர சங்கதி இல்லையாம். பாண் போன்றவற்றைச் செய்யும்போது அதன் மேற்பரப்பில் க்ரஸ்ட் என்ற பகுதி கெட்டித்துக் கிடக்கும் (நாம் மர்மக் கதைகளில் caked blood மற்றும் crusted blood ஐ எதிர்கொள்கிறோம் இல்லையா, அங்கு சொற்கள் இன்றும் இந்தப் பொருளில் புழங்குகின்றன). வழக்கமாக வீண் செய்யப்படும் துண்டுகள். அதைத்தான் ராணி ஏழைகளுக்குப் பரிந்துரைத்திருக்கிறார்.

பிரெஞ்சுக்காரர்களைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு அவர்கள் பாண் (bread) உண்ணுவதில் எத்தனை தீவிரமானவர்கள் என்பதும், பிரான்ஸின் எந்த குக்கிராமத்திலும் முக்கியமான ஒரு நபர் பாண் போட்டுத் தரும் நபர் (baker) என்பதும் தெரிந்திருக்கும். பிரெஞ்ச் ப்ரெட் என்பதே உள்புறம் மிருதுவான பாண்தான்.

# ஆழ்கடலின் விந்தைகளும், அச்சங்களும்

- பானுமதி

ரோஸலீ பெர்டெல் என்ற ஆய்வாளர், `Planet Earth: the Latest Weapons of War" என்ற தனது புத்தகத்தில், இரகசிய இராணுவ ஆய்வு முறைகள் புவிஅமைப்புக் கட்டுமானத் தகடுகளைக் குலைக்க வாய்ப்பு இருப்பதாக நம்பக் காரணங்கள் உள்ளன என்கிறார். இராணுவ ஆய்வுகளின் தொடக்கத்திலிருந்து நிலநடுக்கங்கள் அதிகரித்துள்ளன, ஆனால இது குறித்து பாதுகாப்புத் துறை சாராத மாற்றுக் களங்களில் எந்த வித விவாதங்களும் இன்றி அவை தொடர்கின்றன என்றும் அவர் சொல்கிறார். பூமியையும் அதனது வளங்களையும் இறுதியில் மானுடர்களையும் ஆபத்துக்குள்ளாக்கி இருப்பதற்கு நாமும் நமது வருங்கால சந்ததியினரும் கொடுக்க வேண்டிய விலை பெரிதாகவே இருக்கும்.

இந்த வருடம் ஜுலை மாதத்தில் ஜப்பானின் கோஜு அகிபயாஷி என்பவர், தென்னமெரிக்க நாடான கோஸ்டரீகாவின் தலைநகரான ஸான் ஹோஸெ நகரில் நடந்த பன்னாட்டுப் பெண்கள் கூட்டமைப்புகளின் பன்னாட்டுப் பேரவையில் ஒரு சொற்பொழிவாற்றினார். உணர்ச்சிப் பெருக்கான ஒரு தருணத்தில் அவர் சொன்னார்: 'எங்களால் கதிர்வீச்சுக்கு எதிராய் எங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. அதை முகரவோ பார்க்கவோ இயலவில்லை. கதிர்வீச்சுக்கு ஒரு நிறம் இருக்க வேண்டுமென விரும்புகிறேன், ஏனென்றால் அப்போது எந்தத் திசையில் ஓடவேண்டும் என்பது எமக்குத் தெரியும்.

ரோசலீ பெர்டெல் அவரது புத்தகத்தில், இராணுவம் பூமியையும் அதனது அமைப்புகளையும் யுத்த ஆயு

**கடலின் தூய்மைக்கேடு மற்றும் கோள வெதும்பல் (global warming) போன்றவை கடல்வாழ் உயிரினங்களை அழித்துக்கொண்டிருக்கின்றன. இதன் காரணமாகச் சூழலின் மொத்த இயக்கப் பின்னலும் குலைக்கப்பட்டு கடைசியில் பேரழிவு நிகழக் கூடும். பல வருடங்களாகப் பன்னாட்டு ஆய்வுக் கூட்டங்கள் இவற்றை அலசிக் கொண்டிருக்கையில், அழிவும் அதுபாட்டுக்கு நடந்துகொண்டே இருக்கிறது.**

நுழைக்கப்படும் நச்சுப்பொருட்களை பெர்டெல் மனித உடல் உட்கொண்டு வெளியேற்ற முயலும் உணவல்லாத பொருட்களுடன் ஒப்பிடுகிறார். மனிதர்களால் உருவாக்கப்பட்ட பலவிதமான பொருட்களுடனும் கலக்கும் தன்மை பூமிக்கு இருப்பினும் சிலவிதமான இரசாயனக் கூட்டுகளுக்கும் ஐசோடோப்களுக்கும் இது சாத்தியமில்லாததினால் இவை பூமியின் சமநிலையை நிலை குலைக்க வாய்ப்புண்டு.

இதைத்தவிர இராணுவப் பரிசோதனைகளின் மூலம் பூமியின் வளிமண்டலத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது பூமியின் நுண்ணிய சமநிலையையும், ஜீவலையையும் தடுமாறச் செய்து குலைக்கும் என்று பெர்டெல் எச்சரிக்கிறார். சூரியனின் சிதறல்கள் மற்றும் விண்வெளிக் கூளங்களினின்றும், அபாயகரமான கதிர் வீச்சுகளிலிருந்தும் பூமியைப் பாதுகாக்கும் அடுக்காகிய அயொனஸ்ஃபியர் எனப்படுவதே இத்தகைய

மேல் இன்னொரு துளையை கண்டு பிடித்துள்ளனர். ஓஸோன் படலத்தில் 1மூ இழப்பு 1-3% வரை புறஊதாக் கதிர்வீச்சு பூமிக்கு வந்தடைய வழி வகுக்கும். ஓஸோன் படல இழப்பால் அதிகரிக்கக்கூடிய சருமப் புற்றுநோய் எல்லா உயிர்வகைகளையும் தாக்கும். ஓஸோன் படலத்தில் 20% சுருக்கம் ஏற்படுமானால், மனிதர்களுக்கு புற்றுநோயாக மாறும் ஆற்றல் கொண்ட தோல்கொப்புளங்கள் ஏற்படக்கூடும். குறைபட்ட நோய்தடுப்பாற்றல் சக்தி இதரவகை புற்றுநோய்களுக்கு வழி வகுக்கும்.

1958இல் அமெரிக்க கடற்படை 3 அணுப்பிளவு வகைக் குண்டுகளை தென் அட்லாண்டிக் கடலில் வெடித்தது. வானொலி பரப்பல் மற்றும் ரேடார் செயற்பாடுகளின் விளைவுகளை அறிந்து கொள்வதற்காக 1958இல் மிகுந்த

சார்ந்த ஆராய்ச்சித்திட்டம், இது ஒரு படைசாராத் துறைத் திட்டம் அயொனஸ்ஃபியருள் உயரலை ரேடியோ சக்தியைச செலுத்தும் அலைபரப்பிகளின் அணிவரிசை களைக் கொண்டது.

ஹார்ப் திட்டத்தின் ஒரு குறிக்கோள் - மிகத் தாழ் அதிர்வலைகளை உருவாக்குவதுதான் (ELF அலைகள்). இந்த ஈ எல் எஃப் அலைகள் திரட்சியான பூமியையும், கடல்களையும் ஊடுருவிச் செல்லக் கூடிய ஆற்றல் உள்ளவை. நீரில் ஆழத்தில் மூழ்கி இருக்கும் நீர்மூழ்கிக் கப்பல்களோடு தொடர்பு வைக்க இந்த அதிர்வலைகளை பாதுகாப்புப் படைகள் பயன் படுத்துகின்றன.

இதைப் பயன்படுத்தி குறிப்பிட்ட இலக்குகளை அழிக்க முடியும். வரண்ட பகுதிகளில் பெருமழையை உருவாக்க முடியும், வெள்ளப் பெருக்கால் அவதிபடும் பகுதிகளில் மழையைக் குறைக்க முடியும், சூறாவளிக் காற்றுகளை விருப்பத்துக்குத் திருப்பி விட முடியும், பெரும் புயல்களையும், வருடாந்தர மழைகளையும் மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளிலிருந்து அப்புறப் படுத்த முடியும்.

நிகோலாய் டெஸ்லா எனப்படும் பிரபல விஞ்ஞானி, நவீன மின்னாற்றல் தொழில் நுட்பத்துறையில் இவர் ஒரு முன்னோடி. இவரது ஆராய்ச்சிகள் நவீன மின்காந்த ஆயுதத்தை உருவாக்க உதவியுள்ளன. மின்காந்தவியல் மூலம் நிலநடுக்கங்களை உருவாக்க முடியும் என்னும் சாத்தியத்தை அவர் வாதித்திருக்கிறார். உதாரணமாய், 12 செப்டெம்பர் 1989இல் கலிஃபோர்னியாவில் உள்ள காந்த ஆற்றல் மானிகள் அசாதாரணமான அதிகீழ் அதிர்வலைகளைப் பதிவு செய்தன. இந்த அலைகள் அவற்றின் ஆரம்பச்



தங்களாய் உபயோகித்துக் கொண்டிருக்கிறது என்று விவரிக்கிறார். அவர நிஜத்தை கற்பனையுடன் கலக்கவில்லை. பொறுமையாய் நேரமெடுத்து உண்மைகளை விளக்குகிறார். இப்புத்தகத்தில் அவர் இராணுவப் பரிசோதனைகள் பூமியின் அமைப்புகளை உபயோகித்து உலகை எப்போதும் போர்நிலையில் வைத்திருக்கும் சாத்தியம் உள்ளவை என்கிறார்.

விண்வெளி ஆராய்ச்சித் திட்டங்கள் புதிய மருந்துகள் கண்டுபிடிக்கவும் மற்றும் பூமியின் வரலாறு மற்றும் படிப்படியான பரிணாம மாறுதல்களைப் பற்றிய புதிய கண்டுபிடிப்புகளை உபயோகித்து இதர கோள்கள் மற்றும் சந்திரனின் கனிப்பொருள வளங்களை நாம் வர்த்தகரீதியாய் உபயோகிக்க வழி செய்யும் என்பது இராணுவத்தின் கூற்று. இதில் எவ்வளவு உண்மை? அறிவார்வம் ஓரளவு வரை ஆரோக்கியமானது, ஆனால் இத்தகைய பரிசோதனைகள் பூமி தன் வளங்களை புதுப்பித்துக் கொள்ளும் ஆற்றலுடன் குறுககிடும் பட்சத்தில் கவலை ஏற்படுத்துபவை.

பூமியில் உயிர்களுக்கு






ஜீவாதார மான காற்று, நீர், நிலம் போன்ற அமைப்புகள் வளிமண்டலத்திலும், பூமிக்குக் கீழும் 16 கி.மீ அகலத்தில் நெய்யப்பட்டிருக்கின்றன. பூமியில்

பரிசோத னைகளின் இலக்காகும்.

பூமியின் வளிமண்டலம் என்பது ட்ரோபோஸ்ஃபியர், ஸ்ட்ரேடொஸ்ஃபியர், மீஸொஸ்ஃபியர் மற்றும் அயொனஸ்ஃபியர் என்னும் அடுக்குகளை உடையது. இதற்கு மேல் உள்ளவை வான் ஆலென் பெல்ற்கள் மற்றும் மாக்னெடோஸ்ஃபியர்.

அமெரிக்காவின் அணுச்சோதனைகள் பஸிஃபிக் கடலில் 1946இலும் நெவாடாவில் 1951இலும் ஆரம்பிக்கப்பட்டன. 1956க்குள் அமெரிக்கா 86 அணுகுண்டுகளை வெடித்திருந்தது. சோவியத் ரஷ்யாவும் தன் பங்குக்கு 1956க்குள் 15 குண்டுகளை வெடித்திருந்தது. இங்கிலாந்து 9 குண்டுகளை வெடித்திருக்கிறது. வான் ஆலென் வளையங்களைப் பற்றிக் கண்டறிந்த உடனேயே, அவைகள் பூமியைப் பாதுகாக்க என்ன செய்கின்றன என்பதை அறிந்து கொள்ளும் முன்பாகவே, பரிசோத னைகள் ஆரம்பித்தன. உயர அணு வெடிப்புகள் வான் ஆலென் வளையங்களை சேதப் படுத்தியுள்ளன. அப்போதிலிருந்து கீழ்ப்பட்ட வான் ஆலென் வளையங்கள் இன்னமும் கூட இயல்புநிலைககுத் திரும்பவில்லை. தம்மை திரும்பவும் சமப்படுத்திக் கொள்ள அவற்றுக்கு பல வருடங்களாகலாம். 1945க்கும் 1970க்கும் இடையில் நடந்த 300 மெகாடன் அணுவெடிப்புகளால் ஓஸோன் படலம் 4% அழிக்கப்பட்டுள்ளது என்று 1972இல் கண்டறியப் பட்டுள்ளது.

விஞ்ஞானிகள் அண்டார்டிக்குக்கு

உயரங்களில் அணு வெடிப்புகள் நடத்தப்பட்டன. 1962இல் வளிமண்டலத்தில் அணு சோதனைகள் தொடங்கின.

1963இல் வளிமண்டல அணு சோதனைகளுக்கான தடைகள் ஓரளவு செயல் படுத்தப்பட்டிருப்பினும், பூமிக் கடியில் அணுவெடிப்புகள் ஆய்வாளர்களால் நடத்தப்படுகின்றன. இராணுவ சோதனைகளை நிறைவு செய்ய அதிர்வலைத் தொழில்நுட்பத்தின் மூலம் திண்மையான நிலத்தையே சோதிக்கும் தேவை ஏற்பட்டது என்கிறார் பெர்டெல்.

விஞ்ஞானிகளின் குறிப்பின்படி பூமியின் வெளி மண்டலம் ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் 1 கி.மீ குறைந்து வருகிறது. பூமியினின்று வெளியேறும் வெப்பம் பெரும்பாலும் அதன் மேற்பரப்பில் தங்கி இருக்கிறது; குறைந்த அளவு வெப்பமே வெளிமண்டலத்துக்கு வெளியேறுகிறது. இதன் விளைவுகளைப் பற்றி இப்போதைக்கு தெரியவில்லை. கிரீன்ஹவுஸ் வாயுக்கள் எனப்படும் காபனீரொட்சைட், மெதேன், கந்தகம், நைதரசனீரொட்ஸைட் வழிவரும் வாயுக்கள் மற்றும் க்ளோரோஃப்ளுரோ காபன்கள் இந்த வெம்மைக்குக் காரணமாய் கருதப்படுகின்றன. இராணுவப் பரிசோதனைகள் எந்த அளவுக்கு இத்தகைய சூழல் தடுமாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்ற கேள்வியை பெர்டெல் எழுப்புகிறார்.

HAARP எனப்படும் High Active Aroral Research Project என்பது அயொனஸ்/பியரை

செறிவுக்கு மேல் சுமார் 30 மடங்கு வரை அதிகரித்து ஒக்டோபர் 5ஆம் தேதிக்குள் அடங்கின. மீண்டும் ஒக்டோபர் 17ம் தேதி அன்று பலமான குறிகள் தோன்றின. மூன்று மணி நேரத்துக்குப் பின்ஸான்பிரான் ஸிஸ்கோ நிலநடுக்கம் தோன்றியது.

நிலநடுக்கங்கள் அவ்வப்போது நடந்து கொண்டிருக்கின்றன என்றாலும், சமீபத்தில் அவைகளின் நிகழ்வு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஜப்பானில் இந்த வருடம் நிகழ்ந்த நில நடுக்கம் எல்ஃப் அலைகளின் பின் விளைவோ என்னும் ஐயம் தோன்றுகிறது.

இன்று நாம் எதிர்கொண்டிருக்கும் இக்கட்டான நிலைமையிலிருந்து வெளியேற நாம் செய்ய வேண்டியது இராணுவங்களைப் படைசாராத் துறையின கட்டுப்பாடுக்குள் கொண்டுவருவது தான். ஆயுதக்குறைப்புக்கான உத்திகளைச் செயல்படுத்தி, இராணுவ மற்றும் மனித வளங்களை ஆக்க பூர்வமான், தொடர்ந்து நீடிக்கக்கூடிய வகையான வளர்ச்சியை நோக்கி செலுத்த வேண்டும். எல்லாமே அழிந்து போய் விடவில்லை. இன்னும் நம்பிக்கை அளிககும் வகையில் பல முயற்சிகள் எல்லோருக்கும் ஆரோக்கியமானதொரு கோளை உருவாக்க உதவிக் கொண்டிருக்கின்றன. பூமியும், அதன் வளங்களும் தொடர்ந்து நீடிக்கும் வகை வாழ்வுக்கான தொலைநோக்கு சாத்தியமானதுதான் என்கிறார் பெர்டெல்.

# உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளின் நவீன ஓவியங்கள் கண்காட்சி

(சிகரம்)

யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை மற்றும் பல்வேறு சுவாரஸ்யமான விடயங்களை தமது கைவண்ணத்தில் ஓவியங்களூடாக காட்டியுள்ளனர் உடுவில் மகளிர் கல்லூரியின் கலைப்பிரிவு மாணவிகள்.

உடுவில் மகளிர் கல்லூரியில் கலைப்பிரிவில் சித்திரத்தை ஒரு பாடமாக கற்கும் ஆறு மாணவிகளின் கைவண்ணத்தில் உருவான ஓவியக் கண்காட்சி கடந்தவாரம் கல்லூரியின் ஆங்கில மொழி கற்கைநெறி மையத்தில் நடைபெற்றது.

சிறுவயது முதல் சித்திரத்தை ஒரு பாடமாக கற்கும் ர.மதுரியா, ஆகபேஷனா, கி.தனேஸ்வரி, க.றுஜானா, சி.பாதுஷா, பூ.டொறத்தி ஆகிய ஆறு மாணவிகளும், தற்போது தாம் காணும் யாழ்ப்பாணத்தையும், தமக்கு தோன்றும் எண்ணங்களையும், சித்திரபாட ஆசிரியர் அருள் ரமேஸின் வழிகாட்டலின் கீழ் ஓவியங்களாக வரைந்துள்ளனர்.

ஒயில் வர்ணங்கள், நீர் வர்ணங்களை பயன்படுத்தி வரைந்த நவீன ஓவியங்கள், கண்ணாடியில் வரைந்த ஓவியங்கள், காகிதத்தாளில் வரைந்த ஓவியங்கள், கண்ணாடிப் பொலித்தீனில் வரைந்த ஓவியங்கள், கண்ணாடி ஓவியங்கள், சீமெந்தில் செய்யப்பட்ட சிற்பங்கள், கழிவுப் பேனைகளைப் பயன்படுத்தி செய்யப்பட்ட காட்சிகள் மற்றும் நிஜமான பொருட்களை பயன்படுத்தி ஆக்கப்பட்ட பொருட்கூட்டங்கள் என்பனவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

நவீன ஓவியங்களாக தற்போது ஆண்கள் பெண்கள் இருவரும் சமமானவர்கள், கருவில் இருக்கும் குழந்தையின் உலகம், யேசுவை வைத்திருக்கும் மரியா, அழகிய நாட்டிய நங்கை, காதல் செய்யும் காதலர்கள், ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் போன்றன பொலித்தீன் தாள்களில் வரையப்பட்டுள்ளதுடன், சில கண்ணாடி ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நூற்றாண்டை பிரதிபலிக்க கூடியதாகவே ஓவியங்களை வரைந்துள்ளதாக மாணவி பூ.டொறத்தி தெரிவித்தார்.

அத்துடன், தனேஸ்வரி என்ற மாணவியின் ஓவியங்கள் அனைத்தும், யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தை பிரதிபலிப்பவையாக அமைந்திருந்தன. அந்தவகையில், யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தை பிரதிபலிக்கக் கூடிய '2012 யாழ்ப்பாணம்' என்ற ஓவியம் பலரதும் பாராட்டைப் பெற்றது.

இவர்களது படைப்புக்கள் யாவும் வருங்காலத்தில் யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களிலும் காட்சிப்படுத்தப்படும் எனவும் வடபகுதி



மக்கள் யாரும் தென்பகுதி மக்கள் போன்று சித்திரக கலையை நேசிப்பது இல்லை எனவும் இவர்களை நெறிப்படுத்தும் சித்திரபாட ஆசிரியர் அருள் றமேஸ் குறிப்பிட்டார்.

மாணவி றுஜானாவின் ஓவியங்கள் யாவும் சமூகத்தை பிரதிபலிப்பதாகவும் மனிதர்கள் தங்களுக்கு தோன்றும் எண்ணங்களின் சிந்தனையின் தோன்றல்களை பிரதிபலிப்பதாகவும் அமைந்திருந்தது.

# பொந்துக் கிணறு



(சிகரம்)

அதிகளவான கடற்பரப்பைக் கொண்ட யாழ்.வடமராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு அழகு தரும் அழியா இயற்கை வளங்கள் இன்றும் காணப்படுகின்றன.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பல்வேறு இடப்பெயர்வுகள், அழிவுகள் வந்தபோதும் இந்த இயற்கை வளங்கள் அழியாமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவற்றை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கண்டுகழிக்கின்றனர். அவற்றில் ஒன்று தான் இந்தப் பொந்துக் கிணறு

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திற்கு அருகே அமைந்துள்ள இந்தக் கிணறு மிகவும் பிரசித்தமானது. இந்த இடத்தில் இடிவிழுந்ததால் பொந்துக்கிணறு தோன்றியதாகக் கூறப்படுகின்றது. நிலாவரைக் கிணற்றைப் போன்று இறைக்க இறைக்க நீர் வற்றாமல் இருப்பதுதான் இதன் சிறப்பு.

நாளொன்றுக்கு 42,000 லீற்றர் நீர் தொண்டமனாற்றிலிருந்து வல்வெட்டித்துறை நகரப்பகுதி, பொலிகண்டி, ஊறணி வரையான பகுதிகளுக்கு மக்களின் பாவனைக்காக குழாய் மூலம் 24 நீர்த் தொட்டிகளுக்கு நீர் வழங்கப்படுகின்றது. தொடர்ந்தும் இந்தப் பொந்துக் கிணற்றிலிருந்து நீரை எடுத்துவந்தால் அருகிலுள்ள விவசாயக் கிணறுகளின் நீர்மட்டம் குறை வடையலாம் என அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகின்றனர்.

# மறவன்புலோவில் புதுப்பொலிவுடன் பாரதி சனசமூக நிலையம்



(சிகரம்)

யுத்தத்தால் பாதிப்புக்குள்ளாகி அழிவடைந்த நிலையில் காணப்பட்ட மறவன்புலோ பாரதி சனசமூக நிலையம் வடக்கின் வசந்தத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது.

மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பின்னர் மறவன்புலோ கிராமத்தில் வடக்கின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் படிப்படியாக கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த மீள் எழுச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாக அழிவடைந்த நிலையில் காணப்பட்ட மறவன்புலோ மத்தி பாரதி சனசமூக நிலையம் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது.

வடக்கின் மீள் எழிச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த வேலைத்திட்டத்தினை மறவன்புலோ கிராம அபிவிருத்தி அமைப்பு மேற்கொண்டிருந்தது.

தற்போது புதுப்பொலிவு பெற்றுள்ள பாரதி சனசமூக நிலையமானது இந்தக் கிராமத்தினை விட்டு மக்கள் இடம்பெயர்வதற்கு முன்னரான காலங்களில், பொதுப்பணிகள் பலவற்றை சிறந்த முறையில் ஆற்றி வந்ததுடன், பாலர்பாடசாலை, பத்திரிகைப் பகுதி, நூலகர் பகுதி, சிறுவர் பகுதி என்பனவும் மிகச் சிறந்த முறையில் இந்தச் சனசமூக நிலையத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாண மக்கள் தென்மராட்சிக்கு அடைக்கலம் தேடி வந்தபோது, மறவன்புலோவில் புதிதாக அமைக்கப்பட்ட நிலையிலிருந்த பாரதி சனசமூக நிலையம், சுமார் 8 குடும்பங்களுக்கு அடைக்கலம் வழங்கியதாக அந்த மக்கள் நன்றியுடன் இன்றும் நினைவு கூருகின்றனர்.

# பொன் விளையும் மண் உரும்பிராய்

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே' இது ஒரு பொன்மொழி. ஒவ்வொருவருக்கும் தமது நாட்டைப்போல், தம்மைப் பெற்ற தாயைப் போல் உலகில் சிறப்பும், இன்பமும் தருவது வேறொன்றுமில்லை. ஈழவளத் திருநாட்டின் யாழ்ப்பாண மாநகரில் வீரமும் தியாகமும் உள்ள கிராமம் என்றால் அது உரும்பிராயையே குறிக்கும். ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு ஊருக்கும் அவற்றிற்கென தனிச் சிறப்புக்கள் இருககின்றன. அதேபோல்த்தான் நான் பிறந்த உரும்பிராய் மண்ணுக்கும் தனிச் சிறப்புக்கள் இருக்கின்றன.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்கு திசைகளைப்போல் எமது உரும்பிராய் மண்ணும் நான்கு கோணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. கிழக்கு மேற்காக ஓடும் கோப்பாய் வீதியும், வடக்குத் தெற்காக ஓடும் பலாலி வீதியும் எம்மண்ணை நடுவே ஊடறுத்துச் செல்கின்றன. கோப்பாய், நீர்வேலி, அச்செளு, போயிட்டி, ஊரெளு, சுன்னாகம், இணுவில், கோண்டாவில் என்கின்ற ஊர்கள் எம் ஊரைச் சுற்றி அமைந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்திற்கும், காங்கேசன்துறைக்கும் நடுவில் எம் உரும்பிராய் மண் அமைந்திருப்பதும் அதற்கு ஓர் சிறப்பாகும். பெரும்பாலான சைவத்தமிழர்களைக் கொண்ட உரும்பிராய் மண் பல காலத்தால் முந்திய ஆலயங்களைக் கொண்டுள்ளது என்றால் மிகையாகாது. உதாரணமாக கருணாகரப்பிள்ளையரர் கோவிலை சொல்லலாம். அதை மற்றும் பல கோவில்களை கொண்டது இந்த உரும்பிராய் மண்.

இவ்வூரின் மேற்கு எல்லைக்கு அருகில் பிள்ளையார், முருகன், அம்மன் ஆகிய கடவுளர்களுக்கான மூன்று கோயில்கள் அருகருகே அமைந்துள்ளன. இவற்றுள் கருணாகரப் பிள்ளையார் கோயில், காலத்தால் முந்தியது. கருணாகரத் தொண்டைமானால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

இவற்றைவிட, கற்பகப் பிள்ளையார் கோயில், ஞான வைரவர் கோயில், என்பனவும் இங்கேயுள்ளன. ஆண்டு தோறும் ஆடு,கோழி ஆகியவற்றைப் பலி கொடுத்து விழாவெடுக்கும் வழக்கத்தை மிக அண்மைக்காலம் வரை கொண்டிருந்ததும், யாழ். மாவட்டத்தில் பரவலாக அறியப்பட்டதுமான காட்டு வைரவர் கோயிலும் இங்கேதான் அமைந்துள்ளது. கோயில்களில் விலங்குகளைப் பலி கொடுப்பதை அரசு தடை செய்ததனால் இவ் வழக்கம் கைவிடப்பட்டது.

பல பண்டிதர்களையும், கல்விமான்களையும் தன்னகத்தே கொண்டது உரும்பிபராய் மண்ணாகும். உரும்பிராய் மண்னுக்கு பெருமை சேர்க்கும் மற்றோரு விடயம், உரும்பிராய் இந்துக்கல்லூரி. உரும்பிராயில் இப்போது பல பாடசாலைகள் இருககின்றன. தாய் தமிழின் மேல் தாளாத பற்றுக்கொண்ட ஆறுமுக நாவலர் ஆரம்பித்த பாடசாலை யாழ். இந்துக் கல்லூரி. முதலாம் உலக மகா யுத்தத்தின் போது இதன் கிளைகளில் ஒன்றாக எமது உரும்பிராய் இந்துக்கல்லூரியும் இருந்தது என்ற பெருமையும் இதற்குண்டு. இப்போது பல கல்விமான்களை உருவாக்கிய பெருமிதத்தோடு தலை நிமிர்ந்து நிற்கின்றது. யாழ்நாகரிலேயே சற்ற பெரிய பாடசாலைகளில் இதுவும் ஒன்று எனலாம். பல கல்விமான்களை உருவாக்கிய பெருமையும், உருவாக்கி கொண்டிருக்கின்ற பெருமையும் இப்பாடசாலைக்குச்சேரும்.

உரும்பிராய் மண் காலில் பட்டால் அந்த சிவப்பு நிறம் உடனே ஒட்டிக்கொள்ளும். அதேபோல் எமது மண்ணில் கலடி எடுத்து வைத்தவர்களை ஒரு போதும் கைவிட்டதாக சரித்திரமே இல்லை. வியாபாரம் செய்ய வருவோர் வேலை பரர்க்க வருவோர், குடியிருக்க வருவோர் கும்மாளம் அடிக்க வருவோர், கல்வி கற்க வருவோர் கல்வி கற்பிக்க வூருவோர், சுற்றியிருக்கும் ஊர்களிலிருந்தும், பல கல் தொலைவிலிருக்கும் ஊர்களிலிருந்தும் மக்கள்



- ரமா

தினமும் வந்துகொண்டேயிருப்பார்கள். எமது ஊரான உரும்பிராயும், உரும்பிராய் மண்ணில் பிறந்த மக் களில் பலரும் உலகப் புகழ் பெற்றவர்கள். இவர் களைப் பெற்றதினால் நிலவளமும், நீர்வளமும், பொருள்வளமும் கொண்ட எமது மண், புகழ்வள மும் கொண்டு பெருமை கொள்கின்றது.

நீர்வளமும் நிலவளமும் உழைப்பாளிகளையும் தன்னகத்தே கொண்ட உரும்பிராய் மண்ணின் விவசாயமே முண்ணனி வகிக்கின்றது. மரவள்ளிக் கிழங்கு, வாழை போன்ற பிரதான உற்பத்திகளும் அது தவிர இணை காய்,கறி வகைகளையும் உரும்பிராய் மக்கள் பயிரிடுவது வழமை. அது போல புதிதாக அறிமுகப்படுத்தும் தானிய வகைகளை பயிரிட்டு வெற்றியீட்டுவதிலும் உரும்பிராய் மண் சளைத்ததல்ல. 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் உரும்பிராயில் திராட்சை, உருளைக்கிழங்கு என்பன பயிரிடப்பட்டு வெற்றியீட்டப்பட்டது இங்கே நினைவு கூரத்தக்கது.

பொன் விளையும் பூமி எங்கள் உரும்பிராய். மண்ணை நம்பி வாழும் விவசாயிகளால் எப்போதும பசுமையாகவே காட்சியளிக்கும். கரிய பனைகளும், உயரிய தென்னைகளும், இன்னருங்கனிச் சோலைகளும், இனிய நீர்ச் சுனைகளும் இங்கே ஆயிரமாயிரம். ஊரெங்கும் பரந்திருக்கும் வழிபாட்டுத்தலங்களும், கல்விக்கூடங்களும் காரியாலயங்களும், வியாபார நிலையங்களும், விளையாட்டுத் திடல்களும் எம்மவரின் திறன்களைப் பறைசாற்றி நிற்கின்றன.

# இந்தியாவுடன் நட்புறவை அரசாங்கம் பேணவேண்டும்



(கொழும்பு)

இலங்கையின் இராஜதந்திர நட்புறவின் அடித்தளமே இந்தியாவாகும். எனவே அந்நாட்டுடன் நட்புறவைப் பேண முடியாத அரசாங்கம் எவ்வாறு ஏனைய நாடுகளுடன் நட்புறவை பேணப் போகின்றது என்று ஐ. தே.க.கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெ-ல்ல கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

அதேவேளை, அரசாங்கம் தமிழ்க் கட்சிகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் இணக்கப்பாட்டிற்கு ஐ.தே.க. பூரண ஆதரவை வழங்கு மென்றும் தெரிவித்தார்.

இலங்கையின் இராஜதந்திரம் இந்தியாவுடனான நட்புறவுடனேயே பின்னிப் பிணைந்து இருப்பதோடு இரு நாட்டு நட்புறவுக்கும் அடித்தளமாகவும் அமைந்துள்ளது.

ஒவ்வொரு ஆட்சியாளர்களும் இதனையே கடைப்பிடித்து வந்துள்ளனர். ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இந்தியாவுடன் நட்புறவை பேணுவதில் தோல்வி கண்டுள்ளது.

இவ்வாறானதோர் நிலையில் எப்படி ஏனைய உலக நாடுகளுடன் இந்த அரசாங்கத்தால் நட்புறவைப் பேண முடியும். ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டுடனும் சிறந்த நட்புறவு காணப்பட்டது.

எனவே தான் எமது நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகள் அங்கு தடை செய்யப்பட்டன.

இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு அரசியல் காய் நகர்த்தல்களை முன்னெடுக்க வேண்டும்.


அரசியல் தீர்வு பற்றி இந்தியா உட்பட சர்வதேச நாடுகளிலும் உள் நாட்டிலும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென்ற அழுத்தம் அதிகாரித்துள்ளது.

ஆனால் அரசாங்கம் அது தொடர்பில் கவனம் செலுத்துவதாயில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையிலான தமிழ் அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு பேசசுக்களை நடத்தி காணப்படும்.

இணக்கப்பாட்டுடனான தர்வுக்கு ஐ. தே. க. பூரண ஆதரவை வழங்கும் என்றார்.

# அவுஸ்திரேலியா செல்ல முயன்ற இருவர் திருமலையில் கைது



(சாவகச்சேரி)

திருகோணமலை, சாம்பல்தீவிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு காத்திருந்ததாகத் தெரிவிக்கப்படும் ஆண்கள் இருவர் நேற்று திங்கட்கிழமை இரவு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். டிராக்டர் வண்டியொன்றுடன் அதன் சாரதியும் மற்றுமொரு நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களிடமிருந்து 8 சோடி செருப்புக்களும் உலர் உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். இச்சந்தேக நபர்களிடம் உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுவருகின்றனர்.

# அரசாங்கத்தின் முடிவின் ஆரம்பமாக மாகாணத் தேர்தல்கள் அமையும்

## என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அரசாங்கம் நீண்டகாலத்திற்கு நீடித்திருக்கமாட்டாது எனவும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்கள் அரசாங்கத்தின் முடிவின் ஆரம்பமாக இருக்கும் எனவும் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் பணத்தை அரசாங்கம் வீணாக்குவதுடன், அதிகூடிய வாழ்க்கைச் செலவை அவர்கள் மீது சுமத்தியுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

மக்களின் மீது பாரிய சுமை சுமத்தப்பட்டுள்ளதுடன், பொது மக்களின் பணத்தையும் அரசாங்கம் வீணடிக்கின்றது. இதன் காரணமாக அரசாங்கம் தோல்வியடைய நீண்டநேரம் ஆகாது. மாகாணசபைத் தேர்தல்கள் மூலம் கசப்பான பாடத்தைக் கற்றுக்கொள்ளும்.

இலங்கையர்கள் எதிர்நோககும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக, கஷ்டப்படுகின்ற மக்களுக்கு போதியளவான நிவாரணங்களை வழங்குவதற்கோ அல்லது அவர்களின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கோ அரசாங்கம் தவறிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுப்பார்கள் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாகவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# அலுக்கோசு பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை சிறைச்சாலை திணைக்களத்தில் வெற்றிடங்களாகவுள்ள மரண தண்டனையை நிறைவேற்றும் இரண்டு பணியாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 11 ஆம் திகதி கோரவிருப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பீ.டப்ளியூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இந்தப் பதவிக்காக 150 பேர் விண்ணப்பித்துள்ளனர். இந்த விண்ணப்பதாரிகளில் இரண்டு பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை சிறையில் 200 இற்கும் மேற்பட்ட மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் இருப்பதுடன் அவர்களில் பலர் தண்டனையை எதிர்த்து மேன் முறையீடு செய்துள்ளனர்.

# அதிவேக வீதியில் பயணித்த வானில் திடீர் தீ விபத்து

(சாவகச்சேரி)

தெற்கு அதிவேக வீதியில் காலியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிந்த வான் ஒன்று களனிகம 12.6 ஆம் கட்டை பகுதியில் திடீர் தீ விபத்துக்கு உள்ளானது.

இத் தீ விபத்தால் வான் முழுமையாகச் சேதமடைந்துள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை 6.20 அளவில் இடம்பெற்ற இத்தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. வானில் பயணித்த இருவர் காயங்கள் எதுவுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

எனினும் விபத்து குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

# புற்றுநோயாளர்களை திருப்பியனுப்பிய வைத்தியசாலை

(கொழும்பு)

வவுனியா பொது வைத்தியசாலையில் மாதாந்தம் இரண்டாவது செவ்வாய்க்கிழமை இடம்பெறும் புற்றுநோய் சிகிச்சைக்காக மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா ஆகிய பிரதேசங்களிலிருந்து வருகைதந்த 80 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் வைத்திய கலாநிதி வராமையினால் திருப்பி அனுப்பப்பட்ட துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புற்றுநோய் சிகிச்சைக்காக வருகைதரும் வைத்தியகலாநிதி ஜெயக்குமார் வருகை தராமையினால் தம்மை திரும்பி செல்லுமாறும் எதிர்வரும் மாதம் இரண்டாவது செவ்வாய்கிழமை சிகிச்சைக்கு வருமாறு தெரிவித்துள்ளதாகவும் நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக திருகோணமலையில் இருந்து வருகை தந்திருந்த ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

எனது மனைவிக்கு புற்றுநோய்க்கான சிகிச்சை பெற இங்கு வந்தேன் எனினும் வைத்தியர் வராமையினால் என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் உள்ளேன். யாழ்ப்பாணம் சென்று வெள்ளிமற்றும் சனி ஆகிய தினங்களில் சிகிச்சை பெற முடியும் என தெரிவித்தனர். ஆனால் மனைவிக்கு மருந்துகள் நிறைவடைந்து விட்டது. எனவே அவசரமாக மருந்துகளைப் பெறுவதற்கு வைத்தியரைக் காணவேண்டியுள்ளது. அதற்கு என்ன செய்வதென்று புரியாதுள்ளது என தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவை சேர்ந்த பெண்ணொருவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவில் இருந்து காலை 6 மணிக்கே வைத்திசாலைக்கு வந்துவிட்டோம் எனினும் 9 மணியளவில் வைத்தியர் வரமாட்டார் என தொவித்துள்ளனர். நாங்கள் பாராதூரமான நோயாளர்களாக இருப்பதனால் சிகிச்சையை தொடர்ச்சியாக பெறவேண்டும். எனினும் வைத்தியர் வராமையினால் ஏமாற்றதுடன் செல்லவேண்டியுள்ளது என தெரிவித்தார்.

இது தொடர்பில் வவுனியா பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர் தெரிவிக்கையில்,

புற்றுநோய் சிகிச்சைக்காக வருகை தரும் வைத்திய நிபுணர் தான் இம் முறை சமுகமளிக் முடியாதென தெரிவித்துள்ளார். தனக்கான விசாரணைகள் முடிவடைந்து யாழ் வைத்தியசாலை பணிப்பாளருடனான பிரச்சினைகள் தீரும் வரையில் சிகிச்சைக்காக வவுனியாவிற்கு வருகை தரமுடியாதிருப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் சிகிச்சைக்கான வரமுடியுமெனவும் வைத்தியசாலைக்கு தெரிவித்திருப்பதாக கூறினார்.

புற்றுநோய்க்கான சிகிச்சையினை அநுராதபுரம் வைத்தியசாலையிலும் பெறக்கூடியதாகவுள்ளதால் நோயாளர்கள் தேவையின் பொருட்டு அங்கு செல்லமுடியுமெனவும் அவர் தெரிவித்தார். (160)

# பாலியல் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்து வரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த குற்றவாளிகளுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து இலங்கை கவனம் செலுத்தியுள்ளது.

புதிய சட்ட ஏற்பாடுகள் குறித்து நீதி அமைச்சுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக சிறுவர் மறறும் மகளிர் விவகார அமைச்சின் பதில் செயலாளர் அசோக அலவத்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புக்காக 1998 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கக்கூடிய தண்டனைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் தற்போது அதிகரித்துச் செல்லும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த ஒரே வழி, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்குதலாகும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் இந்த வருடத்தில் இது வரை 20,000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் பதிவாகியுள்ளன.

இதேவேளை, பாலியல் குற்றம் சுமத்தப்படுபவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சு கெஹலிய ரம்புக்வெல குறிபபிட்டுள்ளார்.

பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 975 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

Grade - 12

GIT

நேரம் :
2 மணித்தியாலம்

க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper

கல்வி முரசு


| 02 | T | II |
|---|---|---|

A.J. Nimalrajan
(mcse, ccna)

(சென்றவாரத் தொடர்ச்சி).....

**3.**
a) Find the decimal equivalent of the binary number 10001100

b) Let A,B and C be the inputs to the following logic circuit and X be the output




(1) Find a Boolean exproession for the output x in terms of inputs A,B and C
2) Simplify the above Boolean exproession for the output x using laws in Boolean algebra

c) Find the octal equivalent of the hexadecimal number EF4

**4.**
a) What is meant by ' event - driven' in Visual Basic?
..................................................................................
..................................................................................

b) Name 3 features of Visual Basic?
..................................................................................
..................................................................................

c) Name the 3 modes Visual Basic operate in?
..................................................................................
..................................................................................

d) Write a programme in visual Basic to display the words 'Hello world'
..................................................................................
..................................................................................

e) Wbat is the format to declare an array?
..................................................................................
..................................................................................

1. Which generation of computer is still under development
   a. Fourth Generation b. Fifth Generation
   c. Sixth Generation d. Seventh Generation
2. Artificial Intelligence is associated with which generation?
   a. First Generation b. Second Generation
   c. Fifth Generation d. Sixth Generation
3. Which operation is not performed by computer
   a. Inputting b. Processing
   c. Controlling d. Understanding
4. Fifth generation computer is also known as
   a. Knowledge information processing system
   b. Very large scale integration (VLSI)
   c. Both of above d. None of above
5. Central Processing Unit is combination of
   a. Control and storage b. Control and output unit
   c. Arithmetic logic and input unit
   d. Arithmetic logic and control unit
6. The brain of any computer system is
   a. Control Unit b. Arithmetic Logic Unit
   c. Central Processing Unit d. Storage Unit
7. Pick the one that is used for logical operations or comparisons such as less than equal to or greater than.
   a. Arithmetic and Logic Unit b. Control Unit
   c. Both of above d. None of above
8. Analog computer works on the supply of
   a. Continuous electrical pulses
   b. Electrical pulses but not continuous
   c. Magnetic strength
   d. None of the above
9. Digital devices are
   a. Digital Clock b. Automobile speed meter
   c. Clock with a dial and two hands d. All of them
10. The computer that process both analog and digital is called
    a. Analog computer b. Digital computer
    c. Hybrid computer d. Mainframe computer
11. Which of the following are the two main components of the CPU?
    a. Control Unit and Registers
    b. Registers and Main Memory
    c. Control unit and ALU d. ALU and bus
12. The two basic types of record access methods are:
    a. Sequential and random b. Sequential and indexed
    c. Direct and immediate d. Online and real time
13. A disadvantage of the laser printer is
    a. It is quieter than an impact printer
    b. It is very slow
    c. The output is of a lower quality
    d. None of the above
14. Different components n the motherboard of a PC unit are linked together by sets of parallel electrical conducting lines. What are these lines called?
    . Conductors b. Buses
    c. Connectors d. Consecutives
15. The language that the computer can understand and execute is called
    a. Machine language b. Application software
    c. System program d. All of the above
16. Which of the following is used as a primary storage device?
    a. Magnetic drum b. PROM
    c. Floppy disk d. All of these
17. Which of the following memories needs refresh?
    a. SRAM b. DRAM
    c. ROM d. All of above
18. Which of the following devices can be used to directly input printed text?
    a. OCR b. OMR
    c. MICR d. All of above
19. The output quality of a printer is measured by
    a. Dot per cm b. Dots per inch
    c. Dots printed per unit time d. All of above
20. In analog computer
    a. Input is first converted to digital form
    b. Input is never converted to digital form
    c. Output is displayed in digital form
    d. All of the above
21. In MS-Dos 6.22, which part identifies the product uniquely
    a. MS b. DOS
    c. Ms-DOS d. 6.22

22. In Ms-Dos what command you will use to display system date?
a. Date command b. Ver command
c. Disk command d. Format command

23. While working with Ms-Dos which command transfers a specific file from one disk to another?
a. Copy b. Diskcopy
c. Time d. Rename

24. If you don't know the current time, which command will you use to display
a. Copy b. Ver c. Time d. Format

25. Which command divides the surface of the blank disk into sectors and assign a unique address to each one
a. Ver b. Format
c. Fat d. Chkdsk

26. Each time you turn on your computer, it will check on the control file
a. Command.com, io.sys
b. Command.com, date.com, dir.com
c. Command.com, io.sys, msdos.sys d. Chkdsk.exe

27. If you need to duplicate the entire disk, which command will you use? a. Copy b. Diskcopy
c. Chkdsk d. Format

28. Which of the following extensions suggest that the file is a backup copy
a. Bak b. Bas c. Com d. Txt

29. Which command lists the contents of current directory of a disk
a. Copy b. Tree c. Cd d. Dir

30.Only filenames and extensions are to be displayed in wide format, which command you'll use?
a. Dir/w b. Dir a: c. Dir/s d. Dir/b

31. Which of the following is not valid version of MS Office?
A) Office XP B) Office Vista
C) Office 2007 D) None of above

32. You cannot close MS Word application by
A) Choosing File menu then Exit submenu
B) Press Alt+F4
C) Click X button on title bar
D) From File menu choose Close submenu

33. The key F12 opens a
A) Save As dialog box B) Open dialog box
C) Save dialog box D) Close dialog box

34. What is the short cut key to open the Open dialog box?
A) F12 B) Shift F12
C) Alt + F12 D) Ctrl + F12

35. A feature of MS Word that saves the document automatically after certain interval is available on
A) Save tab on Options dialog box B) Save As dialog box
C) Both of above D) None of above

36. Where can you find the horizontal split bar on MS Word screen?
A) On the left of horizontal scroll bar
B) On the right of horizontal scroll bar
C) On the top of vertical scroll bar
D) On the bottom of vertical scroll bar

37. Which of the following is not available on the Ruler of MS Word screen?
A) Tab stop box B) Left Indent
C) Right Indent D) Center Indent
E) All of them are available on ruler

38. What is place to the left of horizontal scroll bar?
A) Tab stop buttons B) View buttons
C) Split buttons D) Indicators
E) None of above

39. Which file starts MS Word?
A) Winword.exe B) Word.exe
C) Msword.exe D) Word2003.exe

40. How many ways you can save a document?
A) 3 B) 4 C) 5 D) 6

41. If you want to keep track of different editions of a document which features will you use?
A) Editions B) Versions
C) Track Change D) All of above

42. Background color or effects applied on a document is not visible in
A) Web layout view B) Print Layout view
C) Reading View D) Print Preview

43. What is a portion of a document in which you set certain page formatting options?
A) Page B) Document
C) Section D) Page Setup

44. Borders can be applied to
A) Cells B) Paragraph
C) Text D) All of above

45. Which of the following is not a type of page margin?
A) Left B) Right C) Center D) Top

46. What is the default left margin in Word 2003 document?
A) 1" B) 1.25" C) 1.5" D) 2"

47. What is gutter margin?
A) Margin that is added to the left margin when printing
B) Margin that is added to right margin when printing
C) Margin that is added to the binding side of page when printing
D) Margin that is added to the outside of the page when printing

48. Portrait and Landscape are
A) Page Orientation B) Paper Size
C) Page Layout D) All of above

49. If you need to change the typeface of a document, which menu will you choose?
A) Edit B) View C) Format D) Tools

50. Which of the following is not a font style?
A) Bold B) Italics C) Regular D) Superscript

51. percentage in Excel?
A) 10 B) 100 C) 300 D) 500

52. The spelling tool is placed on ______ toolbar
A) Standard B) Formatting
C) Drawing D) Reviewing

53. If you need a text to show vertically in a cell. How will you achieve this?
A) Choose Vertical on Text alignment in Format Cells dialog box
B) Choose 90 Degrees in Orientation of Format Cells dialog box
C) Choose Distributed from the Vertical drop down list of Format Cells dialog box
D) Choose Center Across Selection from Horizontal combo box in Format Cells dialog box


54. Can you set 0.5 inch left indentation for a cell in Excel?
A) Excel does not have indentation feature
B) You can specify indentation only if you turn the rulers on
C) Indentation can be set from Format Cells dialog box
D) The indentation can be specified only when printing

55. You can automatically adjust the size of text in a cell if they do not fit in width by
A) Double clicking on the right border of column header
B) From Format choose Columns and then Autofit Selection
C) From Format Cells dialog box mark Shrink to fit check box
D) All of above

(தொடரும்.....)

# பிரணாப்பின் கையெழுத்து விவகாரம்

## உச்ச நீதிமன்றத்திற்கு செல்ல வாய்ப்பு



ஜனாதிபதி வேட்பாளர் பிரணாப் முகர்ஜியின் வேட்பு மனு பிரச்சினையில் தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உச்ச நீதிமன்றத்திற்கு செல்ல பி.ஏ.சங்மா குழுவினர் தயாராக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி சார்பில் பிரணாப் முகர்ஜியும், பா.ஜ.க சார்பில் பி.ஏ.சங்மாவும் போட்டியிடுகின்றனர்.

வேட்பு மனுக்களை தேர்தல் அதிகாரி வி.கே. அக்னி கோத்ரி பரிசீலித்த போது, பிரணாப் முகர்ஜியின் மனுமீது பி.ஏ. சங்மா தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.


நாட்டில் ஆதாயம் தரும் பதவியான இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்து இராஜினாமா செய்ததாக பிரணாப் முகர்ஜியால் அளிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள அவரது கையெழுத்தும், வேட்புமனுவில் உள்ள அவரது கையெழுத்தும் வித்தியாசமாக உள்ளது.

இராஜினாமா கடிதத்தில் உள்ள கையெழுத்து போலியானது. எனவே, பிரணாப் முகர்ஜியின் வேட்புமனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரப்பட்டது. இதை தேர்தல் அதிகாரி அக்னிகோத்ரி ஏற்கவில்லை.

இதையடுத்து பி.ஏ.சங்மா சார்பில் பாரதீய ஜனதா மூத்த தலைவர் சத்யபால் ஜெயின், பிஜு ஜனதாதளம் எம்.பி.பரத்ருஹரி மஹதாப், ஜனதா கட்சி தலைவர் சுப்பி ரமணியசாமி ஆகியோர் தேர்தல் ஆணையர்களை சந்தித்து, பிரணாப் முகர்ஜியின் வேட்பு மனுவை மறுபரிசீலனை செய்ய தேர்தல் அலுவலர் அக்னி கோத்ரிக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி 180 பக்க மனுவை அளித்தனர்.

வேட்புமனுவில் உள்ள பிரணாப் முகர்ஜியின் கையெழுத்தும், அவரது இராஜினாமா கடிதத்தில் உள்ள கையெழுத்தும் வெவ்வேறானவை என்று தடயவியல் நிபுணர் அளித்துள்ள அறிக்கையையும், மனுவுடன் இணைத்துள்ளனர்.

# 250 அடி ஆழ்துளை கிணற்றில் விழுந்த 4 வயது சிறுவன் உயிருடன் மீட்பு



மகாராஷ்டிராவில் 250 அடி ஆழ ஆழ்துளை கிணற்றில் விழுந்த 4 வயது சிறுவனை 4 மணி நேர போரா ட்டத்திற்கு பின்பு மீட்பு குழுவினர் மீட்டுள்ளனர்.

மகாராஷ்டிரா, அகமத் நகரின் ரகூரி கிராமத்தைச் சேர்ந்த மனோஜ் அனுஷா கோர்படே என்ற 4 வயது சிறுவன் நேற்று முன் தினம் மாலை தனது வீட்டருகே விளையாடிக்கொண்டிருந்தார்.

அப்போது அங்குள்ள 250 அடி ஆழ ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்துவிட்டார். இதனை தற்செயலாக பார்த்த அவனது தாய் கூச்சலிட்டுள்ளார்.

பின்னர் உடனடியாக கிராம மக்கள் ஒன்று கூடி, சிறுவனை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து ஜெ.சி.பி. இயந்திரம் வரவழைக்கப்பட்டு, மீட்புக்குழுவினர் 4 மணி நேரம் போராடி மாலை 5.45 மணியளவில் சிறுவனை உயிருடன் மீட்டனர்.

கடந்த மாதம் அரியானாவி ல் மகி என்ற சிறுமி ஆழ்துளை கிணற்றில் விழுந்தார். 86 மணிநேர போராட்டத்திற்கு பின்பு இறந்த நிலையில் மீட் கப்பட்டார். ஆனால் நேற்று முன்தினம் நடந்த சம்பவத்தில் சரியான நேரத்தில் உள்ளூர் வாசிகள் செயல்பட்டதால் அவன் உயிருடன் மீட்கப்பட்டதாக பொ லிஸார் தெரிவித்தனர்.

தற்போது அகமத் நகரில் உள்ள விவேகானந்தா மரு த்துவமனையில் சிகிச் சைக்காக சிறுவன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சுவிஸ் வங்கிகளில் பதுக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கறுப்புப்பணம்

சுவிட்சர்லாந்து வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கிவைத்துள்ள றுப்பு பணத்தின் மதிப்பு ரூபா12,700 கோடி என தகவல் வெளியாகி உள்ளது.

இது சுவிஸ் வங்கிகளில் வெளிநாட்டினரின் மொத்த முதலீட்டில் 0.14% ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


உலகம் முழுவதும் கறுப்பு பணத்திற்கு எதிராக அந்தந்த நாட்டு அரசுகள் கடும் போராட்டத்தில் களமிறங்கியுள்ளன.

இந்தியாவைப் பொறுத் தவரை பா.ஜ.க உட்பட பிரதான அரசியல் கட்சிகளும் சில சமூக அமைப்புகளும் இந்தியர்கள் சுவிஸ் வங்கிகளில் பதுக்கியுள்ள கருப்பு பணத்தை மீட்கவேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றன.

இது போன்ற நடவடிக்கைகள் ஒவ்வொரு நாடுகளிலும் நிலவிவருவதால் கடந்த 4 ஆண்டுகளில் சுவிஸ் வங்கிகளில் வெளிநாட்டினரின் முத லீடு ரூபா 20 இலட்சம் கோடி குறைந்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு இறுதியில் வெளிநாட்டினரின் மொத்த முதலீட்டில் 51 சதவீதம் குறைந்துள்ளது.

சுவிஸ் வங்கிகள் சங்கம் தெரிவித்துள்ள தகவல்படி, 2011 ஆம் ஆண்டு இறுதியில் வங்கிகளில் உள்ள மொத்த சொத்து மதிப்பு ரூபா 302 இலட்சம் கோடி. இதில் 51% வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பணம் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# இந்திய சிறைகளில் உள்ள 428 பாகிஸ்தானியர்கள்



இந்தியாவில் உள்ள சிறைகளில் பாகிஸ்தானைச்சேர்ந்த 81 மீனவர்கள் உட்பட 428 பேர் அடைக்கப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றமான தேசிய அசெம்பிளி கூட்டம் நடந்து வருகிறது.

இக்கூட்டத்தின் போது பாகிஸ்தான் வெளிவிவகாரத் துறை இணை அமைச்சர் மாலிக் அகமது கான் கூறியதவாது: இந் தியா-பாகிஸ் தான் இடையே ஜனவரி மற்றும் ஜுலை மாதங்களில் இரு முறை வரை இருநாட்டு கைதிகள் குறித்த விவரங்கள் வெளியிடப்படும்.

அந்த வகையில் இந்திய சிறைகளில் பாகிஸ்தானைச் சேர்ந்த 428 பேர் உள்ளனர். இவர்களில் 81 பேர் மீனவர்கள் ஆவர்.

மேலும் 18 பேர் தங்களது தண்டனைக் காலத்தை முடித்துவிட்டு விடுதலையாகும் நிலையில் உள்ளனர்.

தற்போது இந்தியா-பாகிஸ்தான் வெளிவிவகார செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதில் தண்டனை காலம் முடிந்த பாகிஸ்தான் கைதிகள் குறித்த விவரங்கள் கேட்கப்பட்டுள்ளது. அவர்கள் முன்னரே விடுதலையாக வாய்ப்புள்ளது என்று கூறினார்.

# உத்தரப்பிரதேச உள்ளாட்சி தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி



உத்தர பிரதேசத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், காங்கிரஸ் கட்சி அடியோடு வழித் தெறியப்பட்டு, படுதோல்வியை சந்தித்துள்ளது.

உ.பி., மாநிலத்தில், கடந்த சட்டசபைத் தேர்தலில், மிகப்பெரிய தோரணையுடன் காங்கிரஸ் போட்டியிட்டும், பரிதாபமாக தோற்றது. இந்நிலையில், சில தினங்களுக்கு முன், அங்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடந்தது. இந்த தேர்தலின் முடிவுகள், நேற்று முன்தினம் வெளியாகியுள்ளன. அதில், காங்கிரஸ் கட்சிக்கு, மரண அடியை அம்மாநில மக்கள் கொடுத்துள்ளனர், அரசியல் அரங்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மொத்தம் உள்ள 12 மாநகராட்சிகளில், அனைத்திலும் காங்கிரஸ் போட்டியிட்டும், ஒன்றில் கூட வெற்றி பெறவில்லை. மாறாக, 10 மாநகராட்சிகளில் பா.ஜ. வெற்றி பெற்றுள்ளது. மீதமுள்ள இரண்டில், சுயேச்சை வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இத்தனைக்கும், பகுஜன் சமாஜ் மற்றும் சமாஜ்வாதி கட்சிகள், களத்திலேயே இல்லாது இருந்தும் கூட, சின்னதொரு வெற்றியைக் கூட, காங்கிரசால் ஈட்ட முடியவில்லை. இந்தத் தோல்வி, எதிர்வரும், 2014ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் பாதிப்பை ஏற்படுத்துமோ என்ற அச்சம், காங்கிரஸ் மேலிடத்தை, கலக்கம் அடையச் செய்துள்ளது.

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஆசீர்வதிக்கப்படும்...

ஊடகசுதந்திரம் துஷ்பிரயோகமாக உதவி செய்வது எந்தவகையிலும் உண்மையான ஊடகவியலாளர்களுக்கு உதவப்போவதில்லை.


ஊடக சுதந்திரத்தின் துஷ்பிரயோகத்தை ஒரு நீதித்துறை தடுத்து நிறுத்த தவறினால் அங்கு அராஜகம் அரங்கேறுவதை அனுமதிப்பதாகவே அது அமையும். பாதிக்கப்பட்டவன் சட்டத்தைத் தன்கையில் எடுக்க முயல்வான். ஊடகவியலாளர்கள் தாக்குதல்களுக்குள்ளாவதை தடுக்கமுடியாது போகும். உண்மையான -- நேர்மை யான - தார்மீகநெறியுள்ள - திறமையான ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் இது கேள்விக் குட்படுத்தும்.

எங்களிடம் பேப்பர் இருக்கிறது, பேனை இருக்கிறது, நாங்கள் என்னவும் எழுதுவோம், ஏதும் எழுதுவோம்,

அது உங்களைப் பாதித்தால் எங்களுக்குக் கவலையில்லை, அது எங்களுடைய '.'.பிரீடம்' என்று ஒருவர் சொல்வது எப்படி நியாயமாகும்?. பாதிக்கப்பட்டவன் எப்போதும் விரல் சூப்பிக்கொண்டிருப்பான் என்று எதிர்பார்க்கலாமா?.

நீதித்துறைச் சுதந்திரத்தில் தலையிட்டுவந்த ஊடகவியலாளர் பெயரில் திரியும் இந்த வியாபாரிகள் இப்போது நீதித்துறையின் கௌரவத்திலும் 'கை நனைக்க' வெளிக்கிட்டுள்ளமை ஆபத்தானதொரு அபாய அறிவிப்பு. எமது மக்களின் எதிர்காலத்தில் அக்கறையுள்ள - சட்ட ஆட்சி - சமாதானம் - ஜனநாயகம் - மனித உரிமைகளில் ஆர்வமுள்ளவர்கள் இவற்றையெல்லாம் தொடர்ந்து அனுமதிக்கப் போகிறார்களா என்பதே இன்று எம் முன்னுள்ள கேள்வி.

# அமெரிக்காவில் கொளுத்தும் வெயில்; கடும் சூறாவளி; 30 பேர் பலி



(வொஷிங்டன்)

அமெரிக்காவில் கடும் வெயிலில் சுருண்டு குழந்தைகள் உள்பட 30 பேர் பலியாகி உள்ளனர். அமெரிக்காவின் பிலடெல்பியா, வாஷிங்டன், செயின்ட் லூயிஸ், இண்டியானாபோலிஸ், லூயிஸ்வில்லி போன்ற பல நகரங்களில் வெயில் சுட்டெரித்து வருகிறது.

இதேவேளை, கடும் சூறாவளி காற்றால் மின் தடையும் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏசியில் இருப்பதற்காக பெரும்பாலான மக்கள் ஷொப்பிங் மால்கள், தியேட்டர்கள், சப்வேகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

பலர் நீச்சல் குளங்களுக்கு படை எடுத்து வருகின்றனர். பொதுவாக அமெரிக்காவில் 100 டிகிரிக்கும் குறைவாகவே வெயில் காணப்படும். இந்த ஆண்டு 104 டிகிரி வரை வெயில் அதிகரித்ததால், இதுவரை 30 பேர் பலியாகி உள்ளனர்.

உலகச் செய்திகள்

# சீனா-அயல்நாடுகள் சர்ச்சை



கிழக்கு சீன கடல் பகுதியில் மக்கள் வசிக்காத எண்ணற்ற தீவுகள் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பாக சீனாவுக்கும் அதன் அயல் நாடுகளுக்கும் இடையே சர்ச்சை நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீவுகளில் எரிவாயு வளம் நிரம்பி இருப்பதாகவும் சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இதனையடுத்து அந்த தீவுகளை விலைக்கு வாங்குவது பற்றி பரிசீலிப்பதாக ஜப்பான் பிரதமர் யோஷிஹிகோ நோடா அறிவித்துள்ளார்.

இதற்கு சீன வெளிவிவகார அமைச்சகம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக அந்தநாட்டுத் தகவல் குறிப்பிடுகின்றது.

அந்த தீவுகள் பல ஆண்டுகளாக சீனாவுக்கு சொந்தமானவை என்றும் அதன் மீதான உரிமையை பாதுகாக்க தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பதாகவும் சீனா வெளிவிவகார அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இத் தீவுகளை யாரும் வாங்கவோ, விற்கவோ அனுமதிக்க இடமளிக்கப்படமாட்டாது எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

# நேரடி ஒளிபரப்பில் களேபரம்



பிரபல தொலைக்காட்சி நிறுவனத்தின் நேரடி விவாத நிகழ்ச்சியின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் சப்பாத்தை கழற்றி எறிந்தது பெரும் பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த ஜோ சாட் என்ற தனியார் தொலைக காட்சியில் சிரியா விவகாரம் குறித்து பேசுவதற்காக நேரடி விவாதம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில், முகமது ஷாவப்கா என்ற நாடாளுமன்ற உறுப்பினரும், மன்சூர் சய்ப் அல்-தி முராட் என்ற அரசியல் பிரமுகரும் பங்கேற்றனர்.

இருவரும் சிரியா விவகாரம் குறித்து விவாதித்துக் கொண்டிருந்த போது, திடீரென தனிப்பட்ட முறையில் வசைபாடத் தொடங்கி விட்டனர்.


நாடாளுமன்ற உறுப்பினரைப் பார்த்து, நீ இத்தாலி உளவுப் படையின் ஏஜெண்டு என்று முராத் கூறினார். இதற்கு, நீ ஒரு ரவுடி என்று கூறியபடி, தனது சப்பாத்தை கழற்றி முராத் மீது எறிந்தார்.

இதனால் அவமானம் அடைந்த முராத், தனக்கு முன்பிருந்த மேஜையை தள்ளிவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினரை நோக்கி துப்பாக்கியை நீட்டினார்.

நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்த தொகுப்பாளர் முகமது ஹபாஷ்நேவுக்கு தர்மசங்கடமாகி விட்டது. அவர் இருவரையும் சமாதானப்படுத்த பெரிதும் போராடினார்.

நிலைமை விபரீதமாவதை உணர்ந்த தொலைக்காட்சி நிர்வாகம், வேறு நிகழ்ச்சிக்கு தாவிவிட்டது

# 115 கிறிஸ்தவ பழங்குடியினர் நைஜீரியாவில் படுகொலை



நைஜீரியாவில் கொல்லப்பட்ட 63 பேரின் இறுதிச் சடங்கில், மர்ம நபர்கள் புகுந்து சரமாரி துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மேலும் 52 பேர் பலியாகியுள்ளனர். இதனால் பதற்றம் அதிகரித்துள்ளது.

நைஜீரியாவில் புலானி பழங்குடியினருக்கும் (முஸ்லிம்கள்) பெரோம்ஸ் பழங்குடியினருக்கும் (கிறிஸ்தவர்கள்) இடையில் தொடர்ந்து இன மோதல் ஏற்பட்டு வருகிறது. மத்திய நைஜீரியாவில் உள்ள கர்குருக் கிராமதுக்குள் புகுந்த புலானி பழங்குடியினர், சரமாரி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 63 பேர் பலியாயினர். அவர்களுடைய இறுதிச் சடங்கு நடந்தது.

அப்போது மீண்டும் புகுந்த கும்பல், இறுதிச் சடங்கில் பங்கேற்றவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். மேலும் மட்சே கிராமத்தில் உள்ள மத போதகர் வீட்டை தீ வைத்து எரித்தனர். அங்கு 50 பேரின் கருகிய உடல்கள் கன்டெடுக்கப்பட்டன. செனட்டர் மற்றும் எம்பி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் எப்படி கொல்லப்பட்டனர் என்று தெரியவில்லை.

இதுகுறித்து விசாரணை நடக்கிறது என்று உள்ளூர் நிர்வாக தலைவர் இமானுவேல் லோமங் தெரிவித்தார். இந்த தாக்குதலை கண்டித்து ஜோஸ் நகர் - அபுஜா செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் வாலிபர்கள் மறியலில் ஈடுபட்டனர். மேலும் அசம்பாவிதம் நடப்பதை தடுக்க பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் நைஜீரியாவில் இன மோதல் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது

# குழந்தையை பையில் வைத்து விமானத்தில் கடத்திய பெற்றோர்



குழந்தைக்கு பாஸ்போர்ட் மற்றும் விசா இல்லாத காரணத்தால் பையில் மறைத்து எடுத்து வந்த தம்பதியரை, ஐக்கிய அரபு எமிரேட் விமானத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

எகிப்து நாட்டிலிருந்து ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள ஷார்ஜாவுக்கு ஒரு தம்பதியர் விமானத்தில் வந்திறங்கினர். இவர்களது விசா மற்றும் பாஸ் போர்ட்டை சோதித்த அதிகாரிகள் அடுத்த கட்டமாக இவர்களது உடைமைகளை சோதித்தனர்.

அப்போது அவர்கள் வைத்திருந்த பையை ஸ்கேன் செய்து பார்த்த போது, அதில் ஒரு குழந்தை இருப்பதை கண்டு பிடித்தனர். இதையடுத்து, அவர்களை விமான நிலைய அதிகாரிகள் கைது செய்து விசாரித்தனர்.

குழந்தைக்கு பாஸ்போர்ட், விசா இல்லாததால் பையில் மறைத்து எடுத்து வந்ததாக அவர்கள் கூறினர். இதனைத் தொடர்ந்து அவர்களிடம் மேலும் விசாரணை நடைபெற்று வருகின்றது.

# மாணவர் விசா கட்டுப்பாடுகளை தளர்த்த இங்கிலாந்து முடிவு



(லண்டன்)

இங்கிலாந்தில் சீன, இந்திய மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் படிக்கின்றனர். இவர்கள் படித்து முடித்தவுடன் வேலை செய்ய வழங்கப்பட்டு வந்த விசா இரத்து செய்யப்பட்டு மேலும் மாணவர் விசாவுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இதனால் இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கு இந்த ஆண்டு வெளிநாட்டு மாணவர்களின் விண்ணப்பங்கள் குறைந்துள்ளன. ஆனால், ஜேர்மனியில் மாணவர் விசாவுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியாகி உள்ளது. மேலும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச தரமுள்ள கல்வி ஜேர்மனியில் வழங்கப்படுகிறது.

இதனால் கடும் போட்டி நிலவுகிறது. வெளிநாட்டு மாணவர்களின் வருகை குறைந்தால் இங்கிலாந்துக்கு வருவாயும் குறைந்துவிடும் என்று பல்கலைக்கழகங்கள் சுட்டிக் காட்டின.

இதையடுத்து மாணவர் விசாவுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்த பிரதமர் டேவிட் கமரூன் அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் வெளிநாட்டு மாணவர்கள் படித்து முடித்தவுடன் 2 ஆண்டு வேலை செய்வதற்கான விசா மீண்டும் வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன

# வெள்ளத்தில் பலியானோர் 171 ஆக உயர்வு ரஷ்யாவில் அரைக்கம்பத்தில் தேசியக்கொடி

ரஷ்யாவில் பலத்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 171ஆக உயர்ந்துள்ளது.

ரஷ்யாவின் தெற்கு பகுதியிலுள்ள கிராஸ்நோடார் பகுதியில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் பலத்த மழையால், பகான்கா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு க்ரிம்ஸ் மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை நேற்று 171 ஆக உயர்ந்தது. 25 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர் மழையால் மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தின் காரணமாக ரயில் மற்றும் சாலை போக்குவரத்து தடைபட்டுள்ளது. வெள்ளம் சூழ்ந்த க்ரிம்ஸ் பகுதிகளை, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் பார்வையிட்டார்.

வெள்ளத்தால் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாஸ்கோவில் உள்ள ஜனாதிபதி கிரெம்ளின் மாளிகையில், தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

கேளிக்கை கொண்டாட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. பிரதமர் மெத்வடேவ் அரசு நிகழ்ச்சிகளை இரத்து செய்து விட்டு வெள்ளப் பகுதிகளை பார்வையிட்டு வருகிறார்.



# புதிய நியமனம் பெற்ற ஆசிரியர்கள் இடமாற்றம் கோரவேண்டாம்

## வடக்கு ஆளுநர் அறிவுரை



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் புதிதாக ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டவர்கள் இரண்டு வருடங்களுக்கு இடமாற்றம் தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்க வேண்டாம் என்று வடமாகாண அளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆசிரியர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற புதிதாக நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், தற்போது வட மாகாணத்திற்கு பெருமளவு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக தீவகம் மற்றும் வன்னிப் பகுதிகளுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டு காலத்தில் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் மகிந்த சிந்தனையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் வடமாகாணத்தில் உள்ள மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும் என்று எமக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆசிரியர்கள் உறுதுணையாக இருப்பீர்கள் என்று நம்புகின்றோம் என்றார்.

புதிதாக நியமனம் வழங்கப்பட்டவர்கள் இடமாற்றம் வழங்குமாறு கோரிக்கைகள் விடுத்து வருகின்றனர். புதிதாக நியமனம் பெற்றவர்கள் இரண்டு வருடங்களுக்கு இடமாற்றம் தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்க வேண்டாம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். அத்துடன் நியமனம் வழங்கப்பட்ட மூன்று ஆண்டுகளின் பின் ஆசிரியர்களின் பெறுபேறுகள் மதிப்பீடு செய்யப்படவுள்ளது. அதற்காக பொறுப்புக்களை ஆசிரியர்கள் தேடி எடுத்து நல்ல பெறுபேறுகளை வழங்க முன்வர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (02)




(வேலணை)

வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய குமாரவேலு சரவணபவானந்தன் தன்னுடைய 37 வருட கால கல்விச் சேவையில் இருந்து நேற்று ஓய்வுபெற்றார்.

ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் தனது சகோதரப் பணியாளர்களுடன் காணப்படுவதைக் காணலாம். (85)

# மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால் கிராமிய மட்ட அபிவிருத்தி நிச்சயம்

மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகத்தான் உங்களுடைய கிராமம் அபிவிருத்தி அடையும் என ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் இராமநாதன் ஐங்கரன் தெரிவித்தார்.

கோப்பாய் மத்தி, வள்ளியம்மன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா நேற்று முன்தினம் சனசமூக நிலையத் தலைவர் நித்தியானந்தம் தலைமையில் இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், உங்களுடைய பிள்ளைகளின் கல்வி மீது அக்கறையுடன் செயற்பட்டு அவர்களை கல்வி கற்க வைப்பது உங்களுடைய கடமை ஆகும். அந்த வகையிலே ஒரு தாயோ, அல்லது தந்தையோ கூலித் தொழிலாளியாக. இருந்தால் உங்களுடைய பிள்ளையும் கூலித்தொழிலாளியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கக் கூடாது, அந்த வகையிலே பெற்றோர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய பிள்ளைகள் மீது அக்கறையுடன் செயற்பட்டு அவர்களை பாடசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

உங்களுடைய பிரதேசத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் பின்னிற்பதில்லை. அந்த வகையிலே உங்களுடைய வீதிகளை புனரமைப்புச் செய்வதுடன்,



உங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கும் நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கிராம உத்தியோகத்தர் பாலசுந்தரம், கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை அதிபர் திருமதி. ஜெயரட்ணராஜா, நாவலர் வித்தியாலய ஓய்வுபெற்ற உபஅதிபரும், சமாதான நீதவானுமான பா.திலகராஜா மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இம்மாணவர்களுக்கான பரிசுப்பொருட்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் அரசியல் அலுவலகத்தால் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### சாரதி அனுமதிப்...

நாயகம் எஸ்.எச். ஹரிச்சந்திர தெரிவிக்கையில் சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிப்பவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் அச்சிடும் நடவடிக்கைகள் தற்போது கொழும்பு வேரஹெரயிலும், கம்பஹா, அநுராதபுரம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் மட்டுமே உள்ளன. வட பகுதியிலுள்ளவர்கள் தமது சாரதி அனுமதி அட்டையைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் போது தற்போது கொழும்பிலிருந்து அனுப்புகின்றனர்.

கம்பஹா, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, குருநாகல் போன்று மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளையும் இணையம் மூலம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இணைய இணைப்பு வேலைகள் பூர்த்தியானதும் அநுராதபுரத்திலிருந்து வடபகுதிக்கான சேவையை ஆரம்பிக்க முடியும்.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டமும் இணையம் மூலமாக இணைக்கப்பட்டதும் அவர்களுக்கும் இலகுவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான நடைமுறை அறிமுகப்படுத்தப்படும். இவ் வாறு ஆணையாளர் நாயகம் எஸ்.எச். ஹரிச்சந்திர தெரிவித்தார்.

### நிமலரூபனின்...

இக்கட்சிகள் குற்றம் சுமத்தின.

இம்மரணம் தொடர்பாக நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில் தமக்கு திருப்தியில்லை எனவும் மீண்டும் பிரேத பரிசோதனை நடத்தப்பட வேண்டுமெனவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் கூறினார்.

நிமலரூபனுக்கு நீதி வழங்கப்பட வேண்டுமெனவும், ஏனைய அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் வலியுறுத்தி சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று சமூகங்களும் ஒன்றிணைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். உயிரிழந்த கைதியின் இறுதிக் கிரியைகளை அவரின் குடும்பத்தினர் விரும்பும் வகையில் நடத்துவதற்காக அவரின் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென முன்னிலை சோஷலிசக் கட்சியின் அரசியற் குழு உறுப்பினர் புபுது ஜாகொட கூறினார்.

மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான இயக்கம் ஆகியன ஏற்பாடு செய்த இந்த ஆர்ப் பாட்டத்தில் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்கள், மதகுருக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### வன்னியில்...

அதிபர் பிரிவுகள், ஏனைய மாவட்டச் செயலகங்களின் ஊடாக உரிய முறைப்படி விளம்பரம் செய்யப்பட்டதுடன், ஒரு தொகுதி வாகனங்கள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டமையும் யாவரும் அறிந்ததே.

இச்சந்தர்ப்பத்தினையும் வழங்கி 31.07.2012 ஆம் திகதிக் குள் உரிமை கோரப்படாத அனைத்து வாகனங்களையும் உரிய சட்ட விதிகளின் கீழ் அரசாங்க நடைமுறைக்கமையவாக ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்திருக்கிறார்.

### அநாகரிக...

தொலைபேசி உரையாடல்கள் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் தமது உடைகளில் சிவப்பு மற்றும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வடிவங்கள் அமைக்கப்பட்ட ஆடைகளை தவிர்துக்கொள்ளு மாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், பெண்கள் சாறி, சுடிதார், நீளப் பாவாடை, சட்டை போன்ற ஆடைகளையும் ஆண்கள் நீளக்காற்சட்டை மற்றும் பொதுவான நிற சேட் போன்றவற்றையும் அணிந்து நீதிமன்ற வளாகத்திற்குள் நுழையுமாறும் நீதிமன்ற நிர்வாகம் கேட்டுக் கொண் டுள்ளது. இத்தகைய செயற்பாட்டிற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### தாயும், மகளும்...

மரணம் கொலையாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

குறித்த வீட்டின் இருவேறு இடங்களிலிருந்து இச்சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதால், இது கொலையாக இருக்கலாம் என கிண்ணியாப் பொலிஸார் தெரிவித்தனர். .சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவர் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் குறித்த வீட்டிலேயே மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மருத்துவர்...

மன்றில் ஆஜராகி இந்த போராட்டத்தை தடுத்தமைக்கான உத்தரவைப் பெற்றமைக்கான விளக்கத்தை எதிர்வரும் 19 ஆம் திகதி தெரியப்படுத்துமாறு யாழ். பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேராவுக்கு யாழ். நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

### நெடுந்தீவில்...

கடற் றொழில், விவசாயம், இந்திய இழுவைப் படகுகள் பொது போக்குவரத்து தொடர்பாகவும் கலந்துரையா டப்பட்டது. அதனைத் தொடர்ந்து உயர்ஸ்தானிகர் நெடுந்தீவின் சுற்றுலாப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்த பின்னர் அங்கிருந்து திரும்பினார்.

# கஞ்சா கடத்தியவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா பொலிஸாரால் 2 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டதுடன் அதனை வைத்திருந்தார் என்ற காரணத்தால் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து வவுனியா வைத்தியசாலையின் பின்புறமாக மேசன் தொழில் செய்பவரிடமிருந்தே மேற்படி கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளது.

தென் பகுதியை சேர்ந்த இவர் சூட்சுமமான முறையில் கட்டட வேலைகளுக்கான உபகரணங்கள் அடங்கிய பையொன்றில் இரண்டு கிலோ நிறையுடைய இக்கஞ்சா பொதிகளை வைத்திருந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

# அவுஸ்ரேலியா நோக்கி பயணித்த இரு படகுகள் கடற்படை வலையில்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கு சட்ட விரோத குடியேற்ற வாசிகளை ஏற்றிச்சென்றதாக சந்தேகிக்கப்படும் இரு படகுகளை திருகோணமலையிலிருந்து 36 கடல்மைல் தொலைவில் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இப்படகில் கடல் வழியாக வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்டவர்களில் 82 இலங்கையர்கள் இருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடற்படையினரால் பிடிக்கப்பட்ட இரு ரோலர் படகுகளை திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு சென்று விசாரணை செய்தபோது 78 ஆண்கள், இரு பெண்கள் மற்றும் இரு சிறுவர்கள் படகில் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது. இவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# கலந்துரையாடல்

வட மாகாணத்திற்கு கடந்த 29ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமனம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் கல்வியற் கல்லூரிகளில் கல்விகற்ற ஆசியரியர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

வட மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் உதயகுமார் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதிச் செயலாளர் விக்னேஸ்வரன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வலயக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (02)

# இளம் பெண் மரணம்; சத்திர சிகிச்சையின் பின் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

வயிற்றுக்குத்துக் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் சத்திரசிகிச்சையின் பின்னர் நேற்று முன்தினம் மரணமடைந்ததாகத் தெரியவருகின்றது.

கிளிநொச்சி மாவட்டம் இராமநாதபுரம் அழகாபுரியைச் சேர்ந்த உதயகுமார் மோகனகுமாரி (வயது-35) என்ற பெண்ணே இவ்வாறு மரணமடைந்ததாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது, கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் குறித்த வயிற்றுக்குத்துக்குக் காரணமாக குறித்த பெண் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைததிய சாலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

அன்றைய தினம் நள்ளிரவு 12.00 மணிக்கு வைத்தியசாலை வைத்தியர்களால் அப்பெண் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் மறுநாள் அதிகாலை 3.00 மணிக்கு சிகிச்சை முடிவுற்று அவர் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும், நினைவு திரும்பிய நிலையில் உறவினர்களுடன், அவர் கதைத்தும் இருக்கின்றார். இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சுகவீனமுற்று அவர இறந்ததாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.(பா)

# மூன்று சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இரண்டு சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை மொத்தமாக 3 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில், வேட்பு மனுத்தாக்கல் இம்மாதம் 12 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையாகும். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் 19 ஆம் திகதி பகல் 12 மணிவரை கட்டுப்பணம் செலுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாலியல் வன்செயல்களை பார்த்துக் கொண்டிருக்காது அரசு



பாலியல் வல்லுறவு குற்றச் செயல்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் மாத்திரமே அக்குற்றச் செயல்கள் தொடர்பில் அரசாங்கத்தை நோக்கி விரல் நீட்ட முடியும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.


யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போது அரசாங்கத்தை நோக்கி விரல் நீட்டிய சிலர் இன்று பாலியல் குற்றச் செயல்கள் தொடர்பிலும் அரசாங்கத்தை நோக்கி விரல் நீட்டுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மஹரகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ச, சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பில் அண்மையில் அரசாங்க கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்களும் தராதரம் பாராமல் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இது குறித்து நடவடிக்கை எடுக்க பாதுகாப்புச் செயலாளர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அதிகாரம் அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் மாத்திரமே அரசாங்கத்தை நோக்கி விரல் நீட்ட முடியும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கில் அரசுகளுக்கு எதிராக மக்கள் ஆயுதம் ஏந்தி வீதியில் இறங்கியது போல் இலங்கை மக்களும் ஆயுதம் ஏந்தி வீதியில் இறங்க வேண்டும் என சிலர் கோரிக்கை விடுத்து மக்களை திசை திருப்ப முனைவதாக அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

# காலியில் பிரதம தேரர் இடைநிறுத்தம்



(கொழும்பு)

காலி மாவட்ட பிரதம சங்கநாயக்க தேரர் பதவியை அஸ்கிரிய மஹா விகாரை இடைநிறுத்தம் செய்துள்ளது. முன்னாள் பிரதம சங்க நாயக்கரான வண. மிகேதுவத்த சுமித்த தேரர கொள்ளைகளுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டதையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் நீதிமன்ற வழக்கு முடியும் வரை இத்தீர்மானம் அமுலில் இருக்கும் எனவும் அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் வண. ஆனமடுவ தம்மதாஸி தேரர் தெரிவித்தார்.

# தனியார் மருத்துவமனைகள் அதிரடிச் சோதனை

தனியார் வைத்தியசாலைகளின் குடிநீர் சுத்தமாயும், மலசல கூடங்கள் சுகாதாரமாகவும் பேணவேண்டும் என பருத்தித்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வைத்தியர் செந்தூரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவ மனைகளுக்கு விஜயம் செய்த வைத்தியர் கே.செந்தூரன் தலைமையிலான குழுவினர் குறித்த வைத்திய சாலைகளின் சுகாதார நிலைமைகளைப் பரிசோதனை செய்ததுடன் அதன் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கிச் சென்றனர். இதன்போது 6 மருத்துவ மனைகள் பரிசோதிககப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கைதி மீது துப்பாக்கிச் சூடு

ஹோமாகம நீதவான் நீதிமன்றிலிருந்து தப்பிச்செல்ல முற்பட்ட கைதியொருவரை நோக்கிப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதால் அக்கைதி காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி கைதி ஹோமகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கான்ஸ்டபிள் படுகாயம்

மிரிஹான பிரதேசத்தில், 119 எனும் அவசர தொலை பேசி இலக்கத்திற்கு விடுக்கப்பட்ட அழைப்பொன்றையடுத்து சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்யச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் துடுப்பு மட்டையொன்றினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளார். மேற்படி கான்ஸ்டபிள் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டள்ளதாகவும் மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பாகிஸ்தான் பிரஜைக்கு நீதிமன்றம் பிடியாணை

வழக்கு விசாரணையொன்றுக்காகக் நீதிமன்றில் ஆஜராகத் தவறிய பாகிஸ்தான் பிரஜையொருவரை கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ண நேற்று உத்தரவிட்டார்.

சீஷெல்ஸில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி இலங்கையர் நால்வரிடம் மோசடி செயததாக மேற்படி பாகிஸ்தான் பிரஜைக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் அவர் தேடப்பட்டு வந்தார். மேற்படி நபர், விஸா காலாவதியான பின் தங்கியிருந்தமைக்காக மிரிஹான தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தப்பிச் சென்றுவிட்டதாகக் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதிமன்றில் தெரிவித்தனர். மேற்படி நபருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்த நீதவான் இது குறித்து அறிக்கையொன்றை தாக்கல் செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளியைப் பெற்ற

## அறுவர் ஜப்பான் பயணம்

2011 இல் நடைபெற்ற 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 6 மாணவர்கள் ஜப்பானில் நடைபெறவுள்ள 24 ஆவது தெற்காசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இன்று ஜப்பான் நாட்டுக்குப் பயணமாகவுள்ளனர்.

195 புள்ளிகளைப் பெற்ற கொழும்பு றோயல் கல்லூரியைச சேர்ந்த சக்கி அகமட், விசாகா கல்லூரியைச் சேர்ந்த ஒசாதி பொன்சேகா, விகாஞ்சி ரணவீர, 194 புள்ளிகளைப் பெற்ற பிபிலையைச் சேர்ந்த இசான் சுமணபால, முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவன் சேதுராகவன் பரமேஸ்வரன், கொழும்பு விசாகா கல்லூரியைச் சேர்ந்த டிநிதி நிபாண்டி ஆகிய 6 பேருமே இந்த மாநாட்டில் கலந்துகொள்ள கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மநாடு நாளை மறுதினம தொடக்கம் 26 ஆம் திக திவரை ஜப்பானில் குக்சோவா என்னுமிடத்தில் நடை பெறவுள் ளது. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை ஜப்பானுக்கு அனுப்பிவைபபதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

# பலாலி, காங்கேசன்துறை பகுதியில் அபிவிருத்திக்காக காணிகள் சுவீகரிப்பு



யாழ். பலாலி விமானப் படைத தளம் மற்றும் காங்கேசந்துறை துறைமுகம் என்பன தற்போது பாரிய அபிவிருத்திகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால், பாதுகாப்பு நடைமுறை கருதி குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்ட காணிப் பிரதேசம் பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகத்தால் சுவீகரிக்கப்படும் என்று யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். குடாநாட்டு மக்களின் காணிகளை சுவீகரித்து அவற்றில் இராணுவ முகாம்களை அமைக்கும் நோக்கம் இல்லை. யுத்தத்தின் போது தனியார் காணிகளில் முகாம்களை அமைத்த இராணுவம், தற்போது அவற்றை மீண்டும் பொது மக்களிடமே கையளித்து வருகின்றது எனவும் அவர குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் உடனான சந்திப்பின் போதே யாழ். கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் கூறியுள்ளதாவது,

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றனர். தற்போது யாழ். குடாநாட்டில் எஞ்சியுள்ள படையினர் அங்குள்ள பொதுமக்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போன்றே தேசிய பாதுகாப்புக்கு இராணுவத்தினர் தேவை அவசியமாகின்றது. அவ்வாறு தேவைப்படும் பகுதியினரே தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ளனர். அவர்களும் எதிர்காலத்தில் குறைக்கப்பட வாய்ப்புண்டு.

எவ்வாறாயினும் 1980களின் ஆரம்பத்தில் ஏற்பட்டதானதொரு நிலைமையை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள இராணுவம் ஒரு போதும் இடமளிக்காது என்று யாழ். கட்டளைத் தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.